இந்து ஒளி

தீபம் 23 சுடர் 4

HINDU OLI

நல்லைக்கந்தன் - செல்வச்சந்நிதிக் கந்தன் - தெல்லிப்பழை துர்க்கையம்பாள் மகோற்சவ சிறப்பிதழ்

விகாரி வருடம் ஆவணி - புரட்டாதி

Aug - Sep 2019

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்

Religious Journal of All Ceylon Hindu Congress

மாமன்றத்தின், மறைந்த தலைவர் அமரர் வே.பாலசுப்பிரமணியம் அவர்களின் இருபத்தெட்டாவது ஆண்டு நினைவு நிகழ்வு, கடந்த 03-08-2019 அன்று, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது

பிரதம விருந்தினரை விழா மண்டபத்திற்குள்
மாமன்றப் பிரதிநிதிகள் வரவேற்றவேளை

மாமன்றத் தலைவர் திரு.மா.தவயோகராஜா. பிரதம விருந்தினர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும்
திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம் ஆகியோர் மங்கலவிளக்கினை ஏற்றிவைக்கின்றனர்.

மாமன்றப் பொருளாளர் திருமதி அ.கயிலாசபிள்ளை. பொதுச் செயலாளர்
திரு.வே.கந்தசாமி ஆகியோர் மங்கலவிளக்கினை ஏற்றிவைக்கின்றனர்.

சக்தி இல்ல மாணவியர் வழங்கும்
இறைவணக்கம்

திருமதிசாந்தி பாலசுப்பிரமணியம்
அவர்கள் அமரரின் படத்திற்கு மாலை
அணிவித்து அஞ்சலி செய்கிறார்

தொடக்கவுரை -
திரு.வே.கந்தசாமி

தலைமையுரை -
திரு. மா.தவயோகராஜா

பிரதம விருந்தினர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்களை மாமன்றத் தலைவரும்
பொதுச் செயலாளரும் பொன்னாடை, சந்தன மாலை அணிவித்துக் கௌரவிக்கின்றனர்.

பிரதம விருந்தினர், பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள், அமரர் வே.பாலசுப்பிரமணியம் அவர்களின் நினைவாக
"வாழ்வின் ஆதாரங்கள்" எனும் தொனிப்பொருளில் நினைவுப்பேருரையினை வழங்குகின்றார்.

நன்றியுரை -
திரு.சி.தனபாலா

உ
சிவமயம்
இந்து ஒளி
தீபம் - 23 சுடர் - 04
விகாரி வருடம் ஆடித் திங்கள் 31 ஆம் நாள் (16-08-2019)

பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

வெள்ளிக் குன்றன்ன விடையான் தன்னை
வில்வலான் வில்வட்டங் காய்ந்தான் தன்னைப்
புள்ளி வரிநாகம் பூண்டான் தன்னைப்
பொன்பிதிர்ந் தன்ன சடையான் தன்னை
வள்ளி வளைத்தோள் முதல்வன் தன்னை
வாரா வுலகருள வல்லான் தன்னை
எள்கவிடு பிச்சை யேற்பான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே

திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை
யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே.

திருவிசைப்பா

தனதன்நற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரர்சே கரனே
நுனகழ லிணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே

திருப்பல்லாண்டு

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியல் இவளே

திருப்புராணம்

முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேயென் மனந்திரித்த இவன்யாரோ வெனநினைந்தார்

திருச்சிற்றம்பலம்

இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகளை இலங்கையில் மீளக்குடியமர்த்தல் அவசியம்.

எம் மண்ணில் ஏற்பட்ட போர்ச்சூழலால் உயிரைக் காப்பதற்காக படகுகள் வழியாக இந்தியாவிற்குச் சென்று அகதிகளாக முகாம்களில் வாழும் எம்மக்களை மீளவும் அழைத்து வந்து அவர்களை இங்கு குடியேற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். பல வருடங்களாக தமிழ்நாடு கடற்கரைசார்ந்த இராமேஸ்வரம், தனுஷ்கோடி மற்றும் மாமல்லபுரம் பகுதிகளில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கி வாழும் அவலம் தொடர்கிறது. அம்மக்களில் பெரும்பாலானவர்கள் இந்து மதம் சார்ந்தவர்கள். இவர்கள் இலங்கைக்கு வருவதற்கு அஞ்சுகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்களின் வீடுகள் போரின்போது தாயகத்தில் முற்றாக அழிந்துவிட்டது. எந்தவிதமான உடமையும் இன்றி தங்கள் உயிரைக் காப்பதற்காக குடும்பம் குடும்பமாக சென்ற இவர்கள் தற்போது இலங்கைக்கு மீள வருவதற்கு எவ்வித ஆவணங்களும் இன்றி அவஸ்தைப்படுகிறார்கள். இவர்கள் விடயத்தில் அரசியல்வாதிகள் மனிதாபிமான நோக்கத்தோடு அக்கறை எடுத்தல் வேண்டும்.

இலங்கை - இந்திய அரசு இவர்களது புனர்வாழ்வு தொடர்பாக உடனடியாக அக்கறை கொள்ளல் அவசியம். வடபகுதியில் மாங்குளம், கிளிநொச்சி, வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் போன்ற இடங்களில் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடுகள் அமைத்து அகதிகளாக இந்தியா சென்ற மக்களுக்கு அவற்றை அன்பளிப்பாக வழங்க உதவ வேண்டும். அவர்களது எதிர்கால வாழ்விற்கான பொருளாதார வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல்வேண்டும். இவ்விடயம் தொடர்பாக உடனடியாக அக்கறை செலுத்தாவிட்டால் இம்மக்களின் வாக்குரிமை யாவும் செயலற்றுப்போய்விடும். வடக்கு கிழக்கில் தமிழ்மக்களின் குடிசனத்தொகை வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. இம் மக்கள் மீளவும் இலங்கையில் வந்து குடியேறுவதனால் இலங்கைத் தமிழர்களின் வளங்கள் சீரிய முறையில் காப்பதற்கும் உதவியாக அமையும். போர் ஓய்ந்து பத்து ஆண்டுகள் பூர்த்தி அடையும் நிலையில் இலங்கை அகதிகள் தொடர்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் போதிய அக்கறை கொள்ளாதமை கவலை அளிக்கிறது. எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் மேலும் குறைவடைவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் போரினால் இறப்பு விகிதம் அதிகரித்ததோடு பிறப்பு விகிதமும் மிகவும் குறைவடைந்தமை பெரும் கவலைக்குரியது. புலம்பெயர் தேசங்களில் சுமார் பத்து இலட்சம் வடக்கு கிழக்கு மக்கள் குடியேறிவிட்டார்கள். அவர்கள் மீளவந்து எம்மண்ணில் குடியேறுவது இனிமேல் எதிர்பார்க்க முடியாதது. இச்சூழ்நிலையில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் ஈழத்து இந்துக்கள் என்பது உண்மையாகும். மதமாற்றங்களாலும் போராலும் அதிகம் பாதிக்கப்பட்டவர்களும் இந்து சமூகத்தவர்கள் தான். இலங்கையில் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் சுமார் பதினொரு இலட்சம் இந்திய தமிழர்கள் இலங்கையை விட்டுச் சென்றமையும் இலங்கைத் தமிழர் வரலாற்றில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்த பதினொரு இலட்சம் தமிழர்களும் இந்து சமயத்தவர்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மையே. அவர்கள் தாயகம் செல்லாமல் இலங்கையில் இருந்திருப்பார்களேயானால் இன்று இலங்கையில் இந்துக்களின் தொகை பன்மடங்கு அதிகரித்திருக்கும் என்பதை மறுக்கமுடியாது.

வாழ்த்து

வாழ்கவே வாழ்க வென்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே!

(திருமந்திரம்)

இந்தச் சுடரில்...

❖ பஞ்ச புராணம் 1
❖ ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
❖ ஈழத்தமிழரின் பண்பாட்டுத் தலைநகர் 'நல்லூர் இராசதானி' 5
❖ நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் ஷண்முகர் சந்நிதிக்கு, சுவர்ண விமானம் 6
❖ வையகத்தை உய்ய வைப்போன்! வைதாரையும் வாழ வைப்போன்!! 7
❖ "செந்தமிழால் உந்தனுக்கு...." 8
❖ வேதங்களும் தண்டாயுதபாணியின் பெருமையும் 9
❖ அழகன் முருகனின் அற்புதமான பெயர்கள் 11
❖ நல்லைக் கந்தன் திருவூஞ்சல் 12
❖ வேல் விருத்தம் 13
❖ சிந்தனைக்கினிய கந்தபுராணம் 15
❖ மயில் விருத்தம் 19
❖ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் 21
❖ நல்லைக் கந்தா சரணம் சரணம்! 22
❖ யோகர் சுவாமிகளின் கிளிக்கண்ணி 23
❖ "சும்மா இருத்தல்" 24
❖ கதிரைமலை இராச்சியம் 26
❖ போர்த்துக்கேயர் வருகையும் ஈழத்தின் இருண்ட காலமும் 30
❖ ஆவணி - புரட்டாதி மாத விரதங்கள் 33
❖ வேலவனைத் துதித்தால் வேதனைகள் தீரும்! 39
❖ தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தோற்றம் 41
❖ முகஉத்தர இரதத்தில் வினையறுக்க எழுந்தருளும் மாவைக் கந்தசுவாமியார் பேரருள் பொழிக! 43
❖ நல்லைக் கந்தனைக் காதலித்தால் சகலமும் வசமாகும்! 44

இந்து ஒளி | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

நல்லைக்கந்தன், செல்வச் சந்நிதி கந்தன், தெல்லிப்பழை துர்க்கையம்பாள் வருடாந்த மகோற்சவச் சிறப்பிதழ்

ஆனி - ஆடி 2019

ஆசிரியர் குழு : சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி த. முத்துகுமாரசாமி
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்

ஒரு பிரதியின் விலை ரூபா 60.00
வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 360.00 (தபாற் செலவு தனி)
வருடாந்தச் சந்தா (வெளிநாடு) US டொலர் 15

அகில இலங்கை இந்து மாமன்றம்

தலைமையகம்: 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) : 0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk

இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.

HINDU OLI | *Publication of* **HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS**

NALLAI KANTHAN, SELVACHCHANNATHI KANTHAN, TELLIPALAI THURKKAIAMBAL ANNUAL FESTIVALS SPECIAL ISSUE

June - July 2019

Editorial Board : Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. T. Muthukumarasamy
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan

Price Rs. 60.00
Annual Subscription (Inland) Rs. 360.00 (Excluding Postage)
Annual Subscription (Foreign) US $ 15 (Including Postage)

ALL CEYLON HINDU CONGRESS

Head Office: 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
E-Mail : hinducongress@gmail.com

Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk

Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.

ISSN : 2012 - 9645

ஆன்மீகச் சுடரின் அருள்மடல்

சித்தர்கள் உலாவிய அற்புத பூமி நல்லூர்

இலங்கையில் சித்தர்கள் நடமாடிய நல்லூர் கந்தன் ஆலயச் சூழலை எவரும் மறந்துவிட முடியாது. மகாஞானிகள் நல்லூர் கந்தன் வாயிலில் அருள் ஞானம் பெற்றுள்ளார்கள். நல்லூர் சுற்றாடலில் சித்தர்கள், சாதுக்கள், ஞானிகள் பலர் வாசம் செய்த காரணத்தால் பல தர்மகாரியங்கள் உருவாகியிருக்கின்றன. கந்தர் மடம், நாயன்மார்கட்டு போன்ற இடங்களில் பல துறவிகள் வாழ்ந்து சமாதியடைந்துள்ளார்கள். நல்லூர் தேரடியில் வாழ்ந்த செல்லப்பா சுவாமிகள் ஒரு ஞான பரம்பரையை உருவாக்கி விட்டார்.

யோகர் சுவாமிகள் உபதேசம் பெற்ற நல்லூரான் திருவடி அற்புதமானது. யோகர் சுவாமிகள் நற்சிந்தனைப் பாடல்களில் நல்லூர் வீதியின் மகிமையை உணர்வுபூர்வமாக எடுத்துரைத்துள்ளார். நல்லூர் வீதியில் வந்து அமர்ந்தால் ஏதோ ஒரு ஞானம் பிறக்கும் என்பது உண்மை. சித்தர்களின் ஞானச் சுவாசிப்பு நல்லூர் வீதியில் இன்றும் முற்றுப்பெறவில்லை. எவ்வேளையிலும் நல்லூர் வீதியில் முன்பின் தெரியாத பலரைக் காணலாம். தேரடியிலும் வைரவர் வாசலிலும் தன்பாட்டில் இருந்து ஞானப்பார்வையோடு தம்மை அடையாளம் காட்டாமல் இன்றும் பலர் உலாவுகிறார்கள். அவர்களை அறிவதற்கு தவப்பயன் வேண்டும்.

நல்லூர்க் கந்தன் அலங்காரக் கந்தன் மட்டுமல்ல அருள்ஞானக் கந்தன் என்பது சித்தர் வாக்கு. பொன் பொருள் போகம் கேட்பவர்கள் மட்டுமல்ல, நான் யார்? என்னுள்ளம் யார்? இவ்வுலகம் என்ன? எனச் சிந்திப்பவர்கள் நாடி வரும் இடமாகவும் நல்லூர் விளங்குகிறது. நல்லூரான் வீதியில் கால்களை எடுத்து வைப்பவர்கள் மிகக் கவனமாக வையுங்கள். புண்ணிய மகான்கள் உலாவிய பூமி. அற்புதங்கள் நடந்த ஆத்மீக பூமி. எனவே ஆடம்பரங்களைத் தவிர்த்து எங்கள் ஆத்மார்த்த விடுதலைக்கு நல்லூரான் வீதியில் கூடுவோம். வீதியில் இருந்துவிட்டால் வில்லங்கம் ஏதும் எம்மை நாடாது.

எங்கள் வினையை அறுக்கும் சக்தி நல்லூரான் வீதிக்கு உண்டு. செல்லப்பா சுவாமிகள் நல்லூர் வீதி மண்ணை தன் உடலை கழுவுவதற்கு பயன்படுத்தினார். அக அழுக்கையும் புற அழுக்கையும் கழுவும் ஆற்றல் நல்லூர் வீதிப் புழுதிக்கு உண்டு. எனவே நல்லூரான் வீதியை அனைவரும் நாடுங்கள்! நல்ல ஞானத்தை நல்லூரில் பெற்று நலமாய் வாழ்வீர்!

ரிஷி தொண்டுநாதன்

ஓம் சரவணபவ

நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

மகோற்சவச் சிறப்பிதழ்

உலகெங்கும் பரந்து வாழும் பக்தர்க்கருள்புரியும்
நல்லையம்பதிமேவும் வள்ளி தெய்வானை சமேத சண்முகப் பெருமானின்
பொற்பாதம் பணிந்து:

தனந்தா வழுகு சடலந்தா வுலக சகலசுக
வினந்தா வெனவுன்னை வேண்டுகி லேன்இரு தாள்மறவா
மனந்தா நல்லூர்க்கு வரும்வரந் தாவென்று வாழ்த்துகின்றேன்
வனந்தா வியபுன வள்ளிக்கு வாய்த்தநன் மாணிக்கமே

(நல்லையந்தாதி - நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர்)

ஈழமணித் திருநாட்டின் வடபால் அருள்பொழியும் முப்பெரும் முருகத் தலங்களாம் மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, நல்லூர் என்பது சத்தியமே! அத்தகு திருத்தலங்களுளொன்றான நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின், விகாரி வருட வருடாந்தப் பெருந்திருவிழாவினை முன்னிட்டு மலர்ந்துள்ள 'இந்து ஒளி' சிறப்பிதழை வெளியிடும் பாக்கியம் எமக்குக் கிடைத்துள்ளமை பெரும்பேறே! உளமார வேண்டித் துதிக்கும் பக்தர்மேற் கொண்ட காதலால், அவர் வேண்டியதெல்லாம் மனதார அள்ளிக் கொடுக்கும் நல்லூர்க் கந்தசுவாமி தெய்வத்தின் பாதாரவிந்தங்களில் இச்சிறப்பு மலரைச் சார்த்தி வணங்குகின்றோம்.!

வேதாந்தம் சித்தாந்தம் கற்றதனால் என்ன
வேடிக்கைக் கதைகள் பேசினால் என்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே!

அலங்காரக் கந்தனின் வருடாந்தப் பெருவிழா

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் அமாவாசையைத் தொடர்ந்துவரும் சஷ்டி திதியன்று ஆரம்பமாவது வழக்கம். இவ்வருட மகோற்சவப் பெருவிழா இம்மாதம் (ஆகஸ்ட்) 06ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. பத்தாவது நாளாகிய, 15ஆம் திகதியன்று மஞ்சத் திருவிழாவும் 17ஆம் நாளாகிய இம்மாதம் 22ஆம் திகதி மாலை அருணகிரிநாதர் உற்சவமும் நடைபெறுகிறது. 18ஆம் நாளாகிய 23ஆம் திகதி மாலை கார்த்திகைத் திருவிழாவும், 19ஆம் நாளாகிய 24ஆம் திகதி காலை சூர்யோற்சவமும், 20ஆம் நாளாகிய 25ஆம் திகதி காலை சந்தானகோபாலர் உற்சவமும், அதேதினம் மாலை கைலாசவாகன உற்சவமும், 21ஆம் நாளாகிய 26ஆம் திகதி காலை கஜவல்லி மகாவல்லி உற்சவமும், அதேதினம் மாலை வேல்விமானம் எனப்படும் தங்கரதத் திருவிழாவும் நடைபெறவிருக்கின்றன. மகோற்சவத் தொடரின் 22ஆம் நாளாகிய 27ஆம் திகதி காலை தண்டாயுதபாணி உற்சவம் நடைபெறும். இது மாம்பழத் திருவிழா என அழைக்கப்படுகிறது. அதே தினம் மாலை ஒருமுகத் திருவிழாவும், 23ஆம் நாளாகிய 28ஆம் திகதி மாலை சப்பறத் திருவிழாவும், 24ஆம் நாளாகிய 29ஆம் திகதி காலை இரதோற்சவமும், 25ஆம் நாளாகிய 30ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் அதே நாள் மாலை கொடியிறக்கமும், மறுநாள் 31ஆம் திகதியன்று மாலை, முருகன் திருக்கல்யாணத்துடன் பூங்காவன உற்சவமும் நடைபெறவிருக்கின்றன. செப்டம்பர் 1ஆம் திகதி மாலை இடம்பெறும் வைரவர் உற்சவத்துடன் இவ்வருட மகோற்சவப் பெருவிழா நிறைவுபெறுகிறது.

ஈழத்தமிழரின் பண்பாட்டுத் தலைநகர்
'நல்லூர் இராசதானி'

யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் நல்லூர் (நல்ல ஊர்) என்று அழைக்கப்பட்டமை குறிப்பிடற்பாலது. இது தமிழகத்திலுள்ள இடங்களாகிய ஆதிச்ச நல்லூர், சக்கரவர்த்தி நல்லூர், வெண்ணை நல்லூர், சேய் நல்லூர், வீரா நல்லூர், சிறுத்தொண்டர் நல்லூர், கடைய நல்லூர், சிங்க நல்லூர் முதலிய பல இடப்பெயர்களை ஒத்ததாகக் காணப்படுகின்றது. தமிழகத்தின் இத்தகைய இடமொன்றிலிருந்து இங்கு வந்தோர் தமது தாயகப் பெயரை இப்புதிய இடத்திற்குச் சூடியிருக்கலாமென்று கருதவும் இடமுண்டு. யாழ்ப்பாணத்திற்குத் தெற்கே பூநகிரி, திருகோணமலை முதலிய இடங்களிலும் நல்லூர் என்ற பெயர் தாங்கிய ஊர் உண்டு. நல்லூர் இராசதானியின் வடக்கே சட்டநாதர் சிவன்கோயிலும், கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும், தெற்கே கைலாசபிள்ளையார் கோயிலும், மேற்குத் திசையில் விசேடமாகப் போருக்குப் புறப்படும் முன்பு வழிபாட்டிற்கென வீரமாகாளி அம்மன் ஆலயமும் என நான்கு திசைகளிலும் நான்கு பழம்பெரும் ஆலயங்கள் அமைந்து இன்றும் அருள்பொழிந்து கொண்டிருக்கின்றன. நல்லூரிலே உள்ள பழைய பிரதான சிவாலயங்களிலொன்று சட்டநாதர் ஆலயமாகும். தமிழகத்திலே திருஞான சம்பந்தர், முத்துத் தாண்டவர் முதலியோர் பிறந்த சீர்காழியிலும் சட்டநாதர் ஆலயமுண்டு என்பதும் இங்கு ஒப்பிட்டு நோக்கற்பாலது.

இவ்வாறு பலதிறப்பட்ட மூலாதாரங்களைப் பயன்படுத்தியே யாழ்ப்பாண அரசு குறிப்பாக அதன் தலைநகர் நல்லூர் பற்றி ஓரளவாவது அறியக்கூடியதாகவுள்ளது. ஏற்கனவே முக்கியத்துவம் வாய்ந்த ஒருபகுதியாயிருந்து சோழப் பேரரசு தொடர்ந்து ஏற்பட்ட பாண்டியப் பேரரசு ஆட்சிக் காலங்களிலே முக்கியத்துவம் பெற்ற நல்லூர், கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் உதயம் பெற்ற தமிழரசின் தலைநகராகச் சுமார் நான்கு நூற்றாண்டுகளாக விளங்கியுள்ளது. இவ்வரசு இலங்கையிலுள்ள வட பிராந்தியத்திலுள்ள அரசு போலக் காணப்படினும், இதிலிருந்து ஆட்சி புரிந்த அரசர்கள் முழு இலங்கையிலும் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்று வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்விராசதானி அமைந்திருந்த உண்மையான இடத்தையோ அல்லது அதன் விஸ்தீரணத்தையோ பூரணமாக அறியக் கூடிய அளவிற்குத் தொல்லியற் சான்றுகள் கிடைக்கவில்லை. கிடைத்த சான்றுகளை வைத்துக் கொண்டு நோக்கும் போது இவ்விராசதானி தற்போதய நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு முன்னால் உள்ள மூன்று மைல் சுற்றுவட்டத்தினுள் இருந்திருக்கலாம் என்று ஊகிக்க முடிகின்றது. இதன் எல்லைக்குள் வரலாற்றுப் பழமை வாய்ந்த கொழும்புத்துறையும், பண்ணைத் துறையும், அடங்குகின்றன. இதை யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் ஆதாரங்களும் போர்த்துக்கீச ஆசிரியர்களின் குறிப்புக்களும் உறுதிப்படுத்துகின்றன.

இவ்விராசதானியின் அமைப்புப் பற்றி யாழ்ப்பாண வைபவ மாலையில் வரும் வர்ணனை இப்படிச் சொல்கின்றது.

"நாலு மதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்கா விடு
வித்து மாடமாளிகையும் , கூட கோபுரங்களையும்,
பூங்காவையும் பூங்காவன நடுவிலே
ஸ்நான மண்டபமும், முப்படைக் கூபமும் உண்
டாக்கி அக்கூபத்தில் ஜமுனா நதித் தீர்த்தமும்
அழைப்பித்துக் கலந்து விட்டு நீதி மண்டபம்
யானைப் பந்தி , குதிரை லயம், சேனா வீரரிருப்பிடம்
முதலியன கட்டுவித்து - கீழ் திசை வெயிலுகந்த
பிள்ளையார் கோயிலையும் தென் திசைக்குக்
கயிலாய பிள்ளையார் கோயிலையும், வட திசைக்குச்
சட்ட நாதர் கோயில் தையல் நாயகி
அம்மன் கோயில் சாலை விநாயகர் கோயிலையும்
அமைப்பித்தனர்"

இக்கூற்றில் பெருமளவு உண்மையிருக்கலாம் என்பதை பறங்கித்தெரு பிரதான வீதியிலும், குறுக்கு வீதியிலும் உள்ள பல வீடுகள் பழைமையான கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை தமது 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்னும் நூலில், நல்லூர் கோட்டையில் இருந்த கற்சாசனங்கள் இங்குள்ள வீடுகளில் வைத்துக் கட்டப் பட்டிருப்பதாகக் கூறியுள்ளார். இதற்குச் சான்றாக இங்குள்ள பிரதான வீதியில் இருக்கும் தேநீர்க் கடையொன்றின் வாசற் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டொன்றாகும். இக்கல்வெட்டு இன்னொரு கட்டிடத்தின் தூணாகவோ அல்லது கதவு நிலையின் ஒரு பாகமாகவோ இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. ஐந்தரை அடி நீளமும் ஏழு அங்குல அகலமும் கொண்ட இக்கல்வெட்டில் 25 வரிகளில் தமிழ் எழுத்துக்கள் உள்ளன. இதில் 15 வரிகளை மட்டும் தெளிவாக வாசிக்க முடிகிறது. அவற்றிலிருந்து இக்கல்வெட்டு பதினைந்தாம் நூற்றாண்டில் நல்லூரிலிருந்து ஆட்சி புரிந்த ஆறாம் பராக்கிரமபாகுவிற்குரியது என்பது தெரிய வருகிறது.



இந்த அரசனின் ஆட்சி நல்லூரில் இருந்ததென்பதை இலக்கிய ஆதாரங்கள் தெரிவித்திருந்தாலும், அதை உறுதிப்படுத்தக் கிடைத்திருக்கும் ஒரேயொரு சாசனம் இக்கல்வெட்டாகும். இதே போல் நல்லூர் இராசதானிக்குரிய பல கற்சாசனங்களும், கற்றூண்களும் யாழ்ப்பாணக் கோட்டையில் வைத்துக் கட்டப்பட்டிருப்பதாக ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை மேலும் கூறியுள்ளார். அவ்வாறானவை யாழ்ப்பாணக் கோட்டையில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும், கோட்டையின் மேற்குப் பகுதியில் காணப்படும் கற்றூண்களில் ஒன்றில் செதுக்கப்பட்டிருக்கும் நேர்த்தியான தாமரைச் சிற்பம் இக்கூற்றை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

"பறங்கிகள் ஆட்சியினை ஒப்புக்கொண்டு
நல்லூரிற்குள்ளே குடியிருந்து கொண்டு
தங்கள் கருமங்களை நடத்திப் புறக்
கோட்டை மதில்களை இடிப்பித்து அக்
கற்களைக் கொண்டு போய்க் கடல்
ஓரத்திலே சங்கிலியரசன் இடிப்பித்துப்
பரவிவிட்ட தங்கள் கோட்டையை மறுபடி
கோட்டையாகக் கட்டி அதன் கீழ்ப்
புறத்திலே வீடுகளையும் அரசாட்சி
மண்டபங்களையும் கட்டுவித்துக் குடிக
சமீபத்தில் வீடுகட்டி வந்திருக்கும் படி
வசதி பண்ணினார்கள்".

தற்போதைய நல்லூர்ப் பிராந்தியத்தில் யாழ்ப்பாண மன்னர்காலக் கட்டடங்கள் எவையும் முழுமையாக இல்லாவிட்டாலும், அங்குள்ள மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு வளைவு, இராசாவின் தோட்டம், பண்டார மாளிகை, பண்டாரக் குளம் போன்ற பெயர்களும், இவ்விடங்களில் அழிந்த நிலையில் உள்ள கட்டிடச் சிதைவுகளும் அக்கால நல்லூர் இராசதானியை இன்றும் நினைவுபடுத்துவனவாக உள்ளன.

இவ்வரலாற்றுச் சின்னங்கள் சிறிது சிறிதாக அழிந்து கொண்டும் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டும் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகச் செயற்பட்டு அத்தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது சுதேச உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனதும் வேண்டுகோளாக அமைகின்றது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் ஷண்முகர் சந்நிதிக்கு, சுவர்ண விமானம்



நல்லூர் கந்தசுவாமி ஆலய ஷண்முகர் ஸ்வர்ண விமான (தங்கவிமானம் அல்லது பொற்கூரை) கும்பாபிஷேகம் கடந்த 2018ம் ஆண்டு மகோற்சவத்தின் கார்த்திகைத் திருவிழாவான புரட்டாதி மாதம் 2ம் திகதி நடைபெற்றது.

காலை 06 மணியளவில் ஆரம்பமான விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஐந்து பிரதான கும்பங்களைச் சிவாச்சாரியர்கள் ஏந்தி உள்வீதி வலம் வந்து, பொற்கூரை மீதுள்ள கலசங்களுக்குப் பூஜைகள் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று முத்துக்குமார சுவாமி வள்ளி தெய்வானை சமேதரராய் தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி உள்வீதி உலா வந்து, காலை 6.45 மணியளவில் வேத பாராயணம் ஓதி மங்கள இசை ஒலிக்க கலச அபிஷேகம் நடைபெற்றது.

இந்தக் கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்துவதற்கு, தென்னிந்தியாவில் சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் திருக்கோயிலைச் சேர்ந்த ஸ்ரீ சிவஸ்ரீ ஐயப்ப சபேச தீக்ஷிதர் உள்ளிட்ட நான்கு பூஜ்ய ஸ்ரீ தீக்ஷிதர்களும் இன்னும் சில வேத பண்டிதர்களும் வருகை தந்திருந்தனர்.

தமிழகத்தில் சிதம்பரம் நடராஜர் கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயில், திருப்பதி ஸ்ரீரங்கநாதர் கோயில், காஞ்சி காமாட்சியம்மன் கோயில் போன்ற ஆலயங்களில் தங்க விமானங்கள் உள்ளன. இலங்கையில் பொற்கூரை வேய்ந்த முதல் ஆலயம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வையகத்தை உய்ய வைப்போன்! வைதாரையும் வாழ வைப்போன்!!

கனக - மனோகரன் (சட்டத்தரணி)

இந்துக்கள் இந்த உலகினில் எங்கெல்லாம் பரந்து வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் சிறந்து விளங்குவது முருக வழிபாடு. அஃது பரதகண்டத்திலும் பரவலாக இடம்பெறுகிறது. இந்தியாவின் வடபுலத்தில் ஸ்கந்த வழிபாடு இடம்பெறுகிறது. தமிழர்களோ தமிழ்க் கந்தனைக் கைதொழுகின்றார்கள். அழகன் முருகனிடம் ஆசை வைக்கின்றார்கள். அவனும் கோலமயிலோடு மட்டுமல்ல, பைந்தமிழ்ப் பண்பாட்டுக்கோல எழிலோடும் அவர்கட்குக் காட்சி தருகின்றான்.

'முருகு' எனில் அருந்தமிழில் அழகையும் குறிக்கும். இளமையையும் குறிக்கும். அழகில் தமிழும் ஆடாத ஆய்மயில் அசையாத பூந்தளிர் ஓடாத வள கங்கை ஒயிலான இள மங்கை எனலாம். அவள்தான் வாழும் மொழிகளின் வயதான இளமகள். சுந்தரத் தமிழ் அணங்கின் சீர் இளமைத் திறம் தனை வியந்து செயல் மறந்து வாழ்த்தியவர் மனோன்மணிய ஆசிரியர் சுந்தரனார் மட்டுமல்லவே!

தெய்வக் கனலில் கரு ஆனவன்! பொய்கைப் புனலில் உரு ஆனவன்!!

சூரர் குலம் அழிய, தேவர் துயர் அகல, முக்கண்ணன் தனது மூன்றாம் கண் திறக்க, ஆங்கு மூவிரு அனற் பொறிகள் பிறக்க, அவை சரவணப் பொய்கையில் தாமரை மலர்களில் ஆறு திருமுகங்கள் ஆகிப் பின்னர் மூவிரு முகங்கள் உள்ள ஒருதிரு முருகனாக உரு எடுக்கிறது. இவ்வுண்மையை இச்செகத்தார் கச்சிதமாய் அறிந்திடக் கச்சியப்பர் வடித்த கவிதை வரிகள்,

"அருவமும் உருவுமாகி ...
அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய் ...
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக் ...
கருணை கூர் முகங்களாறும் ...
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே ...
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் ...
உலகம் உய்ய."

கலியுகத்தார் கலி அகற்ற வந்த திரிபுரம் எரித்த சிவமைந்தன் கலியுகக் கந்தன் எனும் அழைபெயரும் கொண்டவன்.

கலியுக வரதன்! கவின் தமிழ்க் குமரன்!!

கந்தவேள் கலியுகத்திற்கு மட்டுமல்ல, கவின்தமிழ் உலகிற்கும் தலைவனாக எல்லோராலும் ஏற்கப்படுபவன், ஏற்றியும் போற்றப்படுபவன்.

தமிழரின் தகைசால் வாழ்வு ஒரு மதம் சார் வாழ்வு. தமிழ் மாந்தருள் இல்லறத்தார் அடிமுடி இலானை முழுமுதற் பிரானாக நினைப்பவர்கள். துறவறத்தார் அந்த ஆதி அந்தமிலான் நினைவில் சொந்த பந்தங்களைத் துறப்பவர்கள். இந்த இருசாரார் வாழ்விலும் முருக வழிபாடு அதி முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

அவர்கள் வண்ண மயிலினில் வருவானை அண்ணாமலைப் பெருமாளதும் உண்ணாமுலை உமையாளதும் அரும்பெறல் பேறாக அங்கீகரித்திருக்கிறார்கள். கந்தவேளை எந்தவேளையும் தொழுதால் நொந்த வேளை அந்த வேள் வருவான், அருள் தருவான் என நம்புகின்றார்கள்.

அவர்கள் மனம் உருகி வழிபடும் முருகன், பிரணவ மந்திரத்தின் பொருள் அறியாத பிரமனையே வருத்தியவன். அப்பொருளை மெய்ப்பொருளான அப்பனுக்கே உணர்த்தியவன்.

அவர்களைப் பொறுத்தமட்டில் பரமசிவனும் சிவகுருநாதன். அவன் இளையமகனும் சிவகுருநாதன். முன்னவன் சிவனாகிய குருநாதன், பின்னவன் சிவனுக்கே குருவாய் அமைந்த நாதன்.

சைவப் பெருமக்கள் தொந்திஉள நாயகனை "முந்தி விநாயகன்" என விழிக்கிறார்கள். அவர்களுள் ஒருசாரார் "முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கே" என அளிக்கிறார்கள்.

ஆறு படைவீடு உடையான்! ஆறுதல்தரு பீடு உடையான்!!

தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கில் ஆறுமுகனுக்கு ஆலயங்கள் உண்டு. அவற்றினுள், மேதாவிலாசமும், மேலான அருள்வாசமும் கொண்டமைந்தவை ஆறுபடை வீடுகள். ஆறு தலைமீது கொண்டவன் பரமன். ஆறு படைவீடுகள் கொண்டவன் அவன் குமரன்.

தகப்பன் சாமிக்கு உவப்பான ஒரு மலை சுவாமிமலை. பன்னிரு கையோனின் இன்னோர் இருக்கை திருத்தணிகை. திருத்தணிகையில் தனைப் பணிபவர் துயர் களைகிறான். ஞானப்பழம் நீ என அருகணைவோர்க்கு பழநியில் அருள்மழை பொழிகிறான். திருப்பரங்குன்றில் அவன் சிரிக்கிறான். திருத்தமுள தமிழைத் தினம் ரசிக்கிறான்.

முருகனை "குன்றிருக்கும் இடம் எல்லாம் குடி இருக்கும் குமரன்" என்பர். குன்று தோறாடல் கொண்டிருப்பவன் எங்கள்

குன்றுருவ வேலவன். இந்த மால் மருகன் மலைகளில் ஆசையோடு வீற்றிருக்கின்றான். அதேவேளையில் அலைகடல் ஓசையையும் கேட்டிருக்கின்றான்.

"கடல் ஆடும் இடம் என்றால் கந்தனுக்கும் ஆசை, அவன் வாழும் இடமெல்லாம் அலைகடலின் ஓசை"

பண்ணொடு அமைந்த பாடலடிகள் இவை.

"ஆசை தரும் இன்பம் ஓர் ஆயிரங்கள் கண்டதிலே, ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ?"

என்ற உண்மையை ஓசை நயம் கொண்ட இந்தக் கவிதை வரிகள் ஒப்புறுதி செய்கின்றன.

கூர்வேல் முருகன் திருச்செந்தூர் நகரில் சந்தக் கடல் நீர்த்தி வலைகளில் தான் நனைந்தும் இருக்கின்றான். பக்திப் பரவசக் கடலில் தன் பக்தரை நனைத்தும் இருக்கின்றான்.

கோவில் வீடு ஆனது, வீடும் கோவில் ஆவது

மனிதர் உறையும் மனைகளை வீடுகள் என்கின்றோம். புனிதத் தெய்வங்கள் உறையும் இடங்களைக் கோ+இல்கள் என்கின்றோம். இந்த விதிக்கு விலக்காக ஆறுமுகப் பெருமான் உறைகின்ற ஆறு கோவில்களை ஆறு படைவீடுகள் என்கின்றோம். ஏன்?

"பள்ளித் தலம் அனைத்தும் கோவில் செய்குவோம்."

நாமகள் உறையும் கூடங்களை நான்மாடக் கோவில்களாகக் காண விழைந்தவன் பாரதி என்ற பாட்டுக்கு ஒரு புலவன். பள்ளித்தலங்கள் மட்டுமல்ல தனிமனிதர் அகங்கள்கூடக் கோவில்கள் ஆகிட முடியும். நாம் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வோம் என்னில், எமது உள்ளங்கள் கபடங்கள் இலாத இதய கமலங்கள் ஆக இருக்கும் என்னில், எங்கள் இல்லங்கள் தானங்கள் தர்மங்கள் தங்கும் தடாகங்கள் ஆக நிலைக்கும் என்னில், எங்கள் மங்கையர்கள் மா தவர்களாக இருப்பர் என்னில், அவர்தம் பங்கயக் கைநலம் பாரில்

அறங்கள் வளர்க்கும் என்னில், அன்பினதும் அறத்தினதும் இருப்பிடங்களாக அவர்கள் இருப்பிடங்கள் இருக்கும் என்னில், அங்கு வடிவேலன் வருவான் வள்ளி தெய்வானையோடு உறைவான். மைந்தனைக் காணத் திரிசூலனும் திரிபுரசுந்தரியுடன் வருகை தருவான். மருகன் இடத்து மனையவள் அலைமகளோடு மாலவனும் வந்துபோவான். இந்நிலையில் எங்கள் வீடுகள் கல்லாய் மண்ணாய் கதவாய் நிலையாய் நிமிர்ந்து நிற்கும் வீடுகளாக அல்ல கடவுள்கள் நிசமாய் - நிலையாய் அமர்ந்திருக்கும் கோவில்களாக மாறிவிடும்.

"கோ" கள் வந்தால், உறைந்தால் அந்த இல் எலாம் கோவில்கள் தாமே?

(நன்றி: "கௌமாரம்")

"செந்தமிழால் உந்தனுக்கு...."

செந்தமிழா லுந்தனுக்கு மாலை தொடுத்தேன் - தமிழ்த்
தெய்வமான கந்தனே உன் வீதி படுத்தேன்
சிந்திடு முன் புன்னகையைக் கண்டு ரசித்தேன்
நல்லைத் தேரடியில் வந்துனது காலில் விழுந்தேன்

பாசமுடன் நான் அழைக்க நல்ல வழி காட்டு - உந்தன்
பத்தினிகளோடெனக்கு வந்து முகங் காட்டு
வாசலெங்கும் எரியுதையா உந்தன் விழி காட்டு
இப்போ வள்ளி தெய்வயானையுடன் என்ன விளையாட்டு

நீயிருக்கும் வீதியிலே பேய்கள் இருக்காது
நல்லூர் வீடு தொழுவோர்களுக்கு துன்பம் இருக்காது
வாயிருக்கும் வரையுனையே பாடி ஆடுவேன் -தினம்
வாசலிலே வந்திருந்து உன்னை தேடுவேன்

சந்நிதியில் உந்தனது தேரை எரித்தார்கள் -தமிழ்
தந்தவனே எங்களுக்கு சாவை விதைத்தார்கள்
விண்ணதிரக் குண்டு மழை இன்று பொழிவார்கள்
-எங்கள்
வேலவனே அன்னவர்கள் என்று விழுவார்கள்?

செந்தமிழால் உந்தனுக்கு மாலை தொடுத்தேன் - தமிழ்
தெய்வமான கந்தனே உன் வீதி படுத்தேன்
சிந்தி வரும் புன்னகையைக் கண்டு ரசித்தேன்
நல்லைத் தேரடியில் வந்துனது காலில் விழுந்தேன்"

பாடலை இயற்றியவர்: புதுவை இரத்தினதுரை
பாடியவர்: வர்ணராமேஸ்வரன்
இசை: இசைவாணர் கண்ணன்

வேதங்களும் தண்டாயுதபாணியின் பெருமையும்

('சர்வசாதகர்' எஸ்.ஆர். சுவாமிநாத குருக்கள், சுவாமிமலை)

நிகிருஷ் வைர ஸமாயுதை: காலைரு ஹரித்வ மாபன்னை:|
இந்த்ரா யாஹி ஸஹஸ்ரயுகு அக்னிர் விப்ராஷ்டி வஸன:|
வாயுச்வேதஸிகத்ருக:| ஸம்வத்ஸர: விஷுவர்ணை:|
நித்யாஸ்தேனு சராஸ்தபா| ஸுப்ரஹ்மண்யோஹம்|
ஸுப்ரஹ்மண்யோஹம்| ஸுப்ரஹ்மண்யோம்;|

பரமேஸ்வரனிடமிருந்து முதலாவதாகத் தோன்றியது சுப்ரமண்யமே. **'யாதே ருத்ர சிவா தனூ:"** என்கிறது ருத்ர மந்திரம்.

ஆறெழுத்து சுப்ரமண்ய மந்திரத்தைக் கண்டுபிடித்த காரணத்தினால், சனத்குமரர், அம்மந்திரத்தின் ரிஷியாகக் கூறப்படுகிறார்.

முருகன் பிரும்மமானதினால்தான் வேத மாதாவே அவனைப் பற்றி எதுவும் கூறாமல் 'சுப்பிரமண்யோம்' என்று மும்முறை கூறுவதுடன் நிறுத்தி விடுகிறாள்.

'நமோ ஹிரண்ய பாஹவே ஸேனான்யே'

... என்று ருத்திரத்தில் வருகிறது. 'உள்ளும் புறமுமுள்ள பகைவர்களை அடியோடு அழிக்கும் சேனாபதிக்கு வணக்கம்' என்று இதன் பொருள். இது முருகனையே குறிக்கும் என்று கொள்ளலாம்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, தன் கீதையில் 'படைத்தலைவர்களில் கந்தனாக விளங்குகிறேன்' என்கிறார். ராமாயணத்தின் பால காண்டத்தில் வால்மீகி, விசுவாமித்திரர் வாயிலாகக் கந்தனின் அவதாரப் பெருமையை வெளியிடுகிறார்.

குமார சம்பவஸ் சைவ
தன்ய: புண்யஸ்த தைலச
பக்தஸ்சய: கார்த்திகேயே
காகுஸ்த புவிமானவ:
ஆயுஷ்மான் புத்ர பௌத்ரஸ் ச
ஸ்கந்த ஸாலோக்யதாம் விரஜேத்||

குமரக் கடவுளின் பிறப்பைப் பற்றிப் படிக்கிறவர்களுக்குச் செல்வம் கொழிக்கும். பாவம் அகன்று புண்ணியம் வந்தடையும்.

மகாபாரதத்தில் பல இடங்களில் வீரர்களைப் பற்றிப் பேசும் இடங்களில் எல்லாம் வியாசர் முருகனையே குறிப்பிட்டிருக்கிறார். பீஷ்மர் படைத்தலைமையை ஏற்பதற்கு முன், முருகனை வேண்டிக்கொள்கிறார்.

நமஸ்க்ருத்ய குமாராய
ஸேனான்யே சக்திபாணயே
அஹம் ஸேனாபதிஸ் தேத்ய
பவிஷ்யாமி நஸம் சய:||

அவனே பிரணவப்பொருள்

வேதத்தின் வித்தான ஓம் என்ற பிரணவத்தின் பொருளே சுப்பிரமண்யம்தான்.

'அ' காரோ விஷ்ணு ருத்ரிஷ்ட
'உ' காராஸ்து மகேசுவர:
'ம' காராஸ்து ஸ்ம்ருதோ பிரும்மா
பிரணவஸ்தி த்ரியாத்மக:

அகார உகார மகாரம் இணைந்த பிரணவ ஸ்வரூபம் அவரே. அவரே பிரும்மா விஷ்ணு ருத்ர ஸ்வரூபி. இவரே வேதத்தின் பொருள்.

வேதத்தில் 'ஓம்'

யச் சந்தஸாம் ருஷபோ விஸ்வரூப:
சந்தோப் யோத் யம்ருதாத் ஸம்பூவ;
ஸமேந்த்ரோ மேதயாஸ்ப்ருணோது;
அம்ருதஸ்ய தேவ தாரணோ பூயாஸம்;

சரீரம் மே விசர்ஷணம்:
ஜிஹ்வா மே மதுமத்தமா;
கர்ணாப்யாம் பூரி விச்ருவம்;
பிரஹ்மண: தோஸோஸி மேதயா பஹித:|
ச்ருதம் மே கோபாய||

(தைத்ரீய உபநிஷத்.)

" 'எது வேதங்களுள் சிறந்ததோ, சர்வரூபமாக இருக்கிறதோ, வேதமாகிய அமிருதத்திலிருந்து உண்டாயிற்றோ, அந்த 'ஓம்' எனக்குப் பிரக்ஞையைக் கொடுக்கட்டும்'.

அமிருதத்துவத்திற்கு ஏதுவான பிரம்ம ஞானத்தை நான் தரிசிக்கச் செய்ய வேண்டும். அந்த ஞானத்தைப் பெறத் தகுதியுள்ளதாக, பலமுள்ளதாக, சரீரம் ஆகட்டும். என் வாக்கு இனிதாகட்டும். மதுரமான வார்த்தைகளை எப்போதும் உச்சரிக்கட்டும். என் செவி நல்ல விஷயங்களைக் கேட்கட்டும். ஓம்காரமே! நீ பிரஹ்மத்தின் உறைபோல விளங்குகிறாய். பிரஹ்ம ஞானம் பற்றிய என் அறிவைக் காத்து அருள்வாய். நான் கேட்டதை மறவாமலிருக்கச் செய்வாய்."

'ஓம்' என்ற பதமே மந்திரங்களில் இல்லை. இந்திரன் என்ற பதம் இருக்கிறது. பசுக்கூட்டத்தின் மத்தியில் ரிஷபம் போல மந்திரங்களிடையே சிறந்து விளங்குகிறான். இந்திரன் என்றால் ஓம் காரம் என்பதுதான் அர்த்தம். விசுவரூபம், வேதமாகிய அமிருதத்திலிருந்து எழுந்தது எல்லாம் ஓம் காரத்தையே குறிப்பிடுகிறது.

'ஓம்' காரத்தின் உள்ளொளியாய் விளங்குபவன் முருகன்

'ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகனுருவம் கண்டு' என்கிறார், அருணகிரியார் தன் கந்தரலங்காரத்தில்.

'வேத ஓம் எல்லாம் விளங்க உணர்த்தி' - சிவனுக்கே பிரணவ தத்துவத்தை உபதேசித்தவர் முருகப்பெருமான்.

'அறிவு ஆற்றல் எனும் அயில்வேல் ஏந்தி' - வேல் ஞானத்தின் சின்னம் - இரு மனை தம்மை எமக்கெனப் புணர்ந்த - இச்சா சக்தி, கிரியா சக்தி இருவரையும் தன் மனைவிகளாகக் கொண்டு. விளங்கும் சுப்பிரமணியம், சச்சிதானந்த பூரண பரப்பிரம்மமே. இப் பரப்பிரம்மத்திடம் சரணடைவது மூலம் நாமே பிரம்மமாகி விடலாம். இப்படிப் பிரம்ம சொரூபமாவதே கைவல்ய முக்தி. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்பவன் முருகன்.

இறைவன் அத்துவாக்கள் வடிவமுடையவன் என்பதை,

"அத்துவா மூர்த்தியாக அறைகுவ தென்னை யெனின் … மறைகளெல்லாம்"

… என்கிறது சிவ ஞான சித்தியார்.

பிரம்மத்தின் உறை

பளபளப்பான வாளுக்கு உறை (கவசம்) இருப்பது போல பிரம்மத்திற்கு உறையாக இருக்கிறது ஓங்காரம். ஓங்காரத்தைத் தியானிப்பதும், பிரம்மத்தைத் தியானிப்பதும் ஒன்றே. கமண்டலத்தில் நீர் இருக்கிறது. நீர் தேவைப்படும் போது நீரை எடுத்து வா என்று சொல்வதில்லை, கமண்டலத்தை எடுத்து வா என்கிறோம். இங்கே நீர் பிரம்மம், கமண்டலம் ஓங்காரம். ஓங்காரத்தினுள் பிரம்மம் அடங்கி இருக்கிறது.

முருகக் கடவுள் பற்பல வடிவாய் விளங்கும் நிலையை ஸ்ரீ குமரகுருபரர் தன் கந்தர் கலிவெண்பாவில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே - தாங்கரிய 59
மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப் - பந்தனையால் 60
ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா - வைத்த 61
கலையே அவயவாக் காட்டும்அத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய் - பலகோடி 62
அண்டம் உருவாகி அங்கம் சராசரமாய்க்
கண்டசக்தி மூன்றுட் கரணமாய்த் - தொண்டுபடும் 63
ஆவிப் புலனுக்கு அறிவு அளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே - மேவ 64
வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானம்
தரும்அட்ட யோகத் தவமே - பருவத்து 65

அத்துவாக்கள் மார்க்கம்

மந்திராத்துவாவே இரத்தமாகவும், பதாத்துவாவே முடியாகவும், வர்ணாத்துவாவே தோலாகவும், புவனாத்துவாவே உரோமமாகவும், மற்றய தத்துவங்களே ஏனைய தாதுக்களாகவும், கலாத்துவாவே உறுப்புகளாகவும், பல கோடி அண்டங்கள் உடலாகவும், இச்சா, ஞான, கிரியா சக்திகளே அந்தக்கரணமுமாக முருகன் விளங்குகிறான். சுருங்கக் கூறின் முருகன் எங்கும் எதிலும் விஸ்வரூபியாக விளங்குகிறான் என்கிறார் குமரகுருபரர்.

"ஆறெனும் சமயம் அனைத்தினும் உள்ளார்க்கு
ஆறிரு கரங்களால் அளித்தருள் செய்தும்"

இறைவனை அடைவதற்காக வழிகாட்டும் சமயங்கள் ஆறு வகை என்று சொல்லப்படும். இது காணாபத்யம், சைவம், வைஷ்ணவம், கௌமாரம், சௌரம், சாக்தம் என்பதைக் குறிக்கும்.

நையாயிகம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்ஸை, உத்திரமீமாம்ஸை என்று ஆறு தரிசனங்களையும் குறிக்கும். எல்லாச் சமயங்களைச் சேர்ந்தவர்களையும் முருகன் ஐந்தொழில் புரிந்து காத்து ரட்சிக்கிறார்.

குக மாயை

முருகன் ஞான வடிவானவன். அவனுக்கு 'சித்" என்ற பெயரும் உண்டு. சித் என்னும் குகப் பெருமானின் சக்தியே பிரக்ருதி மாயையாதலின், மாயைக்கு 'சித் சக்தி' 'சித் பிரக்ருதி" 'குக மாயை" என்றெல்லாம் பெயர்கள் உண்டு.

மயில் ஆடும்போது நம் கவனத்தைக் கவருகிறது. அது போல மாயையும் கோடிக் கணக்கான அழகிய பொருள்களோடு கூடிய பிரபஞ்சம் என்னும் தன் தோகையை விரித்து (சிருஷ்டித்து) நர்த்தனம் செய்கிறது. மயில் தோகையை ஒடுக்கிக் கொள்வதே சங்காரம்.

எல்லோரையும் போல முருகன் மாயைக்குக் கட்டுப்படாமல், அதன் மேல் ஏறி அதனை அடக்கி ஆள்கிறார். முருகன் மயிலை வாகனமாகக் கொண்டுள்ள தத்துவம் இதுவே.

"செறிவு உறு சித் மாயையாம் மயில் ஏறி"

பிரும்மா முதல் பிரகிருதி வரையுள்ள எல்லாப் பொருள்களும் மாயையினால் உண்டானவையே. பிரபஞ்ச சிருஷ்டியில் முதலில் மாயையிலிருந்து தோன்றியது நாத தத்துவம். இது ஒலி வடிவானது. இது தோன்றிய பின்பே விந்து முதல் பிருத்வி ஈறாக உள்ள பிரபஞ்சப் பொருள்கள் எல்லாம் தோன்றின.

இந்த நாத தத்துவத்தையே முருகன் சேவற் கொடியாகக் கொண்டிருக்கிறார். விடியற்காலையில் முதலில் விழித்துக் குரல் கொடுப்பது சேவல். நாத தத்துவம் மாயையிலிருந்து பிரிந்து வந்ததாகும்.

இச்சை, ஞான, கிரியா சக்திகள் விளக்கம்

இச்சை (வள்ளி), கிரியா (தெய்வானை) சக்திகளுடன், ஞானத்தை (வேலை) ஏந்தி முருகன் விளங்குகிறான்.

ஆக வரும் இச்சை அறிவு இயற்றலால்
போக அதிகாரப் பொருளாகி

(கந்தர் கலிவெண்பா)

லயம் - ஒன்றுபடுதல்
போகம் - துய்த்தல்
அதிகாரம் - தொழில் புரிதல்

இச்சா சக்தி மட்டும் எங்கும் ஒரு தன்மையாக விளங்கும், ஞான சக்தி தனித்து நின்றும் இச்சா சக்தி தனித்து நின்றும் வியாபிப்பதே 'லயம்'. ஞான-கிரியா சக்திகள் ஒத்து நின்று வியாபிப்பதே 'யோகம்'. ஞானசக்தி மிகுதியாயும் கிரியாசக்தி குறைந்தும் அல்லது கிரியாசக்தி மிகுதியாயும் ஞானசக்தி குறைந்துமிருப்பது 'அதிகாரம்'.

இறைவன் ஞானசக்தியால் அறிந்து இச்சாசக்தியால் பிரபஞ்சத்தை இயக்குபவன். இவ்விரண்டு சக்திகளும்

இறைவனைவிட்டு நில்லாது. இறைவனும் அச்சக்திகளை விட்டு நில்லான்.

உரு-அரு விளக்கம்

உரு - வடிவுடையது, சகளத் திருமேனி

அரு - வடிவில்லாதது, நிஷ்களத் திருமேனி

இவை முறையே லய, போக, அதிகாரம் என்ற ஸ்தானத்தைப் பெற்று விளங்கும்.

உரு நான்கும், அரு நான்கும், அருஉரு ஒன்றுமாக ஒன்பது வகை. இவற்றை 'நவத்திரு பேதம்" என்பர். இத்திருவுருவங்கள் ஆன்மாவின் பிறப்பை ஒழிப்பதற்கு இறைவன் கொள்ளும் கருணை வடிவங்கள். இவை போக வடிவம், வேக வடிவம், யோக வடிவம் என்பதாகும்.

ஆசீர்வாதம்!!!

(நன்றி : தைப்பிங் லாரூட் (மலேசியா), அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா (சுக்கில தை 19ம் நாள், 1-2-1990) சிறப்பு மலரிலிருந்து தொகுக்கப்பட்டது.)

அழகன் முருகனின் அற்புதமான பெயர்கள்

1. ஆறுமுகம்: ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதம் என்ற ஐந்துடன் அதோமுகமும் சேர்ந்து ஆறுமுகமானது.

2. குகன்: குறிஞ்சி நிலத் தெய்வம், மலைக் குகைகளில் கோயில் கொண்டதால் குகன் ஆகிறான்.

3. குமரன்: மிக உயர்ந்தவன், இளமையை எப்போதும் உடைவன், பிரம்மச்சாரி ஆனவன்.

4. முருகன்: முருகு அழகு என்று பொருள், எனவே முருகன் ஒப்புமையற்ற பேரழகன்.

5. குருபரன் : கு - அஞ்ஞான இருள், ரு - நீக்குபவர், ஆன்மாக்களின் அறியாமை இருளை அகற்றுபவன் குரு சிவனுக்கும், அகத்தியருக்கும், அருணகிரிக்கும் குருவாய் நின்று பிரணவத்தை உபதேசிப்பவன் குருநாதன்.

6. காங்கேயன்: கங்கையின் மைந்தன்.

7. கார்த்திகேயன்: கார்த்திகைப் பெண்களால் வளர்ந்தவன்.

8. கந்தன் : கந்து - யானை கட்டும் தறி. கந்தன் ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாய் இருப்பவன். பகைவர் வலிமையை அழிப்பவன் ஸ்கந்தன். தோள் வலிமை மிக்கவன். ஆறு திருமேனியும் ஒன்றானவன்.

9. கடம்பன் : கடம்ப மலர் மாலை அணிந்தவன்.

10. சரவணபவன் : சரம் - நாணல், வனம் - காடு, பவன் - தோன்றியவன், நாணல் மிக்க தண்ணீர் உடைய காட்டில் தோன்றியவன்.

11. சுவாமி: சுவம் - சொத்து, எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும் சொத்தாக உடையவன். சுவாமி என்ற பெயர் முருகனுக்கு மட்டுமே உரியது. சுவாமி உள்ள மலை சுவாமி மலை.

12. சுரேசன் : தேவர் தலைவன் சுரேசன்.

13. செவ்வேள்: செந்நிறமுடையவன், ஞானச் செம்மை உடையவன்.

14. சேந்தன் : செந்தழல் பிழம்பாய் இருப்பவன்.

15. சேயோன் : சேய் - குழந்தை, குழந்தை வடிவானவன்.

16. விசாகன் : விசாக நட்சத்திரத்தில் ஒளியாய் உதித்தவன்.

17. வேலவன், வேலன் : வெல்லும் வேல் உடையவன். அறிவாக, ஞான வடிவாக விளங்கும் வேல், கூர்மை, அகலம், ஆழம் என்னும் மூன்றும் உடையது.

18. முத்தையன்: பிறப்பிலேயே முத்து ஒளியுடையது. மற்ற மணிகள் பட்டை தீட்டினால் தான் ஒளிரும். எனவே இயல்பாகவே ஒளிர்பவன் முத்தையன்.

19. சோமாஸ்கந்தன் : ச - உமா - ஸ்கந்தன்: சிவன் உமை முருகன் சத்து - சிவம், சித்து - உமை, ஆனந்தம் - கந்தன், முருகன் ஆனந்த வடிவானவன்.

20. சுப்ரமணியன் : சு - மேலான, பிரம்மம் -பெரிய பொருளிலிருந்து, நியம் தோன்றி ஒளிர்வது. மேலான பெரிய பிரம்மத்தில் இருந்து தோன்றி ஒளிர்பவன்.

21. வள்ளற்பெருமான் : முருகன், மண்ணுலகில் அவதரித்த வள்ளி இச்சா சக்தி மூலம் இக நலன்களையும், விண்ணுலக மங்கை தெய்வானை கிரியா சக்தி மூலம் பரலோக நலன்களையும், வேலின் மூலம் ஞானசக்தியையும் ஆகிய மும்மை நலன்களையும், முக்தி நலன்களையும் வழங்குகிறார்கள்.

22. ஆறுபடை வீடுடையோன்: மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறாதாரங்களை ஆறுபடை வீடுகளாய் உடையவன்.

23. மயில்வாகனன் : மயில் - ஆணவம், யானை -கன்மம், ஆடு - மாயை இந்த மூன்றையும் அடக்கி வாகனமாய் கொண்டவன்.

24. தமிழ் என்றால் முருகன். முருகன் என்றால் தமிழ். இரண்டையும் பிரிக்க முடியாத அளவிற்கு இணைந்தே இருக்கும்.

நல்லைக் கந்தன் திருவூஞ்சல்

காப்பு

திருமேவு மணிமார்பத் தவனும் வேதச்
செங்கமலத் தயனாலுந் தேடற் கெட்டாப்
பெருமானுந் துயர்தவிர்த்தே அடிமை கொண்ட
பேராளன் சீராளன் பிறப்பில் லாதான்
பொருசூரன் உடல்பிளந்து நல்லை மேவும்
புலவனுக்கே ஊஞ்சலிசை போற்றிச் சொல்ல
ஒருகோட்டுத் தழைசெவியக் களிற்றுப் பிள்ளை
உபயமல ரடியகத்தே யுன்னல் செய்வாம்.

ஊஞ்சல்

நிரஞ்சனமாஞ் சத்திசிவங் கால்க ளாக
நிகரில்பரா பரமணியேநல் விட்ட மாக
பரந்தகலை ஞானமா கமங்கள் சாத்திரம்
பன்னுபுரா ணங்கள்முறு கிளைய தாக
அரந்தையகல் நால்வேதங் கயிற தாக
அழகொழுகு பொற்பலகை குடிலைய தாக
நரந்தநிறை அட்டதிக்குக் கமழுந் நல்லை
நகர்மேவு கந்தரே யாடீ ரூஞ்சல்!

அம்பரம்பீ தாம்பரம்நல் விதான மாக
அலருடுக்கள் நவமணியின் மாலை யாக
செம்பதும நாயகனும் மதியத் தேவுந்
திருமிகுத்த கண்ணாடியின் னிறைய தாக
நம்புசுடர் ஞானமே விளக்க மாக
நாதவிந்து மங்கலவா லாத்தி யாக
உம்பரெல்லாந் துதிபேசிப் பாடி யாட
உயருநல்லை நற்கந்தரே யாடீ ரூஞ்சல்!

முக்குணமுங் கவிகையே யாகி யோங்க
மொழியுமறம் பொருளின்பம் வீடே நான்கும்
பக்கமொடு சாமரையின் பந்தி யாகப்
பகர்மோட்ச மொளித் தீப மாக
மிக்கவன்பு மலராலே அயனும் மாலும்
வேண்டுவரம் பெறுவதற்கே பூசை செய்ய
நக்கனரன் புதல்வரே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

கனக முடியாறும் பிரபை வீச
நல்லகட் செவியானும் கிருபையை நாட்ட
பனகமணிக் குண்டலமீ ராறுந் திவ்ய
பானுவொளி தனிக்கிரணம் பரிந்து வீச
புனையுமணிக் கலனாட முறுவ றோன்றப்
புதுமதிய முகமாறும் பொதிதல் செய்ய
அநககுரு பரமுதல்வா ஆடீ ரூஞ்சல்
அழகுநல்லைக் கந்தரே யாடீ ரூஞ்சல்!

அந்தமிலா நீலமணி மயிலு மாட
அழகியபொற் சதங்கைகலின் கலினென் றாட
செந்திருவார் பரிபுரங்கள் தானு மாடச்
செம்பொளியி னுடையசைந்து சிறப்பா யாட

எந்தனகத் திருந்தருளும் பாத மாட
எவ்வுயிர்க்குந் தானவனா யிருந்தே யாட
நந்தலிலாப் பரம்பொருளே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

பன்னிருகை பொலிந்தாடச் சூரன் மார்பைப்
பகிர்ந்தவயில் வெகுபராக் கிரமத் தாடச்
சொன்னபல வாயுதமுந் துலங்கி யாடச்
சுந்தரமாம் பொற்புரிநூல் மார்பி லாட
சென்னிறச்சூட் டுச்சேவற் கொடியு மாடத்
தெளிவுறுபொற் கங்கணங்கள் சீரா யாட
நன்னதிசே யானவரே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

கள்ளார்ந்த கடம்பமலர் மாலை யாடக்
கதிகெழுவு ரத்னமணிக் கவச மாட
உள்ளார்ந்த வரைஞானுங் கச்சு மாட
உறுநர்துயர் தீர்த்திருந்த வுடைவா ளாட
எள்ளார்ந்த தெய்வவடி வான மாத
ரிருபேரு மிருபக்கத் திருந்தே யாட
நள்ளாற்று வேலவரே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

தாயாயெவ் வுயிர்க்குந் தானாய் நின்று
தண்ணளியைப் புரிபவரே யாடீ ரூஞ்சல்
மாயோன்றன் மருகனே யாடீ ரூஞ்சல்
வானவர்சே னாபதியே யாடீ ரூஞ்சல்
சேயேசட்சமய பராபரரே யாடீ ரூஞ்சல்
தேவாதி தேவரே யாடீ ரூஞ்சல்
நாயேனைத் தொண்டுகொண்டா யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

திரிபுவன கர்த்தாவே யாடீ ரூஞ்சல்
சிவஞான போதகரே யாடீ ரூஞ்சல்
வறுமைதவிர்த் தாள்பவரே யாடீ ரூஞ்சல்
வரையெறிந்த சேவகரே யாடீ ரூஞ்சல்
அறிவகத்தே ஆக்கியவா யாடீ ரூஞ்சல்
அடியாரை யஞ்சலென்பா யாடீ ரூஞ்சல்
நறியமணங் கமழ்புயனே யாடீ ரூஞ்சல்
நல்லைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல்!

வாழி

அன்புபொருந் தடியவர்கள் வாழி வாழி
அழகியநல் லைச்சனங்கள் வாழி வாழி
பொன்புரளு மஞ்ஞைக்குக் குடமும் வாழி
புகழ்தெய்வ குஞ்சரியும் குறமின் வாழி
துன்புதவிர் வீரவேல் வாழி வாழி
சொல்லுமற்று மாயுதங்கள் வாழி வாழி
நன்குதரும் நல்லைநகர்க் கந்தர் வாழி
நாதாந்த வேலவரெந் நாளும் வாழி!

(திருவூஞ்சல் பாடல்கள் சேனாதிராய முதலியார்
அவர்களால் இயற்றப்பட்டது)

வேல் விருத்தம்

அருணகிரிநாதர்

மகரம்அள றிடைபுரள உரககண பணமவுலி
மதியும்இர வியுமலையவே
வளரெழிலி குடருழல இமையவர்கள் துயரகல
மகிழ்வுபெறு மறுசிறையவாஞ்
சிகரவரை மனைமறுகு தொறுநுளைய மகளிர்செழு
செநெல்களொடு தரளம் இடவே
செகசிரப கிரதிமுதல் நதிகள்கதி பெற உததி
திடர்அடைய நுகரும் வடிவேல்
தகரமிரு கமதமென மணமருவு கடகலுழி
தருகவுளும் உறுவள் எயிறுந்
தழைசெவியும் நுதல்விழியும் உடையஒரு கடவுள்மகிழ்
தருதுணைவன் அமரர்குயிலுங்
குகரமலை எயினர்குல மடமயிலும் எனஇருவர்
குயமொடமர் புரியுமுருகன்
குமரன்அறு முகன்எதிரும் விருதுநிசி சரர்அணிகள்
குலையவிடு கொடியவேலே. 01

வெங்காள கண்டர்கைச் சூலமுந் திருமாயன்
வெற்றிபெறு சுடர் ஆழியும்
விபுதர்பதி குலிசமுஞ் சூரன் குலங் கல்லி
வெல்லா எனக்கருதியே
சங்க்ராம நீசயித் தருளெனத் தேவருஞ்
சதுர்முகனும் நின்றிரப்பச்
சயிலமொடு சூரனுடல் ஒருநொடியில் உருவியே
தனிஆண்மை கொண்ட நெடுவேல்
கங்காளி சாமுண்டி வாராகி இந்த்ராணி
கௌமாரி கமலாசனக்
கன்னிநா ரணிகுமரி த்ரிபுரைபயி ரவிஅமலை
கௌரிகா மாஷிசைவ
சிங்காரி யாமளை பவாநிகார்த் திகைகொற்றி
த்ரியம்பகி அளித்த செல்வச்
சிறுவன்அறு முகன்முருகன் நிருதர்கள் குலாந்தகன்
செம்பொற் றிருக்கை வேலே. 02

வேதாள பூதமொடு காளிகா ளாத்ரிகளும்
வெகுளுறு பசாசகணமும்
வெங்கழு குடன்கொடி பருந்துசெம் புவனத்தில்
வெம்பசி ஒழிக்கவந்தே
ஆதார கமடமுங் கணபண வியாளமும்
அடக்கிய தடக்கிரியெலாம்
அலையநட மிடுநெடுந் தானவர் நிணத்தசை
அருந்திப் புரந்தவைவேல்
தாதார் மலர்ச்சுனைப் பழநிமலை சோலைமலை
தனிப்பரங் குன்றேரகம்
தணிகைசெந் தூரிடைக் கழிஆவி னன்குடி
தடங்கடல் இலங்கைஅதனிற்
போதார் பொழிற்கதிர் காமத் தலத்தினைப்
புகழும்அவ ரவர்நாவினிற்
புந்தியில் அமர்ந்தவன் கந்தன்முரு கன்குகன்
புங்கவன் செங்கை வேலே. 03

அண்டர்உல குஞ்சுழல எண்திசைக ளுஞ்சுழல
அங்கியும் உடன்சுழலவே
அலைகடல்க ளுஞ்சுழல அவுணருயி ருஞ்சுழல
அகிலதல முஞ்சுழலவே
மண்டல நிறைந்தரவி சதகோடி மதியுதிர
மாணப் பிறங்கியணியும்
மணிஒலியி னிற்சகல தலமுமரு ளச்சிரம
வகைவகையி னிற்சுழலும் வேல்
தண்டமுட னுங்கொடிய பாசமுட னுங்கரிய
சந்தமுட னும்பிறைகள்போல்
தந்தமுட னுந்தழலும் வெங்கணுட னும்பகடு
தன்புறம் வருஞ்சமனையான்
கண்டுகுலை யும்பொழுதில் அஞ்சலென மென்சரண
கஞ்சம்உத வுங்கருணைவேள்
கந்தன்முரு கன்குமரன் வண்குறவர் தம்புதல்வி
கணவன் அடல் கொண்ட வேலே. 04

ஆலமாய் அவுணருக் கமரருக் கமுதமாய்
ஆதவனின் வெம்மைஒளிமீ
தரியதவ முனிவருக் கிந்துவிற் றண்ணென்
றமைந்தன்ப ருக்கு முற்றா
மூலமாம் வினையறுத் தவர்கள்வெம் பகையினை
முடித்திந்தி ரர்க்கு மெட்டா
முடிவிலா நந்தநல் கும்பத மளித்தெந்த
மூதண்ட மும்புகழும் வேல்
ஏலமா யானையின் கோடதிற் சொரிமுத்து
மின்பணைக ளுமிழு முத்தும்
இனிவாடை மான்மதம் அகிலோடு சந்தனம்
இலவங்க நறவமாருந்

தாலமா மரமுதற் பொருள்படைத் திடும்எயினர்
தருவநிதை மகிழ்நன் ஐயன்
தனிநடம் புரிசமர முருகன்அறு முகன்குகன்
சரவணக் குமரன் வேலே. 05

பந்தாட லிற்கழங் காடலிற் சுடர்ஊசல்
பாடலினொ டாடலின்எலாம்
பழந்தெவ்வர் கட்கம் துணித்திந்தி ரற்கரசு
பாலித்த திறல் புகழ்ந்தே
சந்தாரு நாண்மலர்க் குழல்அரம் பையர்களும்
சசிமங்கை அனையர்தாமுந்
தன்னைஅன் பொடுபாடி ஆடும்ப்ர தாபமும்
தலைமையும் பெற்ற வைவேல்
மந்தாகிநித்தரங் கச்சடில ருக்கரிய
மந்த்ரஉப தேச நல்கும்
வரதேசி கன்கிஞ்சு கச்சிகா லங்கார
வாரணக் கொடி உயர்த்தோன்
கொந்தார் மலர்க்கடம் புஞ்செச்சை மாலையுங்
குவளையுஞ் செங்காந்தளுங்
கூதாள மலருந் தொடுத்தணியு மார்பினன்
கோலத் திருக்கைவேலே. 06

அண்டங்கள் ஒருகோடி ஆயினுங் குலகிரி
அநந்தமா யினுமேவினால்
அடையவுரு விப்புறம் போவதல் லதுதங்கல்
அறியாது சூரனுடலைக்
கண்டம் படப்பொருது காலனுங் குலைவுறுங்
கடியகொலை புரியு மதுசெங்
கநகா சலத்தைக் கடைந்துமுனை யிட்டுக்
கடுக்கின்ற துங்க நெடுவேல்
தண்டந் தநுத்திகிரி சங்குகட் கங்கொண்ட
தானவாந் தகன்மாயவன்
தழல்விழிக் கொடுவரிப் பருவுடற் பஃறலைத்
தமனியச் சுடிகையின் மேல்
வண்டொன்று கமலத்து மங்கையுங் கடல்ஆடை
மங்கையும் பதம்வருடவே
மதுமலர்க் கண்துயில் முகுந்தன்மரு கன்குகன்
வாகைத் திருக்கை வேலே. 07

மாமுதல் தடிந்துதண் மல்குகிரி யூடுபோய்
வலியதா னவர்மார்பிடம்
வழிகண்டு கமலபவ னத்தனைச் சிறையிட்டு
மகவான் தனைச்சி றைவிடுத்
தோமவிரு டித்தலைவர் ஆசிபெற் றுயர்வானில்
உம்பர்சொற் றுதிபெற்றுநா
உடையகீ ரன்தனது பாடல்பெற் றுலகுதனில்
ஒப்பில்புகழ் பெற்ற வைவேல்
சோமகல சப்ரபா லங்கார தரஜடா
சூடிகா லாந்தகாலர்
துங்கரக்ஷ கத்ரோண கட்கசூலி சஞ்சூல
துரககே சரமாம்பரச்
சேமவட வாம்புயப் பரணசங் காபரண
திகம்பர த்ரியம்பகமகா
தேவ நந்தனகஜா நநசகோ தரகுகன்
செம்பொற் றிருக்கை வேலே. 08

தேடுதற் கரிதான நவமணி அழுத்தியிடு
செங்கரனை யமுதம் வாய்கொள்
செயமளித் தருளெனக் கெனஉவப் பொடுவந்து
சேவடி பிடித்ததெனவும்
நீடுமைக் கடல்சுட்ட திற்கடைந் தெழுகடலும்
நீயெமைக் காக்க எனவும்
நிபிடமுடி நெடியகிரி எந்தமைக் காவெனவும்
நிகழ்கின்ற துங்கநெடுவேல்
ஆடுமைக் கணபணக் கதிர்முடிப் புடையெயிற்
றடலெரிக் கொடிய உக்ர
அழல்விழிப் படுகொலைக் கடையகட் செவியினுக்
கரசினைத் தனியெடுத்தே
சாடுமைப் புயலெனப் பசுநிறச் சிகரியிற்
றாய்திமித் துடனடிக்குஞ்
சமரமயில் வாகனன் அமரர்தொழு நாயகன்
சண்முகன் தன்கை வேலே. 09

வலாரியல லாகுலமி லாதகல வேகரிய
மாலறியு நாலு மறைநூல்
வலானலை விலானசி விலான்மலை விலானிவர்
மநோலய உலாசம் உறவே
உலாவரு கலோலமக ராலய சலங்களும்
உலோகநிலை நீர்நிலையிலா
வொலாவொலி நிசாசரர் உலோகம தெலாமழல்
உலாவிய நிலாவு கொலைவேல்
சிலாவட கலாவிநொ தவாசிலி முகாவிலொச
னாசின சிலாத ணிவிலா
சிலாமலர் எலாமதிய மோதமதி சேலொழிய
சேவக சராப முகிலாம்
விலாசகலி யாணகலை சேரபசு மேலைமுலை
மேவிய விலாச அகலன்
விலாழியி னிலாழியகல் வானில்அனல் ஆரவிடு
வேழம்இளை ஞன்கை வேலே. 10

"நீ எனக்கு ஒரு இலையைக் கொடு, அல்லது பூவைக் கொடு, இல்லை, ஒரு பழத்தைக் கொடு. அதுவும் இல்லையென்றால் கொஞ்சம் தண்ணீர் கொடு. எதைக் கொடுத்தாலும் பக்தியோடு கொடு. சுத்தமான மனம் உள்ளவன் பக்தியோடு கொடுப்பதை நான் விரும்பிச் சாப்பிடுவேன்."

(ஸ்ரீமத் பகவத் கீதை)

சிந்தனைக்கினிய கந்தபுராணம்

நீர்வை. தி.மயூரகிரி சர்மா

சம்ஸ்க்ருதத்தில் பதினெண் புராணங்கள் உள்ளன:

சைவம், பவிஷ்யம், மார்க்கண்டேயம், லிங்கம், ஸ்காந்தம், வராஹம், வாமனம், மத்ஸயம், கூர்மம், பிரம்மாண்டம், காருடம், நாரதீயம், வைஷ்ணவம், பாகவதம், பிரம்மம், பத்மம், ஆக்னேயம், பிரம்மகைவர்த்தனம் என்பவற்றுள் ஸ்கந்தபுராணம் என்ற மஹாபுராணமும் ஒன்று.

“முருகப்பெருமானின் திருவரலாறாகிய கந்தபுராணத்தைக் காதலுடன் இப்புவியில் படிப்போர், கேட்போர், நினைப்போர் யாவரும் இந்திரனைப் போலத் தலைமைத்துவமும் இன்பமும் மிக்க வாழ்வை வாழ்ந்து இறுதியில் பரமானந்த நிலையாகிய சிவபதப் பேறும் பெறுவர்”

என்று நூற்பயனை விதந்து உரைக்கிறது இப்பாடல்:

“இந்திராகிப் பார் மேல் இன்பமுற்றினிது மேவிச்

சிந்தையில் நினைந்த முத்தி சிவகதி அதனில் சேர்வர்

அந்திமில் அவுணர் தங்கள் அடல் கெடமுனிந்த செவ்வேள்

கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்தோதுவோரே”

பெருமைமிக்க இப்புராணத்திலுள்ள ஆறு பெரிய சங்கிதைகளுள் ஒன்று சங்கரசங்கிதை. இச்சங்கிதையிலுள்ள பதின்மூன்றாயிரம் ஸ்லோஹங்களால் ஆக்கப்பெற்றது சிவரஹஸ்ய காண்டம் என்ற உயர்ந்த பகுதி. இதில் ஏழு காண்டங்கள் உள்ளன. அவ்வேழு காண்டங்களுள் முதன்மையான ஆறு காண்டங்களை இணைத்து அழகுத் தமிழில் ‘கந்தபுராணம்’ என்ற ஞானக்களஞ்சியமாக தந்திருக்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

பொ.பி 12, 13ம் நூற்றாண்டுகளில், தமிழகத்தின் காஞ்சியில், குமரகோட்டம் முருகன் ஆலய அர்ச்சகராகத் திகழ்ந்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார். முருகனே ‘திகட சக்கர’ என்று முதல் அடியெடுத்துக் கொடுக்க 10345 அருந்தமிழ்ச் செய்யுள்களால் கந்தபுராணத்தை அவர் ஆக்கியிருக்கிறார்.

‘உபதேச ரத்னாகரம்’ என்று போற்றப்படும் கந்தபுராணம் காப்பிய இலக்கணங்கள் மிக்கதாக, சித்தாந்தக் கருத்துக்களின் செறிவுடையதாக, தத்துவார்த்த உண்மைகள் பொருந்தப் பெற்றதாக அமைந்திருக்கிறது. தமிழ்க் கந்தபுராணத்தின் தமிழ் நடையும் வியந்து நயந்து உண்ண வேண்டியது.

முருகப்பெருமானாலேயே ஆணையிடப்பெற்று, அவனாலேயே தினமும் பரிசீலனை செய்யப்பெற்றது. ஆயினும், அரங்கேற்றத்தில் அறிஞர் முன்றலில் இலக்கணச் சந்தேகம் உண்டானது. அப்போது கந்தவேட் பெருமானே சிறுவடிவு தாங்கி வந்து, தன்னால் அங்கீகரிக்கப்பெற்ற நூல் அது என்று யாவரும் அறியச் சந்தேகம் நீக்கினார். மிகத் தெளிவாக ‘இறையாணை’ பெற்ற நூல் கந்தபுராணம் என்பது சைவத்தமிழ் மக்களின் நம்பிக்கை.

அரிய தத்துவப்புதையல்

கந்தபுராணம் ஒரு தத்துவப்புதையல். இப்புராணத்தின் ஒவ்வொரு நிலையிலும் இதனை உணர்ந்து அனுபவிக்க வேண்டும்.

கந்தன் இளமையின் வடிவம். ஆற்றலின் நிலையம். என்றும் இளையான், எவர்க்கும் மிகப்பெரியான், என்றும் அழகியான் என்று சநாதன தர்மம் போலவே விளங்குபவனே அந்த ஸ்கந்தன் என்ற முருகன்.

அவனது மனைவியராகக் கந்தபுராணம் இரு தேவியரைக் காட்டும். அவனுடைய வலது பக்கம் விளங்குபவள் வள்ளி. அவள் இச்சா சக்தி. மண்ணுலகில் பிறந்து வளர்ந்தவள். தமிழ்மகள். வேடுவனான நம்பிராஜன் புதல்வி. அத்தேவி இகலோக சுகத்தைத் தருவாள். அத்தேவியை முருகன் காந்தர்வ விவாகம் செய்து கொண்டான்.

முருகனின் இடது பக்கம் எழுந்தருளுபவள் தேவசேனா. விண்ணுலகில் பிறந்தவள். தேவராஜனின் புதல்வி. கிரியாசக்தி. அவளை இறைவன் கற்பு முறையில் பிரம்ம

விவாகம் செய்தான். முருகனை வழிபடுவோருக்கு அத்தாய் பரலோக வாழ்வில் இடம்தருவாள்.

முருகனின் மூன்றாவது சக்தி வேல். முருகனின் கரத்தில் விளங்குகிறது. வெற்றியைத் தருவது. ஞானமே வடிவெடுத்த ஞானசக்தி அது.

'வெல்' என்ற வினையடியில் தோன்றியது 'வேல்'. அது ஞானமே உருவானது. ஆழந்து அகன்று கூர்மையாகி அறிவின் வெளிப்பாடாகத் திகழ்கின்றது. செவ்வேட் பெருமானின் திருக்கரத்தில் விளங்கும் சேவற்கொடி அஞ்ஞான இருளகற்றி ஞானஒளி வரக் கூவுகிறது. (கொக்கு- மாமரம், அற- அறுத்த, கோ- நம் அரசே) வாகனமான மயில் ஆசை என்ற பாம்பை அடக்கி பிரம்ம சக்தியாக ஓம்கார ரூபமாக விளங்குகிறது.

முருகன் கை வேலுக்கு உரிய சிறப்பு வேறு எப்படைக்கும் இல்லை. தமிழ் இந்துக்களில் பலருக்கு 'வேலாயுதம்' என்றே பெயர் இருக்கிறது. இப்படி எவரும் வேறு எந்தப் படைக்கலனையும் தங்கள் பெயராகக் கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கையிலுள்ள பிரபல யாழ். நல்லூர் போன்ற பல முருகன் ஆலயங்களில் கருவறையில் முருகனின் திருவுருவத்திற்குப் பதிலாக வேலாயுதமே விளங்கிடக் காணலாம்.

'அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த அன்பால்

எந்தை கண்ணின்றும் வந்த இயற்கையால் சக்தியாம் பேர்

தந்திடும் பனுவல் சொன்ன தன்மையால் தனிவேற் பெம்மான்

கந்தனே என்ன நின்னைக் கண்டு உளக்கவலை தீர்த்தோம்'

என்று தேவர்களின் வாக்காக வேலாயுதத்தைக் கந்தவேளாகவே கண்டு போற்றியதாகக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.

இறையருள் துணையுடன் ஆணின் விந்துவும் பெண்ணின் நாதமும் கலந்து குழந்தையாகிறது. (அருணகிரிநாதர் 'நாத விந்து கலாதீ நமோ நம' என்று இதனைத் திருப்புகழில் பாடுவார்.) இறைவனிடமிருந்து வந்த நாமெல்லோரும் இறுதியில் இறைவனையே சென்றடைய வேண்டும். அழிவின் பின்னர் சூரபத்மன் நாதவுருவாகச் சேவலாக மாறி இறைவனின் கொடியாகவும் விந்துருவுருவாக மயிலாக மாறி முருகனின் வாகனமாயும் மாறியது இதை வெளிப்படுத்துகின்றது என்பர். அவனையே அடைந்து அவனருளாலே அவன் தாள் வணங்குதலே முக்தி. இதனைப் பெற்றான் சூரன். இச்சம்பவத்தை 'சூரன் பெற்ற பேறு' என்று கொண்டாடுவார்கள்.

ஆன்மாக்கள் நல்லறிவை நாடித் தவிக்கும் போது இறைவனே குருவாக வந்து அருள்வான் என்பதை சிவனார் சனகாதி முனிவர்கள் நால்வருக்கு உபதேசித்தமை சுட்டுகிறது.

சிவனார் காமனை எரித்ததும் காலனைக் காலால் உதைத்ததும் அவர் காமத்தையும் மரணத்தையும் வென்றவர் என்பதையும், அவர் அடியார்களுக்கும் இவற்றால் துன்பமில்லை என்பதையும் உணர்த்தி நிற்கிறது.

இறைவனை இகழ்ந்து அவனை அவமதிப்பவர்கள் மிகுந்த அல்லல்களை அனுபவிப்பர் என்பதைத் தக்கன் யாகத்தை இறைவன் அழித்தமை காட்டுகின்றது.

கந்தபுராணத்தில் தாரகன், சிங்கன், சூரபத்மன் என்ற மூன்று அசுரச் சகோதரர்களின் கதை கூறப்படுகின்றது. தாரகன் உலகமே உண்மை என்று வாழ்ந்தவன். சைவசித்தாந்த நிலையில் அவனை "மாயா மலத்திற்கு" உவமிப்பர். சிங்கன் கன்மத்திற்குக் கட்டுப்பட்டவன் அவனைக் "கன்ம மலத்திற்கு" உவமிப்பர். சூரபத்மன் "ஆணவ மலம்". இறுமாப்பே அவன் இயல்பு.

இம்மூவரையும் முறையே அழித்தமை ஞானம் எனும் வேல் கொண்ட வேந்தனால் மட்டுமே இயல்பாகச் செய்ய வல்ல பெருஞ்சிறப்பு.

'தன்னைத் தான் காதலாகில் எனைத் தோன்றும்

துன்னற்க தீவினைப் பால்'

என்பது வள்ளுவர் மொழி.

அதாவது 'நீ உன்னை விரும்பி, உனக்கு நன்மையை விரும்பி, தீவினை ஏதும் செய்யாமல் இருப்பாயாக' என்று அறிவுறுத்துகிறார். சூரனோ எல்லாவிதத் திறனும் அறிவும் உடையவனாய் இருந்தும், இறையருள் பெற்றவனாய் இருந்தும், தீவினை செய்து தன்னைத் தானே அழித்துக் கொண்டமை வள்ளுவர் வாக்கிற்குத் தக்க சான்றாகும்.

இயற்கையும் தெய்வமே

மூவுலகிற்கும் முதல்வன் குழந்தையானான். தேவர்களின் வேண்டுகோளின் படி சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு தீப்பொறிகள் பிறந்து ஆகாயத்தில் தவழ்ந்து வாயுவாலும் அக்கினியாலும் தாங்கப் பெற்று ப்ருதிவியிலே 'சரவணப்பொய்கை' ஜலத்திலே குழந்தையாய் மாறியது என்று இப்புராணம் சொல்லுகிறது. இப்படிச் சொல்வது பஞ்சபூதங்களினூடாக இறையாட்சியை அவதானிக்கச் செய்கிறது. முருகனின் தோற்றத்தில் பஞ்சபூதங்களின் பங்களிப்பு வியக்க வைக்கிறது.

ஆலய கும்பாபிஷேகக் கிரியைகளில் ஆகாயச் சூரியனிலிருந்து 'சூரியாக்கினி' என்ற நெருப்புப் பெறப்படுகிறது. அந்த அக்கினி மண்ணில் உள்ள குண்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டு வாயுவின் துணையுடன் வளர்க்கப்பெறுகிறது பின், அதனை கும்பஜலத்தில் இணைத்து வழிபாடாற்றுவதுடன், இறுதியில் இறை திருவுருவத்தில் நீரால் அபிஷேகித்து இறைசாந்நதித்யம் உண்டாகப் பிரார்த்திக்கப்படுகிறது. இதைப் பஞ்சபூதங்கள் இணைந்து செயல்படும் நிகழ்வோடு இணைத்து நோக்கலாம்.

இந்த இடத்தில் 'ஒருதிரு முருகன் வந்து உதித்தனன்' என்று கச்சியப்பர் குறிப்பிடுவார். அதாவது என்றுமுள்ள இறைவன் இந்த வேளையில் முருகனாக உதித்தனன். (காலையில் சூரியன் பிறப்பதில்லை. உதிக்கிறான். ஏனெனில், அவன் முன்னரே இருப்பவன்.)

போரும் சீரும்

போருக்கு முன் இரு முறை தூதனுப்பியமை, மறைந்து நின்று போராடாமை, ஆயுதம் ஏந்தாதவனுடன் போராடாமை, தனக்குச் சமானமற்ற வீரனுடன் போராடாமை, புறங் கொடுப்பவனைக் கொல்லாமை ஆகிய செயற்பாடுகள் கந்தபுராணத்திலுள்ள போரில் 'அசுரர்களால் கூட' அநேகமாகக் கடைபிடிக்கப்படுவதைப் பார்க்கிறோம். செஞ்சோற்றுக்கடனுக்குச் சிங்கனும், பிதிர்க்கடனுக்கு இரணியனும், மானத்திற்குச் சூரனும், கற்பிற்கு சூரன் மனைவியும் கந்தபுராணத்தில் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றனர்.

ஆனால், இன்றைய உலகில் நடைபெற்ற, நடைபெறும் மோதல்கள் இவற்றை எல்லாம் புறக்கணிக்கிறது. எந்தப் பிரச்சினையிலும் தலையிடாமல் ஒதுங்கி இருக்கிற மருத்துவமனையையும் தாக்குகின்றனர்.

இவையெல்லாம் நிச்சயமாக இன்றைய சமூகத்தைக் காட்டிலும் கந்தபுராண காலச் சமூகம் உள, ஒழுக்க ரீதியில் உயர்வானதாகவே இருந்திருக்கும் என நம்பச் செய்கின்றன.

கந்தபுராணம் என்பது தமிழரின் வாழ்வோடு இணைந்தது. ஆக, இதில் ஊறிய எவரும் இதைக் கதை என்று சொல்வதில்லை. சிற்சில இடங்களில் கதைக்குரிய உயர்வு நவிற்சி இருந்தாலும், இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் உண்மையில் நடந்த சம்பவம் என்றே அவர்கள் நம்புகிறார்கள்.

இவ்வாறான ஆய்வுகளின் படி முருகன் பிறந்தது கைலாசச் சாரல் என்றும், தரை வழி யுத்தம் நடந்தது திருப்பரங்குன்றம் என்றும், விண்வெளி யுத்தம் நடந்தது திருப்போரூர் என்றும், கடல்வழிச் சமர் நடந்தது திருச்செந்தூருக்கு அப்பாலுள்ள கடல் என்றும் ஐதீகம். இலங்கையின் கதிர்காமத்தில் படைவீடு அமைத்துத் தங்கி, அப்பால் தெற்கே சூரனுடைய நகரை நோக்கிச் சென்றதாகக் கூறப்படுவதால் சூரன் அக்கால ஆப்பிரிக்கதேச அரசன் என்று கருதுவாரும் உள்ளனர். முருகனின் வலது புறம் எழுந்தருளியிருக்கும் வள்ளியம்மை தமிழ் மொழி பேசும் குறவர் இனப் பெண் என்பது வேறு ஐதீகம். இதுவும் ஆய்விற்குரியதே.

யாழ்ப்பாணத்தின் கடற்கரையோரத்தில் உள்ள பிரபல ஸ்கந்த ஸ்தலம் 'மாவிட்டபுரம்'. ஆக, திருச்செந்தூருக்கும் மாவிட்டபுரத்திற்கும் இடைப்பட்ட பரந்த சமுத்திரப் பகுதியில் மாமரமாகி மாயா ஜாலங்கள் செய்து முருகனுடன் சூரன் போராடியிருக்கிறான்.

'தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்'

என்ற கந்தபுராண அறைகூவல் எங்கள் ஒவ்வொருவரையும் தட்டி எழுப்பி "ஓ அஞ்ஞானிகளே, கடந்த காலம் போயது. உங்கள் அறியாமை மூட்டைகளை நீக்க நல்ல ஒரு வழி கிடைத்திருக்கிறது. உடனடியாகக் கந்தப்பெருமானின் கழலடிகளைப் போய்ச் சேருங்கள். நீங்கள் ஞானியராவீர்கள்" என்று நமக்கெல்லாம் அரிய பெரிய நற்செய்தி சொல்கிறது.

காதல் முருகனைக் காதலி

முருகு என்பது அழகு. அதன் மறு பெயர் அன்பு. அவன் பால் காதல் கொண்டோர் அனேகர்.

இறைவனின் இரு-பெண் திருமணம் சமூக சமத்துவத்தைக் காட்டி நிற்கிறது. தேவலோக அரசனின் மகளைத் திருமணம் செய்த அதே இறைவன், தானே வலிய வந்து மனிதர்களில், அதிலும் சாதி முதலிய வேறுபாடுகள் பாராமல் வேடுவர் குல மகளைத் திருமணம் செய்திருக்கிறான். இதை நம் புராணங்கள் மிகவும் தெளிவாகக் காட்டி வந்துள்ளன. இவை தவிர பூவுலகைச் சேர்ந்த வள்ளியம்மைக்குக் கொடுக்கப்படும் உயர்ந்த அந்தஸ்து தனிச்சிறப்பு. எவருமே 'முருகனுக்கு வள்ளி' என்றே கூறக் கேட்கிறோம்.

மேலும் வள்ளி தமிழ் மகள். இது தமிழுக்குக் கிடைத்த சிறப்பு.

“.. ஒரு கோடி முத்தம் தெள்ளிக் கொழிக்கும் கடற் செந்தில் மேவிய சேவகனே

வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய மாணிக்கமே”

என்று இதைப் பற்றி அருணகிரிப் பெருமான் உருகிப்பாடுகிறார்.

ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்விற்கு இந்துப்பண்பாடு கொடுத்த முதன்மையையும், காதற் சிறப்பையும், அன்னை உமையாளுக்கும் இறைவனுக்கும் நிகழ்ந்த திருமணமும் வெளிப்படுத்துகின்றது.

‘கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்

பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே’

என்ற ஞானசம்பந்தர் வாக்கு ஈண்டு சிந்திக்கத் தக்கது.

சைவ-வைஷ்ணவ ஒற்றுமை

கந்தபுராணக் கதையுடன் இராமாயணக் கதையை ஒப்பு நோக்கும் போது சைவ-வைஷ்ணவ ஒற்றுமையை உணரலாம்.

சைவசமயிகளின் பரம்பொருளான சிவபெருமானின் புதல்வன் முருகன். வைஷ்ணவர்களின் பரம்பொருளான விஷ்ணுவின் புதல்விகளாகவும் கொண்டாடப்பெறும் வள்ளி, தேவசேனா தேவியரைக் கல்யாணம் செய்தமை சமய ஒற்றுமை. தவிர முருகன் சிவகுமாரனே ஆகிலும் விஷ்ணு அம்சம் நிரம்பப் பெற்றவன். ஸ்ரீமந் நாராயணனின் அவதாரங்களில் நடைபெற்ற அற்புத நிகழ்ச்சிகளோடு அவனது ஒவ்வொரு செய்கையையும் இணைத்துப் பார்க்கும் போது ஏற்படும் இன்பமே தனியானது. அலாதியானது.

இதனை உண்மையிலேயே செயற்படுத்தியவர் சந்தக்கவி அருணகிரியார். திருப்புகழ் எங்கும் முருகன் பெருமை போலவே திருமால் பெருமையும் நிறைந்திருக்கிறது. தவிர, முருகனை அவர் 'பெருமாள்' என்றே விளித்துப் பெருமை செய்திருக்கிறார்.



‘காலமாய்க் காலமின்றிக் கருமமாய் கருமமின்றி

கோலமாய்க் கோலமின்றி குணங்களாய் குணங்களின்றி

ஞாலமாய் ஞாலமின்றி அநாதியாய் நங்கட்கு எல்லாம்

மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண்டுற்றான்’

என்ற கச்சியப்ப சிவாச்சாரிய ஸ்வாமிகளின் திருவாக்கை மனங் கொண்டு அப்பெருமானின் திருவடிகளில் சரண்புகுவோம்.

முருகனுடைய ஆறுதிருமுகங்களும் அன்பு, அறிவு, ஆற்றல், அழகு, அமைதி, ஆளுமை ஆகிய பண்புகளை உணர்த்தும். நாற்றிசையும் மேலும் கீழும் ஆக, ஆறு பக்கங்களும் பார்த்து நிற்கும் இத்திருமுகங்களை நம்புவோருக்கு துன்பம் எத்திசையாலும் வாரா. அவனது கரங்கள் பன்னிரண்டும் கொடுப்பதற்கென்றே பிறந்தன. அதனை,

“முழுமதி அன்ன ஆறுமுகங்களும் முன் நான்காகும்

விழிகளில் அருளும் வேலும் வேறுள படையும் சீரும்

அழகிய கரம் ஈராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும்

செழுமலரடியும்.”

என்று தெவிட்டாத தேனாகத் தமிழில் பாடுவார் கச்சியப்பர்.

கந்தபுராண காவிய ரசனையை உளத்தில் கொள்வோம்.

செம்மொழியான செந்தமிழின் தலைவன் முருகன். அவனடி பணிவோம். தமிழ்-இந்து தர்மம் சிறக்கப் பிரார்த்திப்போம்.

மயில் விருத்தம்

காப்பு - சந்தன பாளித

சந்தன பாளித குங்கும புளகித சண்பக கடகபுயச்
சமர சிகாவல குமர ஷடாநந சரவண குரவணியுங்
கொந்தள பாரகி ராதபு ராதநி கொண்க எனப்பரவுங்
கூதள சீதள பாதம் எனக்கருள் குஞ்சரி மஞ்சரிதோய்
கந்தக்ரு பாகர கோமள கும்ப கராதிப மோகரத
கரமுக சாமர கர்ண விசால கபோல விதானமதத்
தெந்த மகோதர மூஷிக வாகன சிந்து ர பத்மமுகச்
சிவசுத கணபதி விக்ந விநாயக தெய்வ சகோதரனே.

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீ முகச்
சரணயுக ளமிர்தப்ரபா
சந்த்ரசே கரமூஷி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங்கனச்
சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன்முதற்
சிவனைவலம் வருமளவில் உலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாபமயிலாம்
மந்தா கிநிப்பிரப வதரங்க விதரங்க
வனசரோ தயகிர்த்திகா
வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
வராசலன் குலிசாயுதத்
திந்த்ராணி மங்கில்ய தந்து ரட்ஷாபரண
இகல்வேல் விநோதன் அருள்கூர்
இமையகிரி குமரிமகன் ஏறுநீ லக்ரீவ
ரத்னக் கலாப மயிலே.

சக்ரப் ரசண்டகிரி முட்டக் கிழிந்துவெளி
பட்டுக் ரவுஞ்ச சயிலந்
தகரப் பெருங்கனக சிகரச் சிலம்பும்எழு
தனிவெற்பும் அம்புவியும் எண்
திக்குத் தடங்குவடும் ஒக்கக் குலுங்கவரு
சித்ரப் பதம்பெயரவே
சேடன்முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சூரர்
திடுக்கிட நடிக்கு மயிலாம்
பக்கத்தில் ஒன்றுபடு பச்சைப் பசுங்கவுரி
பத்மப் பதங் கமழ்தரும்
பாகீ ரதிச்சுதில யோகீ சுரர்க்குரிய
பரம உபதேசம் அறிவிக்
கைக்குச் செழுஞ்சரவ ணத்திற் பிறந்தஒரு
கந்தச்சுவாமி தணிகைக்
கல்லார கிரியுருக வருகிரண மரகத
கலாபத்தில் இலகு மயிலே.

ஆதார பாதளம் பெயரஅடி பெயரமூ
தண்டமுக டதுபெயரவே
ஆடரவ முடிபெயர எண்டிசைகள் பெயரஎறி
கவுட்கிரி சரம்பெயரவே
வேதாள தாளங்க ளுக்கிசைய ஆடுவார்
மிக்கப் ரியப்படவிடா
விழிபவுரி கவுரிகண் டுளமகிழ விளையாடும்
விஸ்தார நிர்த்த மயிலாம்
மாதாநு பங்கியெனு மாலது சகோதரி
மகீதரி கிராத குலிமா
மறைமுநி குமாரிசா ரங்கநந் தனிவந்த
வள்ளிமணி நூபுர மலர்ப்
பாதார விந்தசே கரனேய மலரும்உற்
பலகிரி அமர்ந்த பெருமாள்
படைநிருதர் கடகமுடை படநடவு பச்சைப்
பசுந்தோகை வாகை மயிலே.

யுககோடி முடிவின் மண் டியசண்ட மாருதம்
உதித்ததென் றயன் அஞ்சவே
ஒருகோடி அண்டர்அண் டங்களும் பாதாள
லோகமும் பொற்குவடுறும்
வெகுகோடி மலைகளும் அடியினில் தகர்ந்திரு
விசும்பிற் பறக்க விரிநீர்
வேலைசுவ றச்சுரர் நடுக்கங் கொளச்சிறகை
வீசிப் பறக்கு மயிலாம்
நககோடி கொண்டவுணர் நெஞ்சம் பிளந்தநர
கேசரி முராரி திருமால்
நாரணன் கேசவன் சீதரன் தேவகீ
நந்தனன் முகுந்தன் மருகன்
முககோடி நதிகரன் குருகோடி அநவரதம்
முகிலுலவு நீலகிரிவாழ்
முருகன்உமை குமரன் அறு முகன்நடவு விகடதட
மூரிக் கலாப மயிலே.

சோதியிம வேதண்ட கன்னிகையர் தந்தஅபி
நயதுல்ய சோம வதன
துங்கத்ரி சூலதரி கங்காளி சிவகாம
சுந்தரி பயந்த நிரைசேர்
ஆதிநெடு மூதண்ட அண்டபகி ரண்டங்கள்
யாவுங் கொடுஞ்சி றகினால்
அணையுந்த னதுபேடை அண்டங்கள் என்னவே
அணைக்குங் கலாப மயிலாம்
நீதிமறை ஓதண்ட முப்பத்து முக்கோடி
நித்தரும் பரவு கிரியாம்
நீலகிரி வேலவன் நிராலம்பன் நிர்ப்பயன்
நிர்வியா குலன்சங் குவாள்
மாதிகிரி கோதண்ட தண்டந் தரித்தபுயன்
மாதவன் முராரி திருமால்
மதுகைட வாரிதிரு மருகன்முரு கன்குமரன்
வரமுதவு வாகை மயிலே.

சங்கார காலமென அரிபிரமர் வெருவுறச்
சகல லோகமு நடுங்கச்
சந்த்ரசூ ரியரொளித் திந்த்ராதி அமரருஞ்
சஞ்சலப் பட உமையுடன்
கங்காளர் தனிநாட கஞ்செய்த போதந்த
காரம் பிறந்திட நெடுங்
ககனகூட முமேலை முகடுமூ டியபசுங்
கற்றைக் கலாப மயிலாஞ்
சிங்கார குங்கும படீரம்ருக மதயுகள
சித்ரப் பயோ தரகிரித்
தெய்வவா ரணவநிதை புனிதன் குமாரன்
திருத்தணிமகீரதன் இருங்
கெங்கா தரன்கீதம் ஆகிய சுராலய
க்ருபாகரன் கார்த்தி கேயன்
கீர்த்திமா அசுரர்கள் மடியக்ர வுஞ்சகிரி
கிழிபட நடாவு மயிலே.

தீரப் பயோததி (க) திக்குமா காயமுஞ்
செகதலமு நின்று சுழலத்
திகழ்கின்ற முடிமவுலி சிதறிவிழ வெஞ்சிகைத்
தீக்கொப் புளிக்க வெருளும்
பாரப் பணாமுடி அநந்தன்முதல் அரவெலாம்
பதைபதைத் தேநடுங்கப்
படர்சக்ர வாளகிரி துகள்பட வையாளிவரு
பச்சைப்ர வாள மயிலாம்
ஆரப்ர தாபபுள கிதமதன பாடீர
அமிர்தகல சக்கொங் கையாள்
ஆடுமயில் நிகர்வல்லி அபிராம வல்லிபர
மாநந்த வல்லி சிறுவன்
கோரத்ரி சூலத்ரி யம்பக ஜடாதார
குருதரு திருத்தணி கைவேள்
கொடியநிசி சரர்உதரம் எரிபுகுத விபுதர்பதி
குடிபுகுத நடவு மயிலே.

செக்கரள கேசசிக ரத்நபுரி ராசிநிரை
சிந்தப் புராரி யமிர்தந்
திரும்பப் பிறந்ததென ஆயிரம் பகுவாய்கள்
தீவிஷங் கொப்புளிப்பச்
சக்ரகிரி சூழவரு மண்டலங் கள்சகல
சங்கார கோர நயனத்
தறுகண்வா சுகிபணா முடியெடுத் துதறுமொரு
சண்டப்பர சண்டமயிலாம்
விக்ரம கிராதகுலி புனமீ துலாவிய
விருத்தன் திருத்த ணிகைவாழ்
வேலாயு தன்பழ வினைத்துயர் அறுத்தெனை
வெளிப்பட வுணர்த்தி யருளித்
துக்கசுக பேதமற வாழ்வித்த கந்தச்
சுவாமிவா கனமா னதோர்
துரககஜ ரதகடக விகடதட நிருதர்குல
துஷ்டர் நிஷ்டூ ரமயிலே.

சிகரதம னியமேரு கிரிரசத கிரிநீல
கிரியெனவும் ஆயிரமுகத்
தெய்வநதி காளிந்தி யெனநீழல் இட்டுவெண்
திங்கள்சங் கெனவும்ப்ரபா
நிகரெனவும் எழுதரிய நேமியென உலகடைய
நின்றமா முகில் என்னவே
நெடியமுது ககனமுக டுறவீசி நிமிருமொரு
நீலக் கலாப மயிலாம்
அகருமரு மணம்வீசு தணிகைஅபி ராமவேள்
அடியவர்கள் மிடிய கலவே
அடல்வேல் கரத்தசைய ஆறிரு புயங்களில்
அலங்கற் குழாம் அசையவே
மகரகன கோமளக் குண்டலம் பலஅசைய
வல்லவுணர் மனம்அசைய மால்
வரை அசைய உரகபிலம் அசையஎண் டிசைஅசைய
வையாளி யேறு மயிலே.

நிராசத விராசத வரோதய பராபர
னிராகுல னிராமய பிரா
னிலாதெழு தலாறை மிலானெறி யிலானெறி
நிலாவிய உலாசஇ தயன்
குராமலி விராவுமிழ் பராரை யமராநிழல்
குராநிழல் பராவு தணிகைக்
குலாசல சராசரம் எலாமினி துலாவிய
குலாவிய கலாப மயிலாம்
புராரிகும ராகுரு பராஎனும் வரோதய
புராதன முராரி மருகன்
புலோமசை சலாமிடு பலாசன வலாரிபுக
லாகும் அயி லாயுதனெடுந்
தராதல கிராதர்கள் குலாதவபி ராமவல
சாதனன் விநோத சமரன்
தடாரி விகடாசுரன் குடாரித படாதிகழ்
ஷடாநநன் நடாவு மயிலே.

எந்நாளும் ஒருசுனையில் இந்த்ரநீ லப்போ
திலங்கிய திருத்த ணிகைவாழ்
எம்பிரான் இமையவர்கள் தம்பிரான் ஏறும்ஒரு
நம்பிரா னான மயிலைப்
பன்னாளும் அடிபரவும் அருணகிரி நாதன்
பகர்ந்தஅதி மதுர சித்ரப்
பாடல்தரு மாசறு வேல்விருத்தம் ஒருபத்தும்
படிப்பவர்கள் ஆதி மறைநூல்
மன்னான் முகம்பெறுவர் அன்னம் ஏறப்பெறுவர்
வாணிதழு வப்பெ றுவரால்
மகரால யம்பெறுவர் உவணம் ஏறப்பெறுவர்
வாரிச மடந்தை யுடன்வாழ்
அந்நாயகம் பெறுவர் அயிராவ தம்பெறுவர்
அமுதா சனம்பெ றுவர்மேல்
ஆயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர்பெறுவர்
அழியா வரம்பெ றுவரே.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமாக பெருமை பெறும் திருஞானசம்பந்தர் ஆதீனம் யாழ் நல்லூரில் அமைந்துள்ளது. மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கிளை நிறுவனமாக 1966ஆம் ஆண்டு ஆவணி மாதம் 6ஆம் நாளன்று கோயில் வீதியிலுள்ள 'கந்தகோட்டம்' இல்லத்தில் நல்லை ஆதீனம் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படத் தொடங்கியது. ஒரு கதாப்பிரசங்கியாக இந்து மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுத் திகழ்ந்த மணிபாகவதர், மணி ஐயர் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டு வந்த சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை குருவாகக் கொண்டு துறவற வாழ்க்கையை மேற்கொள்ளும் வகையில் அவரது சீடராகி, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என்ற நாமாகரணமும், மந்திரோபதேசமும் பெற்று இலங்கை திரும்பி நல்லூர் ஆதீனத்தை ஆரம்பித்தார். சில வருடங்களின் பின்னர், அதாவது 1970ஆம் ஆண்டிலிருந்து மதுரை ஆதீனத்தின் கிளையாக அல்லாமல், நல்லை ஆதீனம் சுயாதீனமாக தனித்து இயங்கத் தொடங்கியது. 1972ஆம் ஆண்டிலிருந்து ஆதீனம் இப்போதுள்ள இடத்திற்கு மாற்றப்பட்டது.



நல்லை ஆதீனம் செயற்பட்டு வரும் இந்தக் கட்டிடம் நல்லைக் கந்தன் ஆலயத்தை நிர்வகித்துவரும் மாப்பாண முதலியார் பிறந்து வளர்ந்த வீடாகும். இது, பல தர்ம காரியங்களைச் செய்து வந்துள்ள புத்தூர் மழவராயர் குடும்பத்தினருக்கு கைமாறியது. வாடகை வீட்டில் இயங்கிவந்த நல்லை ஆதீனத்தை சிறப்பான வகையில் நடத்திச் செல்வதற்காக அப்போது ஆதீன முதல்வராகவிருந்த முதலாவது குருமகா சந்நிதானம் அவர்களுக்கு 1972ஆம் ஆண்டில் மழவராயர் குடும்பத்தினர் இந்தக் கட்டிடத்தை அன்பளிப்புச் செய்தார்கள்.

நல்லை ஆதீனம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து, சைவசமயத்தை வளர்க்கும் வகையிலான பல நல்ல பணிகளை செய்து வருகிறது. சிறுபிள்ளைகளுக்கான தேவார வகுப்புகள், சமயபாட வகுப்புகள், வெள்ளிக்கிழமைகளில் வீதி பஜனை போன்றவற்றுடன் சைவமக்களுக்கான சமய தீட்சையும் வழங்கப்பட்டு வந்துள்ளது. சில வருடங்களின் பின் ஆதீனத்துக்கான கலாமண்டபமொன்று அமைக்கப்பட்டு சைவசமயம் சார்ந்த விழாக்களும், தெய்வீக திருநெறிய மாநாடுகளும், குருபூசை வைபவங்களும் நடைபெற்று வந்தன. நல்லைக் கந்தன் மகோற்சவ காலத்தில் இங்கு இசை நிகழ்ச்சிகளும் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறுவது வழக்கமாகும்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களுடன் இணைந்து, ஆதீன செயற்பாடுகளில் பெரிதும் உதவிவந்த இப்போதைய ஆதீன முதல்வரான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு முதலாவது குருமகா சந்நிதானம் 1979ஆம் ஆண்டில் 'தம்பிரான்' என்ற பதவி நிலையை வழங்கியிருந்தார். சில மாதங்களின் பின்னர் தனது வாரிசாக இளவரசு பதவி நிலைக்குரிய பட்டாபிஷேகத்தை செய்துவைத்தார். 1981ஆம் ஆண்டில் ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம் சமாதியானதால், இளவரசு நிலையிலிருந்த இரண்டாவது சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்ற நாமாகரணத்துடன் ஆதீன முதல்வரானார். இவர் அன்றைய நாளிலிருந்து ஆதீனத்தின் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதில் பெரிதும் பங்காற்றி வருகிறார்.

நல்லை ஆதீனக் கட்டடம் பழமையானதாகவும் வசதி குறைந்த நிலையிலும் இருந்ததால் அதனை மீள்நிர்மாணம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து பெரியபிரித்தானியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்து மக்கள் பலர் உதவ முன்வந்தார்கள். அந்த வகையில் அங்கு திரு. எஸ். பாலசிங்கம் அவர்களை தலைவராகக் கொண்டு நல்லை ஆதீன கட்டட புனருத்தாரண நிர்வாகக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. அதன் ஊடாக நிதியுதவி முதலான சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

2011ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதியன்று புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. அகில இலங்கை இந்து மாமன்றம் இதற்கான இணைப்பாளராகவிருந்து கட்டடப் பணியை மேற்பார்வை செய்துவந்தது. இந்து மாமன்றத்தின் ஆலோசனையின் பேரில் ஊறெழு ஜெயசன்ஜன் கட்டட நிர்மாண நிறுவனத்திடம் கட்டட வேலைகள் ஒப்படைக்கப்பட்டன.

நல்லை ஆதீன புனர்நிர்மாணப் பணி சிறப்பாக நிறைவடைந்து, கீழ்த்தளம் மற்றும் மேல்மாடியைக் கொண்ட கட்டடமாக 2013 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் திகதியன்று காலை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

நல்லைக் கந்தா சரணம் சரணம்!

தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

ஆண்டுதோறும் ஆடிமாதம் பிறந்துவிட்டால் நல்லைக் கந்தனுடைய மகோற்சவ நினைப்பு சைவ மக்களுக்கு வந்துவிடும். உலகெங்கும் பரந்து வாழும் யாழ்ப்பாண சைவ மக்கள் கரங்குவித்து வரம்வேண்டி நிற்கும் தெய்வம் நல்லூர்க் கந்தப்பெருமான். முத்தர்களும் சித்தர்களும் ஞானிகளும் ஒரே முகமாக ஆடிப்பாடி நிற்பது இவ்வாலயத்தின் மகத்துவமாகும். "நீ ஆலயத்துக்குள்ளே போக முடியாவிட்டால் கவலைப்படாதே; வெளிவீதியிலே பரப்பி இருக்கும் மணலிலே உருண்டு விட்டுவா; உனக்கு எல்லாம் கிடைக்கும்" என்று திருவாய் மலர்ந்தவர் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் ஆவர். சுவாமிகளின் அபிமான ஷேத்திரம் நல்லூர் என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

"வரங்கொண்ட உமைமுனைப்பால் மனங்கொண்ட செவ்வாய்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மரைஇரஞ்சும் சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும் எந்தன் கண்ணை விட்டு நீங்காதே"

அற்புதமான இந்தப் பாடலை ஆயிரம் தரம் பாடிப்பாடி ஆனந்தமடைவது முருகபக்தர்கள் கடனாகும். கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக போற்றப்படுபவன் முருகப் பெருமான். "முருகா" என்ற அந்த நாமத்திலேயே தோஷங்கள் நீங்கும் சக்தியுண்டு. "முருகு" என்ற சொல்லிலேயே மூன்று உகரம் வருகிறது. முகரம் என்பது காத்தல் என்ற தத்துவத்தைக் கொண்டது. எனவே செய்தபிழை, செய்கின்ற பிழை, செய்யும் பிழை ஆகியவற்றை ஒருசேர மன்னித்து அருளுபவன் முருகப்பெருமான் ஆவர். சிறையில் அடைக்கப்பட்ட நக்கீரர் பாடிய "திருமுருகாற்றுப்படை" இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககால இலக்கியத்தைச் சேர்ந்தது. பத்துப்பாட்டில் முதற்பாட்டாக பேசப்படுவது திருமுருகாற்றுப்படையே. இங்கே நக்கீரர் முருகப் பெருமானை அறிமுகம் செய்து வைக்குமிடம் அற்புதமானது.

"உலகமுவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு
ஓவற இமைக்கும் சேன்விளங்கவிழ் ஒளி
உறுநர்த்தாங்கும் மதனுடை நோற்றாள்
செறுநர்த் தேர்ந்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வானுதல் கணவன்"

என்று முருகப்பெருமானை அறிமுகம் செய்து வைக்கிறார் நக்கீரர். அதிகாலையில் கிழக்குத் திசையில் உதித்து எழுகின்ற சூரிய பகவானை உவமையாகக் காட்டுகிறார்.

அத்துடன் தன்னை அண்டினோரை அறியாமை போக்கி ஆட்கொள்ளும் திருவடிகளை பகைவர்களை அடக்கி ஆளும் திருக்கரங்களையும் குற்றமற்ற கற்பினையுடைய தெய்வயானை அம்மையாரின் பெருமைசேர் கணவர் என்பதையும் நூலின் முதலிலேயே எடுத்துக் காட்டும் திறன் அற்புதமானது. தொடர்ந்து ஆறுபடை வீடுகளிலும் முருகப்பெருமான் எழுந்தருளி அருள்புரியும் திறன் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. முருகன் அடியார்கள் இந்நூலைப் படித்து பயனடைய வேண்டும் என்று அன்பாக வேண்டிக் கொள்கிறோம். இவ்வாறு சங்கத்தமிழில் முருகன் அருட்பிரவாகத்தை காண முடிகிறது.

அடுத்து புராணத் தமிழில் கச்சியப்ப சிவாச்சாரியார் காட்டும் திறன் படிப்போர்க்கு சுவை பயப்பதாகும். மேலும் பிள்ளைத்தமிழில் முருகப்பெருமானை அருள் ஒழுகக் காண்கிறோம்.

"பொய்யா வழமை தரும் பெருமைப்
பொருநைத் துறையில் நீராட்டி
பூட்டும் கலன்கள் வகை வகையே
பூட்டி எடுத்து முலையூட்டி
மெய்யால் அணைத்து மறுகுதனில்
விட்டார் தம்மை வெறாமல் உனை
வெறுக்கவேறு வகையுமுண்டோ
விரும்பிப் பாலைக் கொழித்தெடுத்து
கையால் அமைந்த சிற்றிலைநின்
காலால் அழித்தல் கடலைகாண்.
காப்பான் அழிக்கத் தொடங்கில்
எங்கள் கவலைஇனியாரோடு யுரைப்போம்.
ஐயா உங்கள் வழி யடியோம்
அடியோம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியும் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே"

இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் புராணங்களில் அற்புதக் கந்தனின் அருட்பெருக்கை காண்கிறோம். நல்லைக் கந்தனை சரணம் சரணம் எனத் தொழுது தொழுது அமைதி பெறுவோம்!

(நன்றி : அருள் ஒளி – ஆடி 2006)

யோகர்சுவாமிகள் நல்லைக் கந்தன் ஆலய சிறப்பை போற்றிப் பாடிய கிளிக்கண்ணி

யோகர் சுவாமிகளின் கிளிக்கண்ணி

ஆன்மா ஒருபோதும் - கிளியே
அழியாதது நாங்கள்
வீண்பாவம் விட்டிடடி- கிளியே
விளங்குநல்லூர் தெரியுதடி 1

காண்பானும் காட்சியும்போய்க் - கிளியே
கண்டபல பொருளும்விட்டு
மாண்பாகச் சிந்தையிலே - கிளியே
வடிவேலைப் போற்றிடடி 2

ஊண்பொருளும் ஒழியுமடி - கிளியே
உலகமெலாம் அழியுமடி
சேண்பொலியுந் திருவடியைக் - கிளியே
சிந்தையிலே போற்றிடடி 3

சங்கோசை கேட்குதடி - கிளியே
தாளமேள முழங்குதடி
எங்கெங்கும் வெளிச்சமடி - கிளியே
ஏந்திழாய் நடந்துவாடி 4

சண்பக மரத்தடியிற் - கிளியே
சாதுக்களின் கூட்டமடி
மண்போட்டால் மண்விழாதே - கிளியே
மனிதரெல்லாங் கூடிக்கொண்டார். 5

மாறிப் பொறிவழிபோய்க் - கிளியே
மாறாட்டம் கொள்ளாதே
ஆறி நடந்துவாடி - கிளியே
அதிசயங்கள் மெத்தவடி 6

தேர்முட்டிப் படிமேலே - கிளியே
செல்லப்ப னென்றசீமான்
ஆர்வமுடன் இருக்கிறான்டி - கிளியே
அங்குபோவோம் வந்திடடி 7

கிட்ட நெருங்கையிலே - கிளியே
கிடுகிடென்று நடுங்குதடி
முட்டாளைப் போலேயவன் - கிளியே
முகமும் விளங்குதடி 8

பித்தனெனப் பலபேரும் - கிளியே
பேசிப்பேசி இகழ்வார்கள்
எத்தினாலும் அவன்மனமோ -கிளியே
எள்ளளவுங் கலங்காதே 9

பத்தியுடன் வந்திடடி - கிளியே
பார்த்தவுடன் அஞ்சாதே
வித்தகஞ்சேர் திருவடியில் - கிளியே
விழுந்துநீ கும்பிடடி 10

நாமறியோ மென்றுசொல்லிக் - கிளியே
நகைசெய்வான் நாணாதே
தாமதம் பண்ணாதே - கிளியே
சடுதியாய்க் கும்பிடடி 11

கோணாத சிந்தையுடன் - கிளியே
கும்பிட்டு நின்றிடடி
வீணான ஆசையெல்லாம் - கிளியே
விட்டோடும் வெற்றியடி 12

ஆரறிவா ரென்றுசொல்லிக் - கிளியே
அதட்டுவான் அஞ்சாதே
பாரறிந்த பித்தனடி - கிளியே
பட்சமுடன் பணிந்துநட 13

கண்டார் நகைப்பரெனக் - கிளியே
கண்மணிநீ அஞ்சாதே
பண்டார வேடமடி - கிளியே
பாடிப் பணிந்திடடி 14

ஒண்டொடியே வந்திடடி - கிளியே
உள்வீதிக்கும் போவமடி
வண்டி வண்டி யாயிளநீர் - கிளியே
வந்து குவியுதடி 15

வகைவகையாய்ப் பச்சரிசி - கிளியே
வாழைக்குலை தேங்காய்கள்
உவகையுடன் கொண்டுவந்து - கிளியே
உதவுகிறார் பார்த்திடடி 16

கர்ப்பூரப் பெட்டிகளும் - கிளியே
கட்டுக்கட்டாய்க் கரும்புகளும்
பொற்பூவும் சந்தனமும் - கிளியே
பொலியுதடி வீதியெல்லாம். 17

கண்டாயோ கார்மயிலே - கிளியே
கந்தன்விளை யாட்டுக்களை
மண்டலங்கள் நடுங்குமடி - கிளியே
மணியோசை கேட்குதடி 18

பந்திபந்தி யாயிருந்து - கிளியே
பார்ப்பார்க ளெல்லாரும்
விந்தைசேர் மந்திரத்தைக் - கிளியே
விளம்புகின்றார் கேட்டிடடி 19

பச்சைப் பசுங்கிளியே - கிளியே
பார்த்தாயோ கதவுகளை
அச்சமின்றி மூடிவிட்டார் - கிளியே
அபிடேகம் ஆகுதடி 20

ஏக மனதாகிக் - கிளியே
எல்லாரும் நிற்கையிலே
வேகமுடன் கதவுகளைக் - கிளியே
வேதியர்கள் திறந்துவிட்டார் 21

அஞ்சடுக்குத் தீபமுதல் - கிளியே
அடுக்கடுக்காய்த் தீபமெல்லாம்
அந்தணர்கள் காட்டுகிறார் - கிளியே
அன்புடனே கும்பிடடி 22

அங்கையிலே பூவெடுத்துக் - கிளியே
அந்தணர்கள் ஆசீர்வாதம்
சங்கையின்றிச் சொல்லுகிறார் - கிளியே
சண்முகனை வேண்டிடடி 23

திருநீறுஞ் சந்தனமும் - கிளியே
தீர்த்தம்பரி மாறுகிறார்
செங்கமல மடமாதே - கிளியே
சேவித்துநீ வேண்டியணி 24

அத்தசாமப் பூசைக்குநாம் - கிளியே
ஆரணங்கே நிற்பமென்றால்
மெத்தநேர மாகுமடி - கிளியே
வீட்டிலேயா ளில்லையடி 25

விரைவாய் நடந்துவாடி - கிளியே
வீணர்தங் கூட்டமடி
மாரிக்கால மானதனால் - கிளியே
மாகவன மாய்நடடி 26

ஓடாதே வழுக்குமடி- கிளியே
உரைத்திடடி ஐந்தெழுத்தை
வாடாதே வீட்டுவாசல் - கிளியே
வந்தோமே திறந்திடடி! 27



உ
வேலும் மயிலும் துணை

"சும்மா இருத்தல்"

(ஓர் அறிமுக ஆய்வு)

சிங்காரவேலு சச்சிதானந்தம், மலாயாப் பல்கலைக்கழகம்

1. குறும்பு செய்யும் குழந்தைகளையோ சிறார்களையோ நோக்கிச் 'சும்மா இரு' என்று சொல்வது தமிழர்களிடையே காணப்படும் ஒரு பொதுவழக்காகும். வேலையில்லாதவர்களையும், பணி ஓய்வுபெற்றுள்ள முதியோர்களையும் நோக்கி, "இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்கும்போது, "சும்மாதான் இருக்கின்றேன்!" என்று அவர்கள் விடையளிப்பதுண்டு. 'சும்மா இருப்பதும்' ஒருவகையில் சுகம்தானே!

2. தமிழரிடையே, 'சும்மா" என்னும் சொல் பல்வேறுபொருளில் வழங்கி வருவதையும் காணலாம். எடுத்துக்காட்டாக, "என்ன காரியமாக வந்தீர்கள்?" என்னும் கேள்விக்குச் சிலர் "சும்மாதான் வந்தேன்!" என்று கூறிய பின்னர் தாம் வந்துள்ள காரியத்தைப் பற்றிக் கூறுவர்!. "வந்த காரியத்தைப் பற்றிச் சும்மா (ஒளிவுமறைவின்றி, அல்லது தடையின்றிச்) சொல்லுங்கள்" என்றோ, ஒருவர் தாம் விரும்பும் ஏதாவது ஒரு பொருளைச் "சும்மா (கட்டணம் யாதுமின்றிக்) கொடுங்கள்!" என்று மற்றொருவரிடம் வற்புறுத்திக் கூறுவதும் உண்டு.

3. இத்தகைய பொருளுடைய 'சும்மா" என்னும் தமிழ்ச்சொல், மலாய் மொழியிலும் 'Cuma', 'percuma', 'bercuma' என்னும் வடிவில் வழங்கிவருவதையும் காணலாம். அம்மலாய் மொழிச்சொற்கள், 'hanya' ('மட்டும்') 'melainkan' ('தவிர"), 'memberikan, atau menerima sesuatu dengan percuma' ('ஒன்றை இலவசமாகக் கொடுத்தல், அல்லது பெறுதல்"), 'sia-sia' ('பயனற்ற") என்னும் பொருளில் வழங்குவதாகத் தெரிகின்றது.

4. ஆயினும், 'சும்மா இருத்தல்' என்னும் தமிழ்ச் சொற்றொடர், பண்டைக் காலந்தொட்டு தமிழர்களிடையே ஆன்மிகநெறியைச் சார்ந்த முக்கியமானதொரு மரபுச் சொற்றொடராக விளங்கி வருவதையும் காணலாம். எடுத்துக்காட்டாக, அருணகிரிநாத சுவாமிகள் அருளிய கந்தரலங்காரம் என்னும் நூலில், 'வெட்சிப் பூக்களாலும்" 'தண்டை" எனப்படும் அணிகலன்களாலும் அலங்கரிக்கப் பெற்ற திருமுருகப்பெருமானின் செந்தாமாரைமலர் போன்ற திருவடிகளைக் காவலாகக் கொண்டு அவற்றை மௌனமாகச் சிந்தித்தவாறு 'சும்மா இருத்தல்" சிறந்ததோர் ஆன்மிக நெறியாகச் சித்திரிக்கப்படுகின்றது:

"வேதஆ கமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்தம் அரணாக அல்லும் பகலும்இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே ஒளித்துச்சும் மாஇருக்கப்
போதாய் இனிமன மேதெரி யாதஒரு பூதர்க்குமே."

(கந்தரலங்காரம், திருப்பாடல் 17)

மேலும், 'பஞ்சபூதங்கள்' எனப்படும் மண், காற்று, நெருப்பு, நீர், ஆகாயம்' ஆகியவற்றாலாகிய பூதவுடலில் வசிக்காமல், வேறு எவரும் அறிந்திராத 'மௌன பஞ்சரம்' எனப்படும் ஒப்பற்ற தனிவீட்டில், சொல்லும் நினைவுமின்றி 'சும்மா இருப்பாயாக!" என்று திருமுருகப்பெருமான் உபதேசித்தருளினார் என்னும் அரிய செய்தியை அருணகிரிநாதர் சுவாமிகள் நம்முடன் பகிர்ந்துகொள்கின்றார்:

" 'ஒரு பூதரும் அறியாத தனிவீட்டில் உரை உணர்வு அற்று
இரு, பூதவீட்டில் இராமல்,' என்றான்"

(கந்தரலங்காரம், திருப்பாடல் 45:1-2)

'சும்மா இரு சொல்லற' என்பது இறைவனின் அருள் மொழியன்றோ!.

5. திருமூலர் நாயனார் அருளிய திருமந்திரம் போன்ற சித்தர் நூல்களில், 'சும்மாயிருத்தல்" என்பது, ஆன்மிக மௌனத்தையும், அடியார்களின் உள்ளத்தின் மௌன மொழியையும் குறிக்கின்றது. [T.A. Ganapathi, "The mysticism of the Tirumantiram, " The Yoga of Siddha Thirumular", (2006): பக்கம் 262].

6. 'மௌனம்', அல்லது 'மோனம்' எனப்படுவது பேச்சும் நினைவுமின்றிச் சும்மாயிருத்தலாகும். அத்தகைய மோனநிலை, வெறுமனே பேசாமல் ஊமையாக இருத்தலனின்று வேறுபட்டதாகும் செயலற்ற தன்மையாகிய மௌனம், 'வாய் பேசாதிருத்தல்", 'மனம் சிந்தியாமலிருத்தல்" என்னும் இருவகைப்படும் வாய் மட்டும் பேசாதிருத்தல் ஊமையேயாகும். வாக்கும் மனமும் ஒன்றாகச் செயலற்ற தன்மையே பயன்தரும் ஆன்மிக மௌனமாகும். 'திருவருள் உடன்நின்று ஆக்கும் அத் தூய்மையின் உண்மையினை அறிவார் யார்?" என வினவுகின்றார் திருமூல நாயனார்.

"வாக்கு மனமும் இரண்டு மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலு மூங்கையாம்
வாக்கு மனமும் மவுனமாம் சுத்தரே
ஆக்குமச் சுத்தத்தை யாரறி வார்களே?"

(திருமூல நாயனார் அருளிய திருமந்திரம், திருப்பாடல் 1859, திரு ப. இராமநாத பிள்ளை அவர்களின் விளக்கவுரையுடன் கூடிய கழக வெளியீடு, மறுபதிப்பு, 1963).

'சும்மா இருத்தல்' என்னும் மோன நிலையில் முத்திப் பேற்றினையும் அடைதல் கூடும். அஃதாவது, ஆங்காரத்தை (ஆணவத்தை) அடக்கி, மோன நிலையில் இருத்தல் மூலம் அழியாத பேரின்ப நிலையைப் பெறலாம் என்பது திருமூல நாயனார் அவர்களின் திருவாக்காகும்:

"நீங்காச் சிவானந்த ஞேயத்தை நின்றிடப்
பாங்கான பாசம் படரா படரினும்
ஆங்கார நீங்கி யதனிலை நிற்கவே
நீங்கா அமுத நிலைபெற லாமே."

(திருமந்திரம், திருப்பாடல் 1579, திரு ப. இராமநாத பிள்ளை அவர்களின் விளக்கவுரையுடன் கூடிய கழக வெளியீடு, மறுபதிப்பு, 1963)

"மோனம்கை வந்தோர்க்கு முத்தியும் கைகூடும்
மோனம்கை வந்தோர்க்குச் சித்தியும் முன்னிற்கும் ..."

(திருமந்திரம், திருப்பாடல் 1585:1-2, திரு ப. இராமநாத பிள்ளை அவர்களின் விளக்கவுரையோடு கூடிய கழக வெளியீடு, மறுபதிப்பு, 1963).

எனவே, மேற்கூறிய 'சும்மா இரு' என்று குழந்தைகளை நோக்கிக் கூறும் தமிழ் வழக்கானது, அக்குழந்தைகள் இளமைப் பருவம் முதலே ஆன்மிகக் கட்டொழுங்கினைப் பற்றித் தெரிந்துகொள்ளும் அரிய வாய்ப்பினைப் பெறுகின்றனர் என்பதை உணர்த்துகின்றதன்றோ!

துணை நூல்கள்:

1. அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த கந்தரலங்காரம் விரிவுரை. உரையாசிரியர்: திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள், சென்னை, வானதி பதிப்பகம், எட்டாம் பதிப்பு, 1986.
2. திருமூல நாயனார் அருளிச்செய்த திருமந்திரம் மூவாயிரம். திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள் எழுதிய விளக்கவுரை சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், மறுபதிப்பு, 1963.
3. GANAPATHY, T.N. "The Mysticism of the Tirumantiram," The Yoga of Siddha TirumUlar. Essays on the Tirumantiram (Quebec, Canada: Babaji's Kriya Yoga and Publications, Inc., 2006), pp.262-264.

(நன்றி: 'கௌமாரம்')

கதிரைமலை இராச்சியம்



புலவர் பண்டித பொ. ஜெகந்நாதன்

அரசாட்சி ஆரம்பம்

சாலிவாகன சகாப்தம் 717ல் (பொ.ஆ.பி. 795) விஜயராசனின் சகோதரன் மரபில் பிறந்த உக்கிரசிங்கன் என்னும் அரசன் வடதிசையில் இருந்து வெகு திரளான சேனைகளைக் கொண்டு வந்து போராடிச் சில தலைமுறையாய் இழந்து போன இவ்விலங்கை அரசாட்சியில் அரைவாசி வரைக்கும் பிடித்துக் கதிரைமலையிலிருந்து அரசாண்டு வந்தான் தென்னாடுகளை வேற்றரசன் ஆண்டுவந்தான். (யா.வை.மா.பக். 13) என்று வைபவமாலையார் சொற்றனர். இக்கூற்றுகளைச் சுட்டி யா.வை. விகாரர் பக்கம் 48ல் யாழ்ப்பாண அரசனின் ஆதி இராசதானி கதிரைமலை அல்லது கதிருமலை எனும் இடமாய் அமைந்தமை உண்மைப் பகுதியாகலாம். எனவும் ஆயின் அம்மாலை யார் ஆண்டைச் சகாப்தம் 717 என்பது பொருந்தாதெனவும் மொழிந்து அப்பாலும் மொழிவதாவது யாழ்ப்பாண வைபவ மாலை தந்திருக்கின்ற பூர்வகால ஆண்டுக் கணக்குகளைப் பெரும்பான்மை ஒப்புகின்றனவராகிய இராசநாயக முதலியார் எட்டாம் நூற்றாண்டு தொடக்கம் (பொ.ஆ.பி. 795 தொடக்கம் கதிரைமலையில் உக்கிரசிங்கன் இருந்து யாழ்ப்பாண அரசியற்றினான் எனவும் சொல்லுகிறார். நிற்க மேற்படி கதிரைமலைத் தலைநகர் இருந்தாகக் கருதப்படும் சுன்னாகப் புகையிரத ஸ்தானத்துக்கருகே இருக்கும் சிவன்கோவில் கதிரைமலைச் சிவன் கோவில் என்று அழைக்கப்படுகிறது.

யா.வை. விகாரர் பக். 48ல் வைபவமாலையார் சுட்டுகின்ற கதிரைமலையும் கந்தரோடையாகலாம். இவ்வூருக்கணிமையின் சுன்னாகத்தில் கதிரைமலை என்னும் மேடு அபரதஸ்தானத்துக்கும் சந்தைக்குமிடையில் இருத்தலையும் கவனிக்க என்கின்றார். எனவே மேற்படி கதிரை மலையைத் தலைநகராகக் கொண்டு உக்கிரசிங்கன் பொ.ஆ.பி. 795 தொடக்கம் அரசு புரிந்தான் என்று வைபவமாலை சொல்லுகிறது. இதுவேதான் யாழ்ப்பாண நாட்டின் கண்தோன்றிய முதற் தலைநகரம் என்றறிக.

தார்க் கடம்பன் பேர்முருகன் றாமோ தரன் மருகன்
சீர்க்குரவன் தேவர் திரட்டுக்கொருவன் - சூர்பகையை
மாற்றும் குகன் குழகன் வாய்ந்தவடியார்துயரை
யாற்றுங் குமரனருளாலே — போற்றுதவர்
வாய்ந்த கதிரைமலை வாழு மடங்கன்முகத்
தாய்ந்த நராகத் தடல் ஏறு சாய்ந்து கங்சூல்
போவதன்முன் னேகியந்தப் போர் வேந்தன் மாமகடன்
காவல் கடந்தவளைக் கைப்பிடித்தே — ஆவலுடன்
கொண்டேகித் தன்பழைய சேலமலை மா முழைஞ்சில்
வண்டார் குழலை மணம்பு ணர்ந்து

(கை.மா.கண். 10-16)

கீரிமலைப் பக்கத்திலே கூடாரம் அடித்திருந்த வல்லியைப் பொழுதுபட்டு இரவு நேரத்தில் கைபிடித்து அவ்விரவு கழியமுந்தி தன் கதிரமலைக்குக் கொண்டு போனான் என்று குறிப்பிடப்படுவதால் அப்படி இரவு கழிவதன் முன் வரக்கூடிய இடைத் தூரத்தில்தான் மேற்படி சுன்னாகக் கதிரைமலை இருப்பதையறிக. எனவே கதிரைமலை இடநிச்சயம் சரி என்றறிக. நிற்க, எனவே யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசுஆரம்பம் 8ம் நூற்றாண்டென்று அறிக. இவ்வுக்கிரசிங்கன் அரசு சிற்றரசு. பேரரசாரம்பம் பொ.ஆ.பி.10ம் நூற்றாண்டு அது நல்லூர்ப் பேரரசு. யாழ்ப்பாணத்தில் சிற்றரசு 8ம் நூற்றாண்டிலும் பேரரசு 10ம் நூற்றாண்டிலும் என்று யாழ்ப்பாண ஆதாரநூல்களில் சொல்லப்பட்டிருக்க இவற்றினை ஆதாரம் காட்டி மறுக்காமல் ஆதாரம் இல்லாமல் வாளா 13ம் நூற்றாண்டென்பது அர்த்தமற்ற பேச்சென்க.

கதிரைமலை இராச்சியமும் காலமும்

ஒரு நகரைத் தலைநகராகக்கொண்டு ஒரு மன்னன் தன்னாணைக்குட்பட்ட நாட்டினை ஆட்சி புரிந்தான் என்றால் அந்நாடு அந்நகரின் இராச்சியத்தைச் சேர்ந்தது. அம் மன்னன் அத் தலைநகர் இராச்சியத்து மன்னன் அவன் ஆண்டகாலம். அத் தலைநகர் இராச்சியக் காலம். எனவே ஒரு மன்னன், அவன் அரசிருந்த தலைநகர் அவன் அரசிருந்தகாலம், அவன் அரசாட்சி பண்ணிய நாடு, அவன் அரசியற் பரிபாலனம் பற்றிய செய்தி, என்றின்னவும் பிறவுமான சரித்திர விடயங்கள் அத்தலைநகர் தொடர்பிலே அதிகரித்து வருகின்றன. ஈண்டுப் பேசப்புகுவது கதிரைமலைத் தலைநகரும் அதனுட் தொடர்புபெற்ற விடயங்களுமாதலாலே அவை எல்லாமடங்கும் இவ்வதிகாரத்துக்குக் கதிரைமலை இராச்சியமும் காலமும் என யாமே பெயர் தந்து பேசப்புகுகின்றோம். மேல்வரும் இராச்சியங்களுக்கும் விளக்கம் இஃதே.

இக்கதிரைமலை இராச்சியமாவது, இதன் முன்விளக்கத்துக்காக வைபவமாலையிற் சொல்லப்பட்டவைகளை ஈண்டைக்கு வேண்டப்படும் அளவுக்குச் சுருக்கமாகத் தருவோம்.

யாழ்ப்பாணத்தில் பண்டைநாட்களில் இருந்து, மறைந்து போன தலைநகரங்களுள் ஒன்று இக் கதிரைமலை நகரம் ஆகும். இந்தியாவின் தென்பகுதியும் இலங்கையின் வடபகுதியும் அண்மித்து இருக்கின்ற இயற்கை

வாய்ப்பதனால் அவ்விரண்டு நாட்டு வரலாறுகளும் கலந்து ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையாக இருக்கின்றன. அதாவது தென்னிந்தியாவில் உள்ள சோழ-பாண்டிய-சேர வரலாறுகளும் இவ்விலங்கையின் உள்ள வடபகுதியில் உள்ள யாழ்ப்பாண இராச்சிய வரலாறும் ஒன்றோடொன்று சரித்திரத் தொடர்பு கொண்டவைகளாக இருக்கின்றன என்பதே யாழ்ப்பாண வரலாறே. ஒரு சோழ இராசகுமாரியில் இருந்துதான் ஆரம்பித்து உருவாகின்றது. இங்கே அவ்வரலாறுகளைக் கண்டு கொள்வோமாக.

யாழ்ப்பாண வைபவமாலை சொல்லும் விபரங்களைக் காண்போம்.

வங்கதேசத்துச் சத்திரிய மரபிற்பிறந்து, இலாட தேசத்தை அரசாண்ட சிங்கவாகுவின் குமாரன் விஜயன் என்பவன் மகா துஷ்டனாக இருந்ததினால், அவனைப் பிதாவாகிய சிங்கவாகு துரத்திவிட...... அவன் காசிக்குப்போய் அங்கே இருந்தான்.

அவ்விடத்தில் விஜயகுமாரனுக்கு "நீ இலங்கை நாட்டின் மத்தியிலுள்ள கதிரைமலையிற் போயிரு அந்தநாடு உனக்குடையது" எனச் சொப்பனத்தில் உத்தரவு கிடைத்ததினால், அவன் நீலகண்டாசிரியர் என்னும் குருவையழைக்க, அவர் தமது பத்தினியாகிய அகிலாண்டவல்லியம்மாளையும், புத்திர புத்திரிகளையும், மருமக்களையும் கூட்டிக் கொண்டுவந்து தனது பரிவாரங்களுடன் கதிரைமலையிற் சேர்ந்தான்.

அக்காலத்தில் இலங்கையின் குடிசனங்கள் யாருமில்லாததனால் விஜயராசன் குடிகளை அழைத்துக் குடியேற்றக் கருதிப் பல முயற்சிகளைச் செய்து பார்த்தான்...... குடிகளை வசப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தினால் விஜயராசன் சமய வழிபாட்டைக் குறித்துச் சனங்களுக்கு இஷ்டம் கொடுத்திருந்தும், தன் சமயாசாரவொழுக்கத்தைத் தவறாமற் காத்துக் கொண்டான். அரசாட்சியை ஆரம்பிக்கு முன்னமே அவன் தன் அரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலுதிக்கிலும் நாலு சிவாலயங்களை எழுப்பிக் கொண்டான்.

வடதிசைக்குக் கீரிமலைச் சாரலில் திருத்தம்பலை என்னும் பதியிலே, திருத்தம்பலேசுவரன், திருத்தம்பலேசுவரி கோயில்களையும் அவைகளின் சமீபத்திலே கதிரையாண்டவர் கோவிலையும் கட்டுவித்து அவ்வாலயங்கட்குப் பூசனை நடாத்தும்படி நீலகண்டாசாரியனின் மூன்றாங் குமாரன் வாமதேவாசிரியர் என்னும் காசியிற் பிராமணனையும் அவன் பத்தினியாகிய விசாலாட்சி அம்மாளையும் அழைப்பித்து அக்கிராகாரம் முதலிய வசதிகளையுங் கொடுத்து இருத்திடவைத்தான். அக்கோவில் அவ்விடத்தில் தோன்றிய காரணத்தால் அந்தக் கிராமம் கோவிற் கடவை எனப் பெயர் பெற்றது. "முற்காலத்திலே நகுலமுனியென்னும் ஓர் இருடி அங்குள்ளமலைச்சாரலிலேசிலகாலந்தங்கியிருந்து அங்குள்ள கீரிமலைத் தீர்த்தமாடி வந்தபொழுது தன் முகத்துக்கிருந்த அங்கவீனம் நீங்கிப்போனது கண்டு அத்தல விசேடத்தையும் தீர்த்த மகிமையுங் குறித்து வியப்புற்று அவ்விடமே தனக்குத் தவம் செய்தற்கேற்ற இடமென்று அம்மலை முழைஞ்சிலே வாசஞ் செய்து கொண்டிருந்தார். அம்முனிவனுக்குக் கீரிமுகம் மாறிய காரணத்தால் அம்மலையை கீரிமலை என்பார்கள். விஜயராசன் அவ்விடத்திற் சிவாலயங்கட்டுவித்தபின் நகுல முனிவர் அவ்வாலயங்களிற்றங்கியிருந்து வழிபாடு பண்ணி வந்தார். அதனால் திருத்தம்பலேசுவரர் கோவிலை நகுலேசுவரர் கோவிலென்றும் திருத்தம்பலேசுவரியம்மன் கோவிலை நகுலாம்பிகையம்மன் கோவிலென்று பெயரிட்டு வழங்கி வந்தார்கள் விஜயராசன் திருப்பணி நிறைவேற்றி முடிந்தபின் பிரயாணப்பட்டுத் தன்னிராச்சியம் முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு கதிரைமலையைச் சேர்ந்தான். (யா.வை.மா.பக். 1-8)

அப்பால் விஜயன் தம்மனா என்னுமிடத்தை இராசதானியாக்கித் தன் மனைவியையும் இருபிள்ளைகளையும் தள்ளிவிட்டுப் பாண்டி நாட்டுப் பெண்ணெருத்தியை விவாகம் பண்ணிச் சிலவருஷ காலம் அரசாண்டு புத்திரசந்தானமின்றி இறக்க, அவன் மந்திரி இராச்சியத்தைத் தளம்ப விடாமல் ஒரு வருடம் காப்பாற்றி, பின்பு விஜயராசன் சகோதரன் குமாரனாகிய பாண்டுவசு என்பவனை அழைத்து வந்து அரசனாக்கினான்.

இவன் குலத்து அரசர் அதன்பின் அனேகத் தலைமுறையாக, இவ்விலங்கையை ஆண்டு வந்தார்கள் (யா.வை.மா பக் 8)

உக்கிரசிங்கன்

இவன் விஜயராசனின் சகோதரன் பாண்டுவசு என்பவன் மரபைச் சேர்ந்தவன். வைபவமாலை இவனை "சாலிவாகன சகாப்தம் 717ல் (பொ.ஆ.பி. 795) விஜயராசனின் சகோதரன் மரபிற் பிறந்த உக்கிரசிங்கன் என்னும் அரசன் வடதிசையில் இருந்து வெகு திரளான சேனைகளைக் கொண்டு வந்து போராடிச் சிலதலைமுறையாய் இழந்துபோன இவ்விலங்கை அரசாட்சியில் அரைவாசி வரைக்கும் பிடித்துக் கதிரைமலையில் இருந்து அரசாண்டு வந்தான்... தென்னாடுகளை வேற்றரசன் ஆண்டுவந்தான்...... இவன் நகுலேசர் கோயிலைத் தரிசித்துக் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி, முற்காலத்திலே சோழராசன் தான் தீர்த்தமாட வந்திறங்கியிருக்கும் காலத்திலே மாளிகை கட்டுவித்திருந்த வளவர் கோன் பள்ளமென்னும் இடத்திலே பாளயமிட்டிருந்தான். (யா.வை.மா பக் 13-14)

இங்ஙனம் உக்கிரசிங்கன் வந்திருப்பதை அறிந்த தொண்டை நாட்டை அரசாண்ட தொண்டமான் என்னுமரசன் கேள்விப்பட்டுப் பரிவாரங்களுடன் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி இவ்வுக்கிரசிங்கனைச் சந்தித்து இந்த நாட்டில் விளையும் உப்பைத் தனக்கு வருடந்தோறும் விலைக்குத் தரும்படியும் அவ்வுப்பு விளையும் இடங்களுக்குச் சமீபமாகத் தம் மரக்கலங்களைக் கொண்டு போய் உப்பேற்றவும், மாரி காலங்களில் அம்மரக்கலங்களை ஒதுக்கிவிட்டு அம்மரக்கலமோட்டிகள் தங்கவும் வசதியாக இருக்கும் பொருட்டு வடகடலில் இருந்து ஓர் ஆறு வெட்டுவித்துக் கொள்ளவும் உத்தரவு கேட்டான். உக்கிரசிங்க மகாராசன் உத்தரவு கொடுக்கத் தொண்டமான் அங்கிருந்த சிற்றாற்றை மரக்கலங்கள் ஓடத்தக்க, ஆழமும் விலாசமும் உள்ளதாகவும் ஒதுக்கிடமுள்ளதாகவும் வெட்டுவித்துத் தன்னூருக்கு மீண்டான். அதுமுதல் இதுவரைக்கும் அவ் ஆறு தொண்டமானாறு என்று அழைக்கப்படுகின்றது.

அப்பால் உக்கிரசிங்க மன்னன் கதிரைமலைக்குத் திரும்பினான். வன்னியர்கள் வந்து தங்கள் வன்னிநாடுகளைத்

திறை கொடுத்து ஆள உத்தரவு கேட்டார்கள். அரசன் தன் இராச்சியமெங்கும் தன்னாணையே செல்லவும் தனக்கு வரவேண்டிய திறையைக் கோணேசர் கோயிலுக்குக் கொடுக்கவும் உடன்பாடு பண்ணுவித்துக் கொண்டு கதிரைமலைக்குச் சேர்ந்தான். (யா.வை.மா.பக். 13-15)

மாருதப்பிரவல்லி

மாருதப்பிரவல்லி, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கட்டியமை இக்கோவிலின் புரதான வரலாறு யாழ்ப்பாண ஆதார நூல்களாகிய வைபவமாலை, கைலாயமாலையில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. சாலிவாகன சகாப்தம் 717ல் (பொ.ஆ.பி. 795) விஜயராசன் சகோதரன் மரபிற்பிறந்த உக்கிரசிங்கன் என்னும் அரசன் வடதிசையில் இருந்து வெகுதிரளான சேனைகளைக் கொண்டு வந்து போராடிச் சில தலைமுறையாய் இழந்துபோன இவ்விலங்கை அரசாட்சியில் அரைவாசி வரைக்கும் பிடித்துக் கதிரைமலையிலிருந்து அரசாண்டு வந்தான். (வை. பக்.13)

"இவன் காலத்திலே சோழதேசாதிபதியாகிய திசையுக்கிர சோழன் மகள் மாருதப்பிரவல்லியென்பவள் தனக்கிருந்த குன்ம வியாதியால் மெலிந்தவளாய் வியாதியை வைத்தியர்கள் ஒருவரும் சுகமாக்க முடியாததினால் இனித்தீர்த்த யாத்திரையாகுதல் செய்து பார்த்தால் சுகம் வரக்கூடும் என்றெண்ணிக் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து புறப்பட்டு அங்கும் இங்கும் போய்த் தீர்த்தமாடி வருகையில் சாந்தலிங்கம் என்னும் ஒரு சன்னியாசி கண்டு உன்வியாதி பண்டிதர் ஒருவராலும் குணமாக்கத்தக்கதல்ல. நீ. இப்பொழுது எடுத்த முயற்சியே உனக்குச் சுகம்தரத்தக்கது. இலங்கையின் வடமுனையிலே கீரிமலை என்றொரு மலையுண்டு. அது சமுத்திரதீரத்தமுள்ளது அங்கே உவர்ச்சல மத்தியில் சுத்ததீர்த்தமும் மலையருவித் தீர்த்தங்களிலும் முக்கிய தீர்த்தமாயிருக்கின்றது. அதிலே நீ போய் நீராடித் தங்கியிருந்தாற் சுகமடைவாய் என்று சொல்ல அச்சொற்படி மாருதப்பிரவல்லி புறப்பட்டுத் தாதிமாரும் தோழிமாரும் சேனாவீரரும் சூழ்ந்துவரக் கீரிமலைச்சாரலில் வந்திறங்கிக் குமாரத்திபள்ளம் என்னும் இடத்திற் பாளயம் போட்டிருந்து நகுலமுனிவரைக் கண்டு சாட்டாங்கமாக வணங்கி அவரால் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு அத்தல விசேடத்தையும் தீர்த்த மகிமையையும் அத்தீர்த்தத்திலாடித் தனக்குக் கீரிமுகம் மாறின செய்தியையும் அம்முனிவர் சொல்லக் கேட்டு மகாசந்தோஷத்துடன் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனம் செய்து வந்தாள். சில காலத்தில் அவளுக்கிருந்த குன்மவலியுந் தீர்ந்து குதிரைமுகமும் மாறியது மாறவே மாருதப்பிரவல்லியின் யௌவன சொருபத்தைக் கண்டவர்கள் ஆச்சரியங் கொள்ளாமல் இருந்ததில்லை.

(வை.மாலை.பக்.15-17)

உக்கிர சிங்கன் மாருதப்பிரவல்லியை விவாகம் செய்ய நினைத்தல்

அக்காலத்திலே கதிரை மலையில் இருந்த உக்கிரசிங்க மகாராசன் நகுலேசர் கோவிலைத் தரிசிக்க மூன்றாந்தரம் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி வளவர் கோன்பள்ளத்தில் பாளயம் போட்டிருந்தான். அவன் மாருதப்பிரவல்லியை நகுலேசர் சந்நிதானத்தயலிலே கண்டு அவள் பேரழகினால் மயங்கி மிகுந்த ஆச்சரியங் கொண்டு தான் அவளை விவாகம் செய்யவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான்.

(யா.வை.மா.பக்.18)

மாருதப்பிரவல்லி மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலைக் கட்டுதல்

மாருதப்பிரவல்லி தனக்குக் குதிரைமுகம் நீங்கின காரணத்தாற்கோவிற்கடவைஎன்னுங்குறிச்சிக்குமாவிட்டபுரம் என்னும் பெயர் சூட்டி அவ்விடத்திலே கந்தசுவாமி கோயில் கட்டுவிக்க ஆரம்பித்து அதற்கு வேண்டிய சகல வஸ்துக்களும் பிராமணரும் வரும்படி பண்ணவேண்டுமென்று பிதாவாகிய திசையுக்கிர சோழனுக்குத் திருமுகம் அனுப்பினாள். அப்பொழுது திசையுக்கிரசோழன் சகல ஆயத்தங்களும் பண்ணிக்கொண்டு இலங்கையிலேயுள்ள கீரிமலை நாட்டுக்கனுப்புவதற்குத் தில்லை மூவாயிரவரில் ஒருவரைத் தன்னிடத்துக்கு அனுப்பி வைக்கும்படி சிவாலயத் தலைவனுக்குக் கட்டளை அனுப்பினான். அப்பொழுது சிவாலயத் தலைவன் பிராமணர் தோணி ஏறுவதும் இலங்கையிற் குடி இருப்பதும் மாகா தோஷமாக இருக்க அரசன் இப்படிக் கட்டளையனுப்பி இருக்கிறானே நான் இதற்கு என்ன செய்யலாம் என்று பயந்து தில்லைச் சிவாலயத்திலே மூன்று நாட் பட்டினி கிடந்தான். அப்பொழுது கனவிலே "கீரிமலைச் சாரலானது அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தாலும் சிவாலய மகத்துவத்தினாலும் மகாதிவ்விய தலமாகவேயிருக்கின்றது. காசியிற் பிராமணரும் அங்கேயிருக்கிறார்கள். பிராமணர் தங்கள் நியமநிட்டை வழுவாமற் செய்வதற்கு மரக்கலங்களில் இராத்தங்காமல் ஏறலாம். நகுல முனிவர் அத்தல விசேடத்தை நோக்கி அவ்விடத்தில் இருந்து தவம் பண்ணும் போதே அத்தல விசேடத்தைக் குறித்து யோசிக்க வேண்டியதென்ன யாதொரு யோசனையுமின்றியனுப்பலாம்" என்று உத்தரவு கிடைத்தது. (யா.வை.மா.பக். 19-20)

பெரியமனத்துள்ளார் வருகை

அப்பொழுது சிவாலயத் தலைவன் பெரிய மனத்துள்ளார் எனுந் தீட்சதரை சோழராசனிடம் அனுப்பி வைக்கச் சோழராசன் சகல தளபாடங்களையும் கந்தசுவாமி வள்ளியம்மன். தெய்வ நாயகி அம்மன் விக்கிரகங்களையும் பெரிய மனத்துள்ளார் கையில் ஒப்புவித்து அனுப்பி வைத்தான். தீட்சதர் அவைகளையும் கொண்டு கசாத்துறை (காங்கேயன்துறை) என்னும் துறையில் வந்திறங்கினார். கந்தசுவாமி விக்கிரகம் வந்திறங்கின காரணத்தால் அந்தத்துறைக்குக் காங்கேசன்துறை எனப் பெயராயிற்று. (யா. வை.மா.பக்.20-22)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் பெருமை

மாருதப்பிரவல்லி என்னும் சோழ இராசக்குமாரத்தியால் இவ்வாலயம் கட்டப்பட்டதும் கந்தசுவாமி விக்கிரகம் முதலான விக்கிரகங்களெல்லாம் தந்தையாகிய சோழ இராசனால் அனுப்பிவைக்கப்பெற்றும் பெரியமனத்துள்ளார் என்னும் சிதம்பர தீட்சகரால் சாஸ்திரமுறைப்படி பிரதிஷ்டை செய்யப்பெற்றதும் அவரால் துவசாரோகணம்

செய்து திருவிழாச்செய்யப்பெற்றதும் இக்கோயிலின் தனிப்பெருமைக்குரிய செய்திகளாம். அன்றியும் இவ்விலங்கையிலே முதன்முதல் துவசாரோகணம் செய்து திருவிழாச் செய்யப்பெற்ற புண்ணிய தலம் இம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்தான் என்பது வைபவமாலையைக் கொண்டறியக் கிடைக்கின்றது.

மாருதப்பிரவல்லியின் மண நிகழ்ச்சி

ஒரு நாளிரவில் மாருதப்பிரவல்லி தேவாலயத் திருப்பணியைப் பற்றிய ஆலோசனையுடன் சப்பிரமஞ்சத்திற் சாய்ந்து விழிப்பாய் இருக்கும் சமயத்திலே அர்த்த சாமவேளையில் உக்கிரசிங்கமகாராசன் பாளயங்களையும் அரணிப்பான சேனைகளையும் கடந்து அவளிருந்த பாளயத்துட் புகுந்து அவளை எடுத்துத் தன் பாளயத்துக்குக் கொண்டு போய் வைத்துக் கொண்டான். பொழுது விடிந்தபின் மாருதப்பிரவல்லியின் தாதிமாரும் தோழிமாரும் காவற்சேனைகளும் அவளைக் காணாததினால் மனங்கலங்கித் தேடிப்போய் உக்கிரசிங்க மகாராசன் பாளயத்தில் இருந்த செய்தியறிந்து அவனிடத்தில் சென்று நாங்கள் என்னசெய்யலாம் என்று கேட்க அவள் என் பட்டத்துத் தேவியாயினாள். நீங்கள் போய் இந்தசுப சோபனச் செய்தியைப் பிதாவுக்கறிவியுங்கள். என்று சொல்லி வழிச்செலவுக்குப் பொருளுங் கொடுத்து அனுப்பிவிட்டான். அதன்பின் உக்கிரசிங்கன் கதிரைமலைக்குப் போக யோசித்தபோது மாருதப்பிரவல்லி கந்தசுவாமி கோயிற் திருப்பணி நிறைவேற்றி முதலாம் உற்சவச் சிறப்புக் கண்டல்லாமல் அவ்விடத்தை விட்டுப் போகப்பிரியமில்லை என்றதனால் அப்பிரயாணத்தை நிறுத்தித் திருப்பணியை நிறைவேற்றி ஆனி உத்தரத்தன்று துவஜாரோகணந் தொடங்கி உற்சவத்தை நிறைவேற்றிக் கொண்டு கதிரைமலையிற் சென்று பணிவாகச் சடங்கையும் நிறைவேற்றிச் சகல சௌகரியங்களையும் அனுபவித்திருந்தாள்.

(யா.வை.மா.பக்.21-22)

அரசகுமாரி தன்கண்காணிப்பில் கட்டுவித்தும் கும்பாபிஷேகம் செய்து வைத்தமை பற்றி நகுலகிரிப் புராணத்தில் பின்வருமாறு விபரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

1. நீள்பெருங் கோயிலும் நிகரில் கோபுரஞ்
சூழ்தரு நெடுமதில் சுடர்தன் காண்புறத்
தாழ்வகன் றிடுமறு கோடுந் தந்துகன்
நாளினின் கந்தவேள் தன்னை நயப்புடன்

2. செப்பரும் கும்பதா பனங்கள் செய்திடா
தொப்பிலா மறைமுறை யொளிரு நல்லருன்
வைப்பினா வாகன பதிட்டைதன்னைமுன்
தப்பிலார்க் குமரவேள் தனக்குச் செய்தனள்

உக்கிரசிங்கராசனுக்கும் மாருதப்பிரவல்லிக்கும் கதிரைமலையிற் சோழ அரச பரம்பரை மரபிற்கமைவாக வெகு உற்சாகத்தோடும் விமரிசையாகவும் திருமணம் நடந்தேறியது. சிலகாலஞ் சென்றபின் மாருதப்பிரவல்லி தயாத்திரை செய்து வரும்போது கோணேசகிரிக்குச் சென்று தீர்த்தமாடிக் கோணேசரரையும் தரிசித்து அங்குள்ள பூசகருக்குப் பட்டாடை முதலிய பரிசுகளையும் வழங்கி அவர்களது ஆசிகளைப் பெற்றாள் இப்படியே சென்ற சென்ற இடங்களெல்லாம் தான தர்மங்கள் செய்தும் மீண்டும் நகுலகிரிக்கு வந்து நெடுக்காலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமியாரை வணங்கி நல்லருள் பெற்றுக்கொண்டு கதிரை மலைக்கே புறப்பட்டாள்.

(நன்றி : 'யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்', புலவர் பண்டித பொ. ஜெகந்நாதன், வேலணை, யாழ். இலக்கிய வட்ட வெளியீடு 1987)

நல்லூர் கந்தசுவாமி கோயில் வரலாற்றில் சில துளிகள்

கி.பி.944 ஆம் ஆண்டு பராந்தக சோழன் (2ஆம் பராந்தகன்) இலங்கைக்குப் படையெடுத்துச் சிங்களவரசனான 4ஆம் உதயனைப் புறங்கண்டான் என்றும் சிங்கைநகர் அரசனைக் கொன்றான் என்றும் வரலாற்றுக் குறிப்புள்ளது(இந்திரபாலா, கா.1969, 70). சிங்கைநகர் மன்னனைக் கொன்ற பராந்தகசோழன் தனது பிரதிநிதியை உத்தரதேசத்தை நிர்வகிக்க நியமித்துள்ளான். இச்சோழ மன்னனின் பிரதிநிதியாகப் புவனேகவாகு என்பான் சிங்கைநகரில் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளான். அவன் பூநகரியில் இன்று குடமுருட்டியாற்றுக்கு மேற்குக் கரையில் அமைந்துள்ள நல்லூர் என்ற பகுதியில் தனது மாளிகையை அமைத்திருக்க வேண்டும். உண்மையில் இன்று கிடைக்கின்ற ஆதாரங்களிலிருந்து பூநகரியில் இருக்கின்ற நல்லூர் என்ற பிரதேசமே தமிழர் அரசின் புராதன நல்லூர் ஆகும் எனக் கொள்வதில் தவறில்லை. எனவே புவனேகவாகு என்ற இந்த முதலாவது அரசப் பிரதிநிதி கி.பி.948இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை முதன்முதற் கட்டினானா? அவ்வாறு கட்டியிருந்தால் அது நிச்சயமாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள நல்லூராக இருக்க வாய்ப்பில்லை. சிங்கைநகர் அமைந்திருந்த பெருநிலப்பரப்பிலுள்ள நல்லூராகவே இருந்திருக்க வேண்டுமெனத் துணியலாம். கைலாயமாலைப் பாடலின்படி கி.பி.948இல் முதலாவது நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டது என முடிவுசெய்தால் அக்கோயில் பூநகரி நல்லூரில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

க. குணராசா

(நன்றி: நல்லைக் குமரன் மலர் -2003)

போர்த்துக்கேயர் வருகையும் ஈழத்தின் இருண்டகாலமும்

-கானா பிரபா -

பொது ஆண்டுக்குப் பின் 1505ல் போர்த்துக்கல் தேசவாசிகள் சிலர், பிராஞ்சிஸ்கோ தே அல்மேதா என்பவனைத் தலைவனாகக் கொண்டு காலித் துறைமுகத்தை அடைந்தனர். காலித் துறைமுகம் இலங்கையின் தென்மேற்குப் பிராந்தியத்தில் உள்ளது. அப்போது தர்மபராக்கிரமபாகு என்பவன் தென் இலங்கை அரசனாய் கோட்டைக்காடு என்னும் நகரத்திலிருந்து அரசாட்சி செய்தான். போர்த்துக்கேயர்

ebastian Münster ஆல் 1588ல் வரையப்பட்ட ஈழ வரைபடம்

அவனிடம் அனுமதி பெற்று பண்டசாலை ஒன்றைக் கட்டினர். போர்த்துக் கேயரைப் பறங்கியர் என்பது அக்காலம் தொட்ட வழக்கு.

துருக்கியப்படை ஒன்று அப்போது சிலாபம் முதலான பகுதியை முற்றுகையிட வந்து தோற்றுப் போனது. பின்னர் 1517 மற்றும் 1520 ஆம் ஆண்டுகளில் மீண்டும் இருமுறை படையெடுத்து வந்து பறங்கியர் கட்டிய கோட்டையை முற்றுகையிட வந்து அதிலும் தோல்வியைத் தழுவினர்.

> ...உண்மையில் சங்கிலி ஓர் ஆளுமை மிக்க மன்னனாகவும், நாட்டுணர்வு மிக்க தலைவனாகவும் தீர்க்கதரிசனமும் தீவிரமும் கொண்ட ஓர் ஆட்சியாளனாகவும் நடந்து கொண்டான்...

பின்னர் தாம் வந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகப் போர்த்துக்கேயர் சிங்கள அரசனாகிய புவனேகபாகுவின் மகனைக் கிறிஸ்தவனாக்கி மதம் பரப்பும் எண்ணத்தோடு புவனேகபாகுவைத் தற்செயலாகச் சுட்டது போலச் சுட்டுக் கொன்றனர்.

தம் எண்ணம் போலத் தர்மபாலாவைக் கிறிஸ்தவனாக்கினர். அரசன் எவ்வழி மக்களும் அவ்வழி என்பது போல அரச பிரதானிகளும், மக்களுமாக கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றத் தொடங்கினர். பின்னர் பறங்கிகள் மெல்ல மெல்ல இலங்கைத் தீவின் மற்றைய இடங்களையும் தமதாக்க முனைந்து வெற்றியும் பெற்றனர்.

கனகசூரிய சிங்கையாரியான் இழந்த தன் மகுடத்தை மீண்டும் சூட்டிக் கொண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பின் அவனது மூத்த மகனான பரராஜசேகரன் கி.பி 1478 ஆம் ஆண்டு சிங்கைப் பரராஜசேகரன் என்ற சிம்மாசனப் பெயரோடு மன்னனானான். நல்லூரை மேலும் சிறப்புமிக்க நகராக்கியவன் சிங்கைப் பரராஜசேகரன்.

சப்புமல் குமரயாவின் படையெடுப்பால் அழிவுற்ற ஆலயங்களை இவன் புனருத்தாரணம் செய்திருப்பதாகக் கொள்ள இடமுண்டு. சட்டநாதர் கோயில் வெயுலுகந்தப் பிள்ளையார் கோயில், கைலாயநாதர் கோயில், வீரமாகாளியம்மன் கோயில் என்பனவற்றை இவன் மீண்டும் புனரமைத்தான் எனக் கொள்ளல் வேண்டும்.

பரராஜசேகர மன்னனுடைய ஆட்சியைப் பொற்காலம் என்றே ஈழவரலாற்று நூல்கள் வருணிக்கின்றன. இப்படிப் பரராஜசேகரன் ஆட்சி செய்து வருகையில் சுபதிருஷ்டி முனிவர் என்பார் அவன் சபைக்கு வந்தார். அவன் அவரை வணங்கி வரவேற்று. முனிவரிடம்

"அடியேன் இவ்விராச்சியத்துக்கு இனி யாது நிகழுமென்றறியப் பேராசையுடையேன். திரிகாலமும் உணர்ந்த நீங்கள் சொல்ல வேண்டும் " என வினவினான்.

புருஷோத்தமா, நீ புண்ணியவான், நீ இருக்கும் வரைக்கும் உன்னுடைய அரசு குறைவின்றி நடக்கும். அதன் மேல் உனது மூத்தகுமாரன் நஞ்சூட்டிக் கொல்லப்படுவான். இரண்டாங்குமாரன் வெட்டுண்டு இறப்பான். இரண்டாம் பத்தினியின் வயிற்றிற் பிறந்த சங்கிலியின் மாயவலைக்குட்பட்டு அரசை அவன் கையிற்கெடுத்திடுவான். சங்கிலி கொடுங்கோலோச்சித் தன்னரசை அந்நிய தேசவாசிகளான பறங்கியர் கையிற் கொடுத்து இறப்பான். பறங்கிகள் சிவாலயங்களை அழித்துத் தமது சமயத்தைப் பரப்பிக் கொடுங்கோலாக்கி நாற்பது வருசம் ஆள்வர். அவரை ஒல்லாந்தர் வென்று சமய விசயத்தில்

அவரைப்போற் கொடியராகி நூற்றிருபது வருசம் அரசு செய்வர். அதன் மேல் மற்றொரு தேசத்தார் (புகைக்கண்ணர் - ஆங்கிலேயர்) வந்து ஒல்லாந்தரை ஓட்டி நீதி ஆட்சி செய்வர். உன் சந்ததிக்கு அரசு ஒரு காலத்திலும் மீள்வதில்லை" என்றார்.

இதையே திருகோணமலைத் தம்பத்தில் உள்ள கல்வெட்டும் சொல்கின்றது இப்படி

"முன்னாட் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னாட் பறங்கி பிடிப்பானே - பொன்னாரும்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணர் போய்மாற
மானே வடுகாய் விடும்".

பரராஜசேகர மன்னனின் அவைக்கு வந்த சுபதிருஷ்டி முனிவர் சொன்ன ஆரூடத்தினை மெய்ப்பிக்கும் வண்ணம் தொடர்ந்து வரலாற்றில் மிக மோசமான பக்கங்கள் எழுதப்படலாயின.

சிங்கைப் பரராஜசேகரனுக்கு சிங்கவாகு, பண்டாரம், பரநிருபசிங்கம், சங்கிலி என நான்கு ஆண்மக்களும், ஒரு பெண்ணுமாக ஐந்துகுழந்தைகள் இருந்தனர். சங்கிலி தன் துஷ்ட துணைவரோடு சேர்ந்து சூழ்ச்சி செய்து பரராஜசேகரனின் மூத்த மகனாகிய சிங்கவாகுவை நஞ்சூட்டிக் கொன்றார். சங்கிலியின் செய்கை இதுவென யாருக்கும் சந்தேகம் வரவில்லை. பரராஜசேகரன் தன் இளையகுமாரனாகிய பண்டாரத்தை இளவரசனாக்கி அவனிடத்தில் அரசை ஒப்பு வித்துவிட்டுத் தன் புத்திரத் துயர் ஆற்றக் கும்பகோணத்திற்குத் தீர்த்த யாத்திரை செல்கின்றான். தந்தையோடு கூடவே சென்ற சங்கிலி, "அங்கு எதிர்ப்பட்ட சோழமன்னனுக்கு உரிய மரியாதை கொடுக்காது அவமதிக்கின்றார். இதனால் சினங்கொண்ட சோழமன்னன், பரராஜசேகரனையும் சங்கிலியையும் சிறைப்பிடிக்கின்றார்.

அது கேட்டு, பரராஜசேகரனின் அடுத்த மகன் பரநிருபசிங்கன் தான் கொண்டு சென்ற படையைத் திரட்டிச் சோழமன்னனை வென்று தன் தந்தையையும், சகோதரனையும் சிறைமீட்கின்றான்.

பரராஜசேகரன் நல்லூருக்கு மீண்டவுடன் தன் மகன் பரநிருபசிங்கனின் வீரபராக்கிரமத்தை மெச்சி, அவனுக்குக் கள்ளியங்காடு, சண்டிருப்பாய், அராலி, அச்சுவேலி, உடுப்பிட்டி, கச்சாய், மல்லாகம், என்னும் ஏழு கிராமங்களையும், தாமிர சாசனமுங் கொடுத்து அக்கிராமங்களுக்கு அதிபதியாக்கினான். அது சங்கிலியின் மனதில் ஆறாத் தீயை உண்டு பண்ணியது.

ஒருமுறை தன் சகோதரன் பண்டாரம் பூந்தோட்டத்தில் உலா வரும்போது அவனைக் கொன்றான் சங்கிலி. முதுமை காரணமாகத் தளர்ந்திருந்த பரராஜசேகரனும் பேசாதிருந்தான். பரநிருபசிங்கன் கண்டி சென்றிருந்த சமயம் தனது தந்தையின் எதிர்ப்பையும் புறக்கணித்துவிட்டு 1517ல் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரியணை ஏறினான் சங்கிலி. மன்னன் பரராஜசேகரனையும் சங்கிலியே கொன்று, செகராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயரோடு மன்னனானான் எனப் போர்த்துக்கேய ஆதாரங்கள் கூறும். பரநிருபசிங்கன், சங்கிலியின் வலிமைக்கு அஞ்சிப் பேசாதிருந்தான்.

பொ. ஆ.பி 1519 ஆம் ஆண்டளவிலே சங்கிலி யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாகினான். தமிழ் மக்களிடையே

போர்த்துக்கீசர் தீட்டிய சிலோன் வரைபடம்

மிக நினைவு கொள்ளப்படும் மன்னனாகச் சங்கிலி விளங்கி வருகின்றான். பரராஜசேகரரின் பட்டத்து இராணியல்லாத ஒருத்திக்கு மகனாகப் பிறந்து, பட்டத்துக்கு உரித்தான மூத்த சகோதரர்களை அழித்து யாழ்ப்பாண இராச்சியத்தின் சிம்மாசனம் ஏறினான் இவன். 1505 ஆம் ஆண்டே கோட்டே இராசதானிக்குப் போர்த்துக்கேயர் வந்தபோதும் அவர்கள் யாழ்ப்பாணத்துடனான தொடர்பை 1543 ஆம் ஆண்டிலேயே கொள்ளமுடிந்தமைக்குச் சங்கிலி மன்னனின் எதிர்ப்பே காரணமாகக் கொள்ளப்படுகின்றது. போர்த்துக்கேய நூல்கள் சங்கிலி மன்னனைக் கொடுங்கோலனாகச் சித்தரிக்கப்படுவதற்குக் காரணம் இல்லாமலில்லை.

இவன் ஆரம்பத்தில் இருந்தே போர்த்துக்கேயரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு அவர்களோடு தொடர்புகொண்டோரைத் தண்டிப்பதிலும் முனைப்பாக இருந்தான். உண்மையில் சங்கிலி ஓர் ஆளுமைமிக்க மன்னனாகவும், நாட்டுணர்வுமிக்க தலைவனாகவும் தீர்க்கதரிசனமும் தீவிரமும் கொண்ட ஓர் ஆட்சியாளனாகவும் நடந்து கொண்டான் எனத் தெரிகின்றது.

வினிய தாபிரபேனியா **(Vinea Tabrobonea)** என்ற சரித்திர நூலின் பிரகாரம் பறங்கிகள் 1590 இல் யாழ்ப்பாணத்திலே படையேற்றிச் சென்று சங்கிலி மன்னனோடு யுத்தம் செய்து அரசைக் கைப்பற்றினர் என்று



கூறுகின்றது. பரநிருபசிங்கனும் பறங்கிகளும் செய்த ஒப்பந்தப் பிரகாரம் பரநிருபசிங்கனைத் திறையரசனாக்கி அவன் மகன் பரராச சிங்கனை அவனுக்குக் கீழ் ஏமுரதிபன் ஆக்கினார்கள்.

பரநிருபசிங்கன் ஒன்பது வருசம் அரசு செய்து இறந்தான். அவன் இருக்கும் வரையிலும் பறங்கிகள் சமய விஷயத்திலும், பொருள் விஷயத்திலும் கொடுங்கோல் செலுத்தாது ஒருவாறு அதிகாரம் செலுத்தி வந்தனர். பரநிருபசிங்கன் இறந்தபின்னர் அவன் மகன் பரராசசிங்கனைப் பறங்கிகள் முதன் மந்திரியாகினார்கள்.

பரராசன் இறக்கும் வரை அவன் பொருட்டு கீரிமலை திருத்தம்பலேஸ்வரன் கோயிலையும் நல்லூர்க் கந்தசாமி கோயிலையும் மாத்திரம் இடியாது விட்டிருந்தனர். அவன் இறந்த பின்னர் அவற்றையும் இடித்தொழித்தார்கள். அவர்கள் நல்லூர்க் கந்தசாமி கோயிலை இடிக்கும் முன்னே அதன் மெய்க்காப்பாளனாக இருந்த சங்கிலி என்பவன் அக்கோயில் விதானங்கள் வரையப்பெற்ற செப்பேடு, செப்பாசனங்களையும், திருவாபரணங்களையும் கொண்டு மட்டக்களப்புக்கு ஓடினான். அங்கிருந்த சில விக்கிரகங்களை அக்கோயிற் குருக்கள்மார் புதராயர் கோயிலுக்குச் சமீபத்தேயுள்ள குளத்திலே புதைத்துவிட்டு நீர்வேலிப்பகுதிக்கு ஓடினர். தொடர்ந்து நல்லைக் கந்தன் ஆலயம் தரைமட்டமாகியது.

உசாவ உதவியவை:

1. "யாழ்ப்பாணச் சரித்திரம்", நான்காம் பதிப்பு: மாசி 2000.மூலப்பதிப்பு யூலை 1912 - ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை
2. "ஈழத்தவர் வரலாறு" இரண்டாம் பதிப்பு: கார்த்திகை 2000 - கலாநிதி க.குணராசா
3. "யாழ்ப்பாண இராச்சியம்", தை 1992 - பதிப்பாசிரியர் கலாநிதி சி.க.சிற்றம்பலம்

சித்திரம்:

1. Map by *MUNSTER*, c.1588 (ebastian Münster (1488 - 1552) was a German cartographer, cosmographer) - Columbia University வரலாற்றுத் தளம்
2. போர்த்துக்கீசர் தீட்டிய சிலோன் வரைபடம் - Library of congress an illustrated guide

திருக்கேதீஸ்வர ஆலய வரவேற்பு வளைவு தொடர்பான கூட்டம்

திருக்கேதீச்சரத்தில் மீளவும் வளைவை நிர்மாணிப்பது தொடர்பாக இந்துக்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த 20.07.2019 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் நல்லூரில் உள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில், இந்து மாமன்றத்தின் யாழ்.பிராந்தியப் பணிமனையின் கௌரவ இயக்குனரும் உபதலைவருமாகிய கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து சமய ஆர்வலர்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலநூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், யாழ். சின்மயா மிசன் சுவாமி சிதாகாசானந்தர், இந்துக் குருமார் தலைவர் கலாநிதி கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், மன்னார் இந்துக் குருமார் தலைவர் ம. தர்மகுமாரக் குருக்கள், வீணாகான பீடத் தலைவர் ச.வாசுதேவக் குருக்கள் திருக்கேதீஸ்வரம் ஆலயப் பிரதம குரு கருணானந்தக் குருக்கள், திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாக உறுப்பினர் பிருந்தாவனநாதன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

கலந்துரையாடலின் நிறைவில் பின்வரும் மூன்று முக்கிய தீர்மானங்கள் எய்தப்பட்டன.

1. திருக்கேதீஸ்வர ஆலயத்திற்குரிய வளைவை அநாகரிகமான முறையில் பிடுங்கி அகற்றியமை தவறு என்ற கண்டனத்தை கலந்து கொண்டிருந்த யாவரும் ஒன்று கூடி வெளிப்படுத்தினர்.
2. வளைவு பழைய இடத்தில் மீள நிர்மாணிக்கப்பட வேண்டும். இதற்குத் தடையாக ஆயர் உள்ளிட்ட எவரும் இருக்கக் கூடாது எனக் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.
3. திருக்கேதீஸ்வர ஆலயம் இந்திய அரச உதவியுடன் பலகோடி ரூபா பெறுமதியில் மீள நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. கோவிலைப் பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பு இந்திய அரசுக்கும் உரியது என்பதை இந்தியத் தூதர் ஊடாக இந்திய அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆவணி - புரட்டாதி மாத விரதங்கள்

ஆவணி

விநாயகர் சதுர்த்தி

இந்து மக்கள் அனுட்டிக்கின்ற விரதங்களில் விநாயக சதுர்த்தி விரதம் முக்கியமான ஒன்று. ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதச் சுக்கிலபட்ச சதுர்த்தித் திதியன்று விநாயக சதுர்த்தி அனுட்டிக்கப்படுகின்றது. அன்றைய தினம் உலகெங்கனுமுள்ள இந்துக்கள் பயபக்தியோடு விநாயக வழிபாடியற்றி, உண்ணா நோன்பிருந்து, தான தர்மங்கள் செய்து கொண்டாடுகின்றனர். நாட்டுக்கு நாடு அந்தக் கொண்டாட்டங்கள் வேறுபட்ட முறைகளில் கொண்டாடப்படுவதைக் காணலாம்.

சீனா, ஜப்பான், தாய்லாந்து, கம்பூச்சியா, மியன்மார் மொங்கோலியா, தீபெத்து ஆகிய நாடுகளிலுள்ள பௌத்த மக்களும் தங்கள் வணக்கத்தில் பிள்ளையாரையும் சேர்த்துக்கொண்டுள்ளனர். சீனாவில் காணப்படும் பல விநாயகர் சிலைகள் 1400 வருடங்கள் பழைமை வாய்ந்தவையென ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஆவணி மாதம் சுக்லபட்ச சதுர்த்தி தினத்தில் அதிகாலையில் எழுந்து மூஷிக வாகனனை முழு மனதோடு நினைத்து நீராட வேண்டும். பூசை அறையில் சுத்தமான மனைப்பலகை வைத்து அதன் மீது அரிசிமாக் கோலம் போட வேண்டும். அதன் மேல் தலைவாழை இலை ஒன்றை வடக்குப் பார்த்து வைத்து அதன் மேலே பச்சரிசியைப் பரப்பி வைக்க வேண்டும். அதன்மேல் களி மண்ணால் செய்த பிள்ளையார் சிலைகளை வைத்து, எருக்கம் பூ அணிவித்து, அறுகம்புல், செவ்வந்தி, மல்லிகை, அரளி போன்ற மலர்களால் அர்ச்சனை செய்வது வழக்கம்.

ஐங்கரனுக்கு விருப்பமான கொழுக்கட்டை, அப்பம், சுண்டல், வடை, அவல், பொரி என நிவேதனங்கள் செய்து, வாழை, திராட்சை, நாவல், விளாம்பழம், கரும்புத் துண்டுகள், மற்றும் பழங்கள் என மிகவும் பிரியமுடன் தும்பிக்கையானுக்கு அளிக்கிறோம். அறிவு தெளிந்த ஞானம் முதலியவற்றை அளித்து எடுத்த செயல்கள் தடைவரா வண்ணம் காத்தருள வேண்டுகிறோம்.

மறுநாள் புனர்பூசை என்று சொல்லப்படும், சிறு பூசை செய்து, நல்ல நேரம் பார்த்து, பிள்ளையார் சிலைகளை எடுத்துச் சென்று கிணற்றிலோ, குளத்திலோ, ஆற்றிலோ விட்டு விடுவது வழக்கம்.

இவ்வாறு ஆண்டுதோறும் நாடெங்கும், உலகெங்கும் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது.

மகா சங்கடகர சதுர்த்தி

ஆவணி மாதம் தேய்பிறை சதுர்த்தியில் வரும் சங்கடஹரசதுர்த்தி, மகாசங்கடஹர சதுர்த்தி என்று அழைக்கப்படுகிறது. சங்கடஹர சதுர்த்தி விரத வழிபாட்டினை மேற்கொள்வோர் முதலில் மகாசங்கடஹர சதுர்த்தி நாளிலிருந்து ஆரம்பிக்கின்றனர்.

சங்கடஹர சதுர்த்தி விரதத்தின்போது பகல் முழுவதும் உண்ணாமல் மாலை வேளையில் விநாயகரை வழிபாடு செய்து சந்திர தரிசனம் செய்து உணவருந்தி விரத முறையானது பூர்த்தி செய்யப்படுகிறது.

சங்கடஹர சதுர்த்தி வழிபாட்டின்போது விநாயகப் பெருமானின் 32 வடிவங்களில் ஒன்றான சங்கடநாசன கணபதி என்ற வடிவம் வணங்கப்படுகிறது.

சங்கடஹர சதுர்த்தி வழிபாடு மேற்கொள்ள வாழ்வின் அனைத்து துன்பங்களும் நீங்கும். சௌபாக்கிய வாழ்வு கிட்டும். வளர்பிறை சதுர்த்தி (நான்காம் பிறை) சந்திரனைப் பார்ப்பதால் ஏற்படும் தொல்லையானது தேய்பிறை சங்கடஹரசதுர்த்தி வழிபாட்டினை மேற்கொண்டால் சரியாகும்.

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

மகா விஷ்ணுவின் எட்டாவது அவதாரம் கிருஷ்ணாவதாரமாகும். அதுவே கிருஷ்ண ஜெயந்திப் பண்டிகையாகக் கொண் டாடப்பட்டு வருகிறது. மகிழ்ச்சி வெளியில் இல்லை. மனதில்தான் இருக்கிறது என்பதை உலகிற்கு உணர்த்தியவர் கிருஷ்ணர். நாம் என்னவாக இருக்கிறோமோ அதன் படியே நமக்குக் காட்சி தருபவர்தான் கிருஷ்ணர்.

உலகம் முழுவதிலும் ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதம் அஷ்டமி திதி, ரோகிணி நட்சத்திரத்தன்று கிருஷ்ண ஜெயந்தி பண்டிகை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மதுரா நகரில் தேவகி - வாசுதேவருக்கு எட்டாவது மகனாக கிருஷ்ண பகவான் அவதாரம் எடுத்தார். கிருஷ்ணர் பிறந்தது சிறைச்சாலையில். சிறைச்சாலையில் பிறந்த கிருஷ்ணர், கோகுலத்தில் வளர்ப்புத் தாய் யசோதையால் வளர்க்கப்பட்டான். தனது தாய் மாமன் கம்சனைக் கொன்று துவாரகையில் அரசாட்சி செய்தார்.

பாரதப் போரில் பாண்டவர்களுக்கு உறுதுணையாக இருந்து, போர்க்களத்தில் அர்ஜுனனுக்கு தேரோட்டியாக

வந்தவரும் கண்ணன்தான், பார்த்தசாரதி என்று அழைக்கப்படுகிறார். தேரோட்டியாக வந்த கண்ணன், அர்ஜுனனுக்கு உபதேசித்த அறிவுரைகள்தான் இந்து மக்களின் புனித நூலான பகவத் கீதையாக உள்ளது.

தன் கடைசிக் காலத்தில் வேடன் ஒருவன் எய்த அம்பு காலில் தைக்க பூலோகத்தில் கண்ணன் அவதாரத்தை முடித்து மீண்டும் வைகுண்டம் சென்றார் என்று கூறப்படுவதும் உண்டு.

கிருஷ்ண ஜெயந்தி தினத்தில் குழந்தைக் கண்ணன் நம் வீட்டிற்குத் தளிர்நடை போட்டு வந்து அருள்பாலிப்பதே கோகுலாஷ்டமியின் முக்கிய அம்சமாகப் பார்க்கப்படுகிறது.

அதனால் தான் கிருஷ்ண ஜெயந்தி அன்று வீட்டை கழுவிச் சுத்தம் செய்து, அரிசி மாவால் கோலமிட்டு, மாவிலை தோரணங்களால் அலங்கரிகிறோம். வாசலில் தொடங்கி சுவாமி அறை வரை குழந்தையின் கால்த் தடங்களை அரிசி மாவால் பதிக்கிறோம். ஆலிலைக் கிருஷ்ணன் தனது பிஞ்சுப் பாதங்களை அடிமேல் அடி வைத்து வீட்டுக்குள் தத்தித்தத்தி நடந்து வருவதாக ஐதீகம்.

கிருஷ்ணர் சிலைக்குப் பூக்களால் அலங்காரம் செய்ய வேண்டும். அதில் துளசி இருந்தால் இன்னும் சிறப்பு. பின்பு, கிருஷ்ணருக்குப் பிடித்த தயிர், வெண்ணை, அவல் முதலியவற்றைப் பிரசாதமாக வைக்க வேண்டும். சீடை, முறுக்கு, லட்டு போன்ற இனிப்பு உணவுகளையும் வைக்க வேண்டும். முடிந்த அளவுக்குப் பூசையை மாலை 6.00 - 7.00மணிக்குள் செய்தால் சிறப்பு.

ஓணம்

ஓணம் பண்டிகையானது கேரளா, தென்தமிழகம் மற்றும் மலையாள மக்கள் உள்ள இடங்களில் ஆவணி

பௌர்ணமியை ஒட்டி வரும் திருவோண நட்சத்திரத்தில் மிகவிமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

அத்தப்பூக் கோலமும், ஓணவிருந்தும் இப்பண்டிகைக்கான முக்கிய அடையாளங்கள் ஆகும். ஆவணி மாத அஸ்தம் நட்சத்திரத்தில் தொடங்கி திருவோண நட்சத்திரம் வரை மொத்தம் பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது.

இது கேரளத்து அறுவடைத் திருநாள், கேரளத்துத் தீபாவளி, கேரளத்துப் புத்தாண்டுக் கொண்டாட்டம் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது.

இத்திருவிழா பற்றி மதுரைக் காஞ்சியிலும், தேவாரத்திலும் கூறப்பட்டுள்ளது. இப்பண்டிகைக் கொண்டாட்டத்தின்போது மாபலிச்சக்கரவர்த்தியை வரவேற்க மக்கள் பலவண்ணப் பூக்களால் அத்தப்பூக் கோலம் போடுகின்றனர்.

இப்பண்டிகையின்போது கசப்புச் சுவையினைத் தவிர ஏனைய சுவைகளில் 64 வகையான உணவுப் பொருட்கள் தயார் செய்து ஓண விருந்தினை நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் மக்கள் உண்டு மகிழ்கின்றனர்.

கலை, கலாசார நிகழ்ச்சிகள், படகுப்போட்டிகள், மாறுவேடப்போட்டிகள், யானை அணிவகுப்புகள் ஆகியவை இவ்விழாக் கொண்டாட்டத்தின்போது நடத்தப்படுகின்றன.

ஆவணி அவிட்டம்

ஆவணி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் வரும். இந்தப்பௌர்ணமியில் சிவன் கோயில்களில் சிவனுக்கு வெல்லச் சர்க்கரையால் அபிஷேகம் செய்வார்கள்.

அன்றைய தினத்தில் உபநயனம் பெற்றவர்கள் பூணூலை மாற்றிக் கொள்கிறார்கள். வேதங்களையும் படிக்கத் தொடங்குகின்றனர். வேதங்கள் படிக்க ஆவணி அவிட்டம் நல்லநாளாகக் கருதப்படுகிறது.

வரலட்சுமி விரதம்

வரலட்சுமி விரதம் என்பது சுமங்கலிப் பெண்கள் செய்யும் மிகச் சிறப்பான பூஜையாகும். மகாவிஷ்ணுவின் தேவியான லட்சுமி தேவியைக் குறித்துச் செய்யப்படுவதே வரலட்சுமி விரதமாகும். விஷ்ணு என்பதற்கு எங்கும் வியாபித்திருப்பவர் என்று பொருள். லக்ஷ்மம் என்றால் குறிப்பு அல்லது அடையாளம் என்று பொருள். விஷ்ணு பகவான் தான் எங்கும் நிறைந்துள்ளதை விளக்க, உலகிலுள்ள அழகுகள் அனைத்தையும் ஒன்றாக்கி அமைத்துள்ள அடையாளமே மகாலட்சுமி ஆகும்.

மகாலட்சுமியைத் தனலட்சுமி, தான்யலட்சுமி, தைரிய லட்சுமி, ஜெயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலட்சுமி, வித்யாலட்சுமி என அஷ்டலட்சுமிகளாகப் பிரித்துள்ளனர். எட்டு வகை செல்வங்களை வாரி வழங்குபவள் அவள். லட்சுமிதேவி பொறுமைமிக்கவள். அவள் அனைவருக்கும் நன்மையே செய்வாள் என அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாகப் பெண்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் அவளால் பொறுத்துக் கொள்ள முடியாது. அவள் நித்திய சுமங்கலி. மஞ்சள் பட்டு உடுத்திக் காட்சி தருபவள். கணவரான திருமாலின் மார்பில் குடியிருப்பவள். பெண்களுக்கே உரித்தான கருணை உள்ளம், அழகு, வெட்கம், அன்பு, புத்தி ஆகியவற்றிற்கு அதிபதியும் அவளே. வரலட்சுமி விரதம் இருப்பதால் பல பலன்கள் ஏற்படும்.

வரலட்சுமி விரதம் அனுட்டிப்பதற்கு வீடு அல்லது கோயில்களில் தென்கிழக்கு மூலையில் ஒரு சிறு மண்டபம் எழுப்ப வேண்டும். அதில் சந்தனத்தால் செய்யப்பட்ட வரலட்சுமியின் முகத்தை வைக்க வேண்டும். வசதி மிக்கவர்கள் வெள்ளிச் சிலை வைக்கலாம். சிலையைத் தாழம்பூவால்

அலங்கரித்து அதை ஒரு பலகையில் வைக்க வேண்டும். சிலை முன் வாழை இலை போட்டு அதில் ஒரு படி பச்சரிசியைப் பரப்ப வேண்டும். அரிசியின் மீது தேங்காய், மாவிலை, எலுமிச்சை, பொன், பழங்கள் ஆகியவற்றை வைத்துச் சிலைக்கு மஞ்சள் ஆடை அணிவிக்க வேண்டும். ஒரு கும்பத்தை எடுத்து அதில் புனித நீர் நிறைத்து, சந்தனம் குங்குமம் வைத்து, மாவிலையுடன் தேங்காய் வைத்து அரிசியின் நடுவில் வைக்க வேண்டும். பின் ஐந்து வகையான ஆரத்தித் தட்டுகளால் பூஜை செய்ய வேண்டும். கும்ப பூஜை முடிந்தபிறகு கணேச பூஜை செய்ய வேண்டும்.

அஷ்டலட்சுமிகளுக்கும் விருப்பமான அறுகம்புல்லைச் சிலையின் மீது தூவிப் பூஜை செய்வது நல்லது. பூஜையின் போது அஷ்டலட்சுமி ஸ்தோத்திரம், கனகதாரா ஸ்தோத்திரம், மகாலட்சுமி ஸ்தோத்திரம் ஆகியவற்றைப் படிக்கலாம். வீட்டிற்கு வந்திருக்கும் பெண்களுக்குத் தேங்காய், மஞ்சள்கயிறு, குங்குமம் கொடுக்க வேண்டும். நைவேத்யமாகக் கொழுக்கட்டை படைக்கலாம். பின் கலசத்தை அரிசிப் பானையில் வைத்துவிட வேண்டும். இதனால் அன்னபூரணியின் அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை. சந்தனத்தில் செய்யப்பட்ட லட்சுமி வடிவங்களை மறுநாள் நீர்நிலையில் கரைத்துவிட வேண்டும்.

சுமங்கலிப் பெண்கள் இந்த விரதத்தின்போது தாலிக் கயிற்றை வைத்துப் பூஜை செய்து, அதனை அணிந்து கொள்வார்கள். இதனால் அவர்கள் தீர்க்க சுமங்கலியாக இருப்பார்கள். இந்த வரலட்சுமி விரதத்தைக் கடைபிடிக்கும் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு உயர்ந்த ஞானம் கிட்டும். சுமங்கலிப் பெண்களுக்கு மாங்கள வாழ்க்கை அமையும். மாங்கல்யப் பாக்கியம் நிலைத்து நீடிக்கும். குடும்பத்திற்கு எட்டுவித ஐஸ்வரியங்கள் உண்டாகும். இந்த விரதம் மேற்கொள்வோருக்கு விரும்பிய நலன்கள் எல்லாம் கிட்டும்.

ஆவணி ஞாயிற்றுகிழமை வழிபாடு

ஆவணி மாதத்திற்கு அதிபதியாக சூரியன் கருதப்படுகிறார். இதனால் ஆவணி மாத ஞாயிற்று வழிபாடு ஆன்ம பலத்தை அதிகரிக்கும். அக்காலத்தில் ஆடியில் விதைத்த பயிர்கள் ஆவணியில் வளரத் துவங்கும். அப்போது, விவசாய வேலைக்குச் செல்லும் குடும்பத்தினர் பாம்பு மற்றும் விஷப்பூச்சிகளிடமிருந்து பாதுகாப்பாக இருக்க ஆவணி ஞாயிற்றுக்கிழமை அன்று விரதம் இருக்கும்முறை உருவானது.

திருமணமாகாத பெண்கள் நல்ல கணவன் வேண்டியும், ஆண்கள் வேலை மற்றும் வாழ்வின் தடைகளைத் தகர்தெறிய வேண்டியும் ஆவணி ஞாயிற்றுக்கிழமை விரத வழிபாட்டினை மேற்கொள்கின்றனர்.

கண் நோய் உள்ளவர்கள் ஆவணி ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டினை மேற்கொண்டு நிவாரணம் பெறலாம். பாம்புகளை மூலவர்களாகக் கொண்ட வழிபாட்டிடங்களில் சிறப்பு வழிபாடு ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்கொள்ளப்படுகிறது.

புரட்டாதி

புரட்டாதிச் சனி

"புரட்டாதிச் சனி" என அழைக்கப்படும் புரட்டாதிச் சனிக்கிழமை விரதம் புரட்டாதி மாதத்தில் (தமிழ் மாதம்) வரும் சனிக்கிழமைகளில் சனிபகவானை நினைந்து சனி தோஷம் நீங்கக் கடைப்பிடிக்கப்படும் விரதம் ஆகும்.

சனீஸ்வரன் கோசரமாகச் சஞ்சரிக்கும் போது (தற்போதைய கிரக சஞ்சாரத்தில்) ஒருவருடைய ஜாதகத்தில் சந்திரன் நிற்கும் (சந்திர) இராசிக்கு 5வது இராசியில் சஞ்சரிக்கும் காலம் பஞ்சம சனியென்றும் 8வது ராசியில் சஞ்சரிக்கும் காலம் அட்டமத்துச் சனியென்றும், 12வது இராசியிலும், சந்திர இராசியிலும், சந்திரனுக்கு 2வது இராசியிலும் சஞ்சரிக்கும் காலம் ஏழரைச் சனியென்றும் (மூன்று ராசிகளையும் கடக்க எடுக்கும் காலம் ஏழரை ஆண்டுகள் அதனால்) கூறுவர். சனீஸ்வரர் மந்தகதி உடையவர். இவர் ஒரு ராசியைக் கடக்க இரண்டரை வருடங்கள் ஆகின்றன. அதனால் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒவ்வொரு முப்பது ஆண்டுகளுக்கு ஒரு தடவை இத்தோஷங்கள் சுழற்சியாக ஏற்படுகின்றன.

இச்சனிதோஷ காலங்களில், புத்திர பாக்கியக் குறைவு, மரண பயம், அதிக பிரயாணம், அதிக செலவு, பண நஷ்டம், தேகசுகக் குறைவு, வீண் சச்சரவு என்பன உண்டாகும். இத்தோஷத்தினால் பீடிக்கப் பெற்றவர்கள் தோஷ நிவர்த்தி செய்வதால் சனீஸ்வரன் மகிழ்வுற்றுத் தாக்கங்கள் குறைவடைந்து நன்மைகள் ஏற்படுவதாக ஐதீகம். இவற்றுள் ஏழரைச் சனிகாலம் மிகவும் கஷ்டமான காலமாக ஜோதிடம் கணிக்கின்றது.

சனீஸ்வரனைப்போல் கெடுப்பாரும் இல்லை, கொடுப்பாரும் இல்லை என ஆன்றோர் கூறுவர். அதனால் மக்களுக்குச் சனிபகவானிடம் சற்று அச்சம் உண்டு. இவ் இராசிகளில் சனீஸ்வரன் சஞ்சரிக்கும் போது பல கஷ்டங்களையும் நஷ்டங்களையுந் தந்து துன்பப்படுத்திய சனீஸ்வரன் இவ் இராசிகளைக் கடந்து அடுத்த ராசிக்குச் செல்லும் போது நஷ்டங்களை ஈடுசெய்யும் வகையில் அள்ளிக்கொடுத்து விட்டுச் செல்வார் என்பது ஐதீகம்.

சனி தோஷம் உள்ளவர்கள் புரட்டாசி மாசத்துச் சனிக்கிழமைகளில் காலையில் நல்லெண்ணைய் வைத்துத் தோய்ந்து, ஆலயம் சென்று கறுப்புத் துணியில் எள்ளை சிறு பொட்டளமாகக் கட்டி எள்ளெண்ணை (நல்லெண்ணை) விட்டு விளக்கேற்றி, அர்ச்சனைகள் செய்து சனீஸ்வரனை வழிபட வேண்டும். அதன் பின் சிவ விஷ்ணுக்களை வழிபட்டுப் பிராத்தித்துக் கோளறுபதிகம், தேவாரம் அல்லது விஷ்ணு தோத்திரம் பாடித் துதிக்கவேண்டும். வீடு சென்று ஏழைகள் மூவரிற்குப் போசனம் அளித்துத் தானும் உணவு உட்கொண்டு விரதத்தை முடிக்கலாம். சனீஸ்வரனின் வாகனமாகக் காகம் அமைவதால் உணவருந்து முன் காகங்களுக்கு உணவு படைத்தபின்பே தாம் உணவருந்துவர். மற்றய விரதங்களின் போது எண்ணை வைத்துத் தோயும் வழக்கம் இல்லை. ஆனால் சனிக்கிழமை-சனீஸ்வரனுடைய விரதத்திற்கு மாத்திரம் எண்ணை வைத்துத் தோயும் முறை கடைப்பிடிக்கப் பெறுகின்றது.

நம் முன்னோர்கள் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நல்லெண்ணை உடல் முழுவதும் பிரட்டிச் சிறிது நேரம் (உடம்பில் சுவறும் வரை) இருந்து தோய்வது வழக்கமாக இருந்தது எங்கள் எல்லோருக்கும் தெரியும். காரணம் கேட்டால் உடம்புச் சூடு தணிய என்று கூறுவார்கள். ஆனால் அதற்கு இன்னுமொரு காரணம் இருக்கிறது. இந்த சனிக்கிரகம் உடலுக்கு தீங்கு (தோஷத்தை) ஏற்படுத்தக் கூடிய கதிர் வீச்சுக்களை வீசுகின்றது. அதனால் அதனை ஒரு பாபக் கிரகமாக ஜோதிடம் அடையாளம் காட்டுகின்றது. சனி கிரகம் ஒரு ஜாதருக்கு பெரும் தோஷத்தை ஏற்படுத்தக் கூடிய இடங்களில் (ஜாதகத்தில் சந்திர ராசிக்கு 1, 2, 5, 8, 12 ஆகிய இடங்களில்) கோசரமாகச் சஞ்சாரம் செய்யும் போது அதன் கதிர்வீச்சுக்கள் மேலும் தீவிரம் அடைவதாகக் கணிக்கப் பெற்றுள்ளன. அதனால் அந்த ஜாதகர் உடல், உள்ளம் ரீதியாக பெரும் பாதிப்பைப் பெறுகின்றார். சனிக்கிரகத்தில் இருந்து வரும் கதிர்களை நல்லெண்ணையில் சுவறிய எமது உடம்பு, தாக்க விடாது தடை செய்கின்றது. தீய கதிர்கள் எம் உடலில் தாக்கத்தினை ஏற்படுத்தாது தடுக்கவே இந்த எண்ணை முழுக்கு.

இத் தீய கதிர்கள் மூளை நரம்புகளைப் பாதிக்கின்றது. ஜாதகருடைய சிந்தனைகளை திசைமாறிச் செல்ல வைத்துப் பல சிக்கல்களில் மாட்டிவிடுகின்றது. அந்தக் கிரகத்தின் கதிர் வீச்சிலிருந்து தப்பிக்கப் பல பரிகாரச் சடங்குகள் இருந்தாலும் மிக முக்கியமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் உடல் முழுக்க எள் எண்ணைய் (நல்லெண்ணை வைத்து) பிரட்டிச் சூரிய உதயத்தில் 1/2 மணி நேரம் நின்ற பின் தோய வேண்டும். அதனால்தான் எமது முன்னோர்களும் சனிக்கிழமைகளில் எண்ணை வைத்துத் தோயும் வழக்கத்தினைப் பின்பற்றியுள்ளனர் என்பது வெளிப்படை. ஆனால் தற்போது நாகரீக மேலாதிக்கத்தினால் அவை பின்பற்றப் பெறுவதில்லை.

அவரவர் வினைக்கேற்பப் பலன்களை வழங்குவதில் நீதி தவறாதவர் சனீஸ்வரன். இவரது தினமான சனிக்கிழமைகளில் விரதமிருந்து வழிபடுவோருக்கு நீண்ட ஆயுளும் துன்பமில்லாத வாழ்வும் கிடைக்கும். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விரதமிருக்க முடியாதவர்கள் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விரதமிருக்கலாம். சனிக்கு அதிபதி மகாவிஷ்ணு. அதனால் சனிக்கிழமைகளில் விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்வது நன்மையைத்தரும்.

இந்தியாவில் திருநள்ளாற்றில் உள்ள சனீஸ்வரனார் கோவில் மிகவும் பிரசித்தமானது. இங்கே நள மகாராஜான் சிவபெருமானை வழிபட்டுச் சனீஸ்வரனால் பீடித்த துன்பத்தில் இருந்து விடுபட்டான் என்றும் கூறுவர்.

அரிச்சந்திர மகாராஜா தன் அரசிழந்து சுடலையில் காவல்காரன் ஆனதும், பாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் செய்ததும், இராமபிரான் வனவாசம் செய்ததும், சீதை இராவணனால் கவரப்பட்டுச் சிறையிலிருந்ததும் சனீஸ்வரனின் தோஷத்தாலே என்று நூல்கள் கூறுகின்றன.

நவராத்திரி

சிவனுக்கு ஒரு ராத்திரி அது சிவராத்திரி. உண்ணாமல் உறங்காமல் விரதம் இருந்து வழிபடவேண்டிய புண்ணிய தினம் அது. அம்பிகைக்கோ ஒன்பது ராத்திரிகள், அதாவது நவராத்திரி. ஆனால், அம்மையானவள் நாம் உண்ணாமல் இருப்பதைப் பொறுப்பாளா? எனவேதான் நித்தம் ஒரு சுண்டல், நைவேத்திய பிரசாதம் என நவராத்திரியைக் கொண்டாட அருளியிருக்கிறாள்!' இதுவே நவராத்திரி வழிபாடு குறித்துக் கிருபானந்த வாரியார் அவர்களின் அற்புதமான விளக்கமாகும்.

நவராத்திரி தினத்தில் வீடுகளில் கொலு வைத்துக் கொண்டாடப்படும் வழக்கம் காலம் காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கொலு வைத்து கொண்டாப்படும் இந்த ஒன்பது நாட்களிலும் சிறுமிகள் முதல் வயது முதிர்ந்த பாட்டிகள் வரை மாலை நேரத்தில் அம்பிகையின் திருக்கதைகளையும், அவளைப் போற்றும் துதிப்பாடல்களையும் பாடி வழிபடுவார்கள்.

புரட்டாசி மாத, அமாவாசைக்கு அடுத்த நாள் அதாவது பிரதமை திதியில் இருந்து நவராத்திரி துவங்குகிறது. தொடர்ந்து வரும் ஒன்பது நாட்களும் நவராத்திரி அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த தினத்தில் அம்மனை எவ்வாறு வழிபட வேண்டும் என்ற வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் அம்மனை நவ கன்னிகையாகவும், சில இடங்களில் நவ துர்க்கையாகவும் நினைத்து வழிபடுகின்றனர்.

நவ கன்னிகை வழிபாடு :

பத்து வயது நிரம்பாத கன்னிகையாக நாள் ஒரு பருவத்தில் அம்பிகையை வழிபடுவது நவகன்னிகை வழிபாடு.

முதல் நாளில் - இரண்டு வயதுக் குழந்தை - குமாரி

இரண்டாம் நாள் - மூன்று வயதுக் குழந்தை - திரிபுரா

மூன்றாம் நாள் - நான்கு வயதுக் குழந்தை - கல்யாணி

நான்காம் நாள் - ஐந்து வயதுக் குழந்தை - ரோகினி

ஐந்தாம் நாள் - ஆறு வயதுக் குழந்தை - காளிகா

ஆறாம் நாள் - ஏழு வயதுக் குழந்தை - சண்டிகா

ஏழாம் நாள் - எட்டு வயதுக் குழந்தை - சாம்பவி

எட்டாம் நாள் - ஒன்பது வயதுக் குழந்தை - துர்க்கா

ஒன்பதாம் நாள் - பத்து வயதுக் குழந்தை - சுபத்ரா

என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பெயரில் நவகன்னிகை வழிபாடு செய்ய வேண்டும்.

நவ துர்க்கை வழிபாடு :

பார்வதி தேவியின் பல்வேறு நிலைகளில் அம்பாளைத் துர்க்கையாகக் கருதி வழிபாடு செய்வது நவதுர்க்கை வழிபாடு.

முதல் நாள் - ஷைலபுத்ரி
இரண்டாம் நாள் - பிரம்மசாரிணி
மூன்றாம் நாள் - சந்தரகாந்தா
நான்காம் நாள் - கூஷ்மாண்டா
ஐந்தாம் நாள் - ஸ்கந்த மாதா
ஆறாம் நாள் - காத்யாயணி
ஏழாம் நாள் - காலராத்ரி
எட்டாம் நாள் - மகா கவுரி
ஒன்பதாம் நாள் - சித்திதாத்ரி

என்று நவ தினங்களிலும் நவ துர்க்கை வழிபாடு செய்வது சிறப்புத் தரும்.

கொலு

ஓரறிவு உயிர்கள் முதல் அனைத்துக்கும் ஆதாரமான அம்பிகை வரையிலுமான பொம்மைகள் நவராத்திரி கொலுவில் இடம்பெறும். இந்தக் கொலுப் பொம்மைகளை எந்தெந்தப் படிநிலைகளில் எப்படி அடுக்கவேண்டும் என்ற நியதியை முன்னோர் வகுத்துள்ளனர்.

கீழிருந்து முதல்படியில்: மரங்கள், செடிகொடிகள் போன்ற ஓரறிவு உயிர்கள் நிறைந்த பூங்காக்களை இடம்பெறச் செய்யலாம்.

இரண்டாம் படி: நத்தை, அட்டை முதலான மெல்ல ஊர்ந்து செல்லும் ஈரறிவு படைத்த உயிரினங்களை இடம்பெறச் செய்யலாம்.

மூன்றாம் படி: எறும்பு, பூரான் போன்ற மூன்றறிவு உயிரினங்களை இடம்பெறச் செய்யலாம்

நான்காம் படி: பறவைகள் முதலானவைகளை இடம்பெறச் செய்யலாம்.

ஐந்தாம் படி: பசு, யானை முதலான ஐந்தறிவு கொண்ட விலங்கினங்களை இடம்பெறச் செய்யலாம்.

ஆறாம் படி: மனிதர்கள் இடம்பெறலாம். வணிகர், குறவன் குறத்தி முதலான பொம்மைகளை இடம்பெறச் செய்யலாம்.

ஏழாம் படி: தெய்வ அவதாரங்கள், நவக்கிரகங்கள் முதலான தெய்வ பொம்மைகளை இடம்பெறச் செய்யலாம்.

எட்டாம் படி: மும்மூர்த்தியரும் தேவியருடன் விளங்கும் பொம்மைகளை இடம்பெறச் செய்யலாம்.

ஒன்பதாம் படி: இதில் ராஜராஜேஸ்வரியின் வடிவம் பிரதானமாக இடம்பெற வேண்டும். பூரண கலசமும் வைப்பார்கள்.

நவராத்திரியில் பிரதானமாகப் பார்க்கப்படுவது கோலம் தான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக, ஒவ்வொரு பொருட்கள் கொண்டு கோலமிடலாம்.

நவராத்திரியின் போது, கொலு வைப்பதால் சிறுவர் - சிறுமிகள் உள்ளிட்ட இளைய சமுதாயத்தினர் மத்தியில் இயற்கையில் அமைந்துள்ள அழகுணர்ச்சியும் வெளிக்கொணர ஏதுவாகிறது. பெண்களிடம் கொலுப் பொம்மைகள் அழகுப்படுத்தும் திறன் காரணமாகத் தன்னம்பிக்கை ஏற்படுவதுடன் வயதானவர்களை மதிக்கும் பண்பும் வளர்க்கப்படுகிறது.

கொலு வைக்கும் வழக்கம் உள்ள வீடுகளில் ஆண்டு தோறும் காலத்திற்கேற்றாற்போல் நவீன புதிய பொம்மைகள் இடம் பெறும். மண்ணாலான பொம்மைகளைச் செய்து பிழைப்பு நடத்தும் கைவினைக் கலைஞர்களுக்கு வாழ்வளிப்பதாக இது அமைகிறது என்பதால் சிறு தொழிலை ஊக்குவித்த திருப்தியும் கொலுவால் ஏற்படுகிறது என்றால் மிகையில்லை. இந்திய உப கண்டத்தின் தட்பவெட்ப நிலைப்படி அக்டோபர், நவம்பர் மாதங்கள் மழை, குளிர் காலம் என்பதால், இந்தக் காலத்தில் குறிப்பாகப் பெண்களுக்குப் புரதச் சத்துத் தேவைப்படும். அந்த வகையில் நவராத்திரி நாட்களில் விதவிதமான புரதச்சத்து நிறைந்த பயறு வகைகளை உண்ணும் வகையில் முன்னோர் இந்தப் பண்டிகையைக் கொண்டாடி வந்துள்ளனர் என்பது மருத்துவ ரீதியிலும் நிறைவைத் தருகிறது.

ஒன்பது நாட்களிலும் 9 வகையான பயறு வகைகள், பழங்களை அம்மனுக்குப் பிரசாதாங்களாகப் படைத்து, அவற்றை மற்றவர்களுக்கும் வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் பெண்கள்.

ஆயுதபூஜை

கல்விக்கு அதிபதியான சரஸ்வதி தேவியையும், நம் தொழிலுக்கும் ஜீவனத்திற்கும் உதவி செய்யும் கருவிகளையும் பூஜை செய்து வணங்கும் நாளே சரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை நாளாகும். ஆயுத பூஜை அன்று தாங்கள்



செய்யும் தொழிலில் நிபுணத்துவம் பெற்று தங்கள் தொழில் நன்கு விருத்தி அடைவதற்காகத் தங்கள் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் கருவிகள், இயந்திரங்கள், ஆயுதங்கள், இசைக் கருவிகள் புத்தகங்கள், பென்சில், பேனா போன்ற பொருட்களை நன்கு சுத்தப்படுத்திப் பூஜை செய்வார்கள். இந்த நாளே ஆயுத பூஜை மஹாநவமி என்றும் அழைக்கப்படுகிறது. இந்தப் பூஜை நவராத்திரியின் 9ம் நாள் கொண்டாடப்படுகிறது.

விஜயதசமி

வெற்றியைக் கொண்டாடும் விழாவே விஜயதசமி. ஒன்பது நாட்கள் அசுரசக்திகளை எதிர்த்துப் போர் புரிந்து சம்ஹரித்த ஆதிபராசக்தி, பத்தாவது நாளான தசமியன்று சாந்தமடைந்தாள். தேவியின் வெற்றியைத் தேவர்கள் கூடி இந்தத் தசமிநாளில் கொண்டாடிமகிழ்ந்தார்கள். கலைமகளும், திருமகளும், மலைமகளும் இணைந்த சக்தியை இந்த நாளில் வணங்கினால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும் என்பது மக்களின் தொன்றுதொட்டுவரும் நம்பிக்கை. குழந்தைகள் படிப்புத் தொடங்கும் நிகழ்ச்சியும் ஏடு தொடங்குதல் என்ற பெயரில் நடைபெறும். மேலும் புதிய தொழில் தொடங்குவது, புதிய முயற்சிகளை மேற்கொள்வது எல்லாமே இந்த விஜயதசமி நாளில் நடைபெறும். எல்லாச் சிவாலயங்களிலும் வன்னிமர வேட்டை எனும் பாரிவேட்டை நிகழ்வும் இரவில் நடக்கும். உலகமே கண்டு வியக்கும் மைசூரு தசரா பண்டிகையும் இந்த விஜயதசமி நன்னாளில் தான் கொண்டாடப்படுகிறது.

ராவணனை ராமபிரான் வெற்றிகொண்ட திருநாளாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. அஞ்ஞாத வாசம் முடித்த பாண்டவர்கள் தங்களது ஆயுதங்களைப்பெற்று அம்பிகையின் அருளைப் பெற்ற சுப நாளும் இதுவே. பண்டாசுரனை எதிர்த்த அம்பிகையின் சினம் தாங்காமல் பண்டாசுரன் வன்னி மரத்தில் ஒளிந்தான். இதைக்கண்டு கொண்ட அம்பிகை வன்னி மரத்தை வெட்டி, பண்டாசுரனை வதம் செய்தாள். இதுவே வன்னிமர வேட்டை என இன்றும் கொண்டாடப்படுகிறது.

சகல தேவர்களிடமும் ஆயுதங்கள் பெற்று நரகாசுரனை வென்ற மகாசக்தி, நவராத்திரி இறுதி நாளில் வெற்றி பெற்றாள். தான் படைத்த உயிர்களை அச்சுறுத்தி வந்த தீய சக்திகளைத் தேவி கருணை கொண்டு சங்கரித்தாள். பத்தாவது நாளான விஜயதசமி நாளில் ஆதிபராசக்தியாகக் காட்சி தந்து சகலரையும் ஆசிர்வதித்தாள்.

இதன் உண்மையான தத்துவம் என்னவென்றால், கடவுளால் படைக்கப்பட்ட நமது பஞ்ச இந்திரியங்களை அடக்கியாள வேண்டும். ஒருவேளை அது நமது கட்டுப்பாட்டில் இல்லாத போது, அவைகளால் தொல்லை நேர்ந்து காம, குரோத, லோப மாச்சரியங்களில் மூழ்கிக் கெட்டுப்போவோம். இதனால் பாவங்கள் உண்டாகும். பாவங்கள் நம்மை ஆண்டவனோடு அணுகாமல் செய்து விடும். ஆண்டவனை எண்ணாத மனிதர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து மாயவலைகளில் சிக்கி அல்லல் உறுவார்கள்.

எனவே பஞ்ச இந்திரியங்கள் எனப்படும் கண், காது, மூக்கு, நாக்கு, தேகம் இவைகளிடம் கவனமாக இருக்க வேண்டும். ஒருவேளை அவை அலைந்து திரிந்து தொல்லை செய்தால் மனம் எனும் மஹாசக்தியின் அருளால் அவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே விஜயதசமி நன்னாள் கூறும் தத்துவம். உடலின் இச்சைகளை அடக்கும் சக்தி மனதுக்கு உண்டு. அந்த மனதைக் கடவுளின் மீது திருப்பி அவனருளால் வெல்வதே சிறந்தது. மனதை ஒருமுகப்படுத்தி வாழ்வாங்கு வாழச் செய்யும் வல்லமையை நமக்கு அளிப்பவள் ஆதிபராசக்தி. அவளின் அருளால் ஒழுக்கமான வாழ்வைப் பெற்றுச் சிறப்பான பேறுகளைப் பெறுவோம்.

நல்லூரான் காட்சி கொடுப்பான்

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால் – நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி!

தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வானோர் – ஒழிவின்றி
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது!

நல்லூர் முருகன்

பல்லவி

நல்லையில் வாசா ஞானப் பிரகாசா.

அனுபல்லவி

நல்ல தெய்வானை வள்ளியம்மை சமேதா
நராசுரர் பணி ஞானபண்டி தாபரா (நல்லை)

சரணம்

நான் உன்னை நம்பினேன் நல்குரவுபிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து அளவாய்
தேனுந்து வேங்கையாய் தினைப்புனம் நின்றனை
ஸ்ரீராமன் மருகனே முருகனே கிருபாகரா (நல்லை)

வேலவனைத் துதித்தால் வேதனைகள் தீரும்!

திரு இராசையா ஸ்ரீதரன்

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன். அத்துடன் தமிழ்மொழியாகவே காட்சி தருகின்ற கந்தக்கடவுள், ஆற்றங்கரையிலே, செல்வச்சந்நிதியிலே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அழகே தனி. முருகன் என்றால் அழகன் என்றும் பெயர். அந்த அழகெல்லாம் ஒன்று சேர்ந்து திரண்டெழுந்தாற் போன்ற வடிவம் தான் சந்நிதிவேலவன். பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டுகின்ற பரிபூரணானந்தனாகப் பரிணமிக்கும் வேற் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் நீக்குதற் பொருட்டுச் சந்நிதியிலே மிகவும் அருள் கொழிக்கும் வகையிலே அருட்காட்சி தருகின்றான். முருகப்பெருமான் உதித்ததே துன்பங் களைதற் பொருட்டே. தேவர்கள் குறைதீர்க்கவென்றே குன்றுதோறாடிவரும் குமரன் புறப்பட்டுவந்து வீரவாகு தேவர் முதலாய படைகள் சூழச் சூரபன்மனைச் சங்கரித்த வரலாறு கந்தபுராணத்திலே மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. குறை தீர்க்கவந்த குமரவேலைப் போற்றிப்பணிந்து வணங்கித் துதிக்க வேண்டியது நமது தலையாய கடனாகும். முத்துக்குமரனாக விளங்குகின்ற வடிவேற்பெருமான் செல்வச்சந்நிதியிலே ஸ்ரீ வள்ளி தேவசேனாதிபதியாகக் காட்சி தந்து வழிபடும் அடியார்களின் வேண்டுதல்களையெல்லாம் குறைவின்றி நிறைவேற்றி அடியார்க்கருளும் அருட்கந்தனாக மிளிர்கின்றான்.

முருகனே
செல்வச்சந்நிதி வாழும் கந்தனே
குகனேதிருமால் மருகனே
தேவசேனாதிபதியே சரணம்!
உருகாத மனமெல்லாம்
உருகச்செய்யும் அறுமுகனே
வருவாய் மயில்மீதினிலே
வடிவேலுடனே அருள்வாய்!

என்று தோத்திரித்துத் துதிபாடும் அடியார்கள் இங்கே ஆயிரக்கணக்கில் வந்து தரிசித்து மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கின்றார்கள். "மரணப்பிரமாதம் நமக்கில்லையே" என்று அருணகிரிநாதர் கூறுவதுபோலவே, சந்நிதியிலுறையும் தேவாதி தேவனான திருக்குமரன் முருகன் யமபயமொழித்து உலகில் எல்லையில்லாத ஆனந்தமயமான சமூக வாழ்க்கையைத் தந்தருள்கின்றான். மார்க்கண்டேயர் சிவபிரானை முற்று முழுதாக நம்பித் தன்னையே அவரிடம் ஒப்படைத்த மாதிரி அடியார்கள் அனைவரும் தம்மையே முருகனிடம் அர்ப்பணித்து இன்பகரமான, மகிழ்ச்சி கலந்த சந்தோஷ வாழ்வைத் தந்தருள வேண்டுமென்று ஆற்றங்கரையில் வீற்றிருக்கின்ற ஆறுமுகப் பெருமானை அடிபணிகின்றார்கள்.

"எந்தாயு மெனக் கருள் தந்தையும் நீ
சிந்தா குலமானவை தீர்த் தெனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா, குமரா, மறைநாயகனே"

என்று கந்தரனுபூதியிலே அருணகிரிநாதர் குறிப்பிடுவது போலவே, தந்தையும் தாயுமாக இருந்து அருள்புரியும் அந்த ஆறுமுகன் செல்வச்சந்நிதியிலே தொண்டைமானாற்றங் கரையிலே வீற்றிருந்து எமக்குத் திருவருள் புரிகின்றான். தேவர்கள் குறைதீர்க்கவென்றே உதித்தவன் முருகன். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தம்மைச் சிறைமீட்டுக் குறைபோக்க வேண்டுமென்று ஒற்றுமையாக வேண்டுதல் செய்தார்கள். அதே போல, இன்னல்கள் மத்தியிலே வாழ்கின்ற இன்றைய தமிழினம் முற்றுமுழுதாக ஒன்றுசேர்ந்து முழு மனதோடு கந்தப்பெருமானைக் கைதொழ வேண்டும். எள்ளளவேனும் பிரிவினை இருக்கக்கூடாது. அவ்வாறு ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதனை மனத்திற் கொண்டு எம்பெருமானைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நின்றால் ஆற்றங்கரையான் நிச்சயம் அருள்புரிவான். எமது வேண்டுதலுக்கு இரங்கி அவன் அருள்புரிவான். இந்த நம்பிக்கை எல்லோருக்கும் வரவேண்டும். முற்று முழுதாக எம்மை அவனிடம் ஒப்படைத்தால், தேவர்

சிறைமீட்டுத் திருவருள்புரிந்து சூரனைச் சங்கரித்துத் தம்மைக் காப்பான் என்று நம்பினார்கள். அதனால் வேற்பெருமான் வேதனையைத்தீர்த்து சாதனை புரிந்தான். ஆகவே, தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு எமது குறையைப் போக்க வேண்டுமென்று சந்நிதியான் முருகனிடம் சரணடைய வேண்டும். அவன் உடனடியாகப் புறப்பட்டு வந்து அராஜகத்தை ஒழித்து அருள்புரிந்து காப்பான்.

"கார்மாமிசை காலன் வரிற் கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப்படுவாய்
தார்மார் பவலாரி தலாரியெனும்
சூர்மா மடியத் தொடுவேலவனே"

என்ற கந்தரனுபூதிப் பாடலுக்கமைய நாங்கள் வழிபாடு செய்தால் மயிலாகிய தேரிலே வந்து யமபயம் ஒழிப்பான்

"முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல் தந்துணர் வென்றருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குணபஞ்சரனே."

என்று நாங்கள் அவனுடைய நாமத்தை ஒன்றுசேர்ந்து உச்சரிக்கவேண்டும். இரண்டு கைகள் சேர்ந்தால்த்தான் ஓசை உண்டாகும். தனியே ஒரு கையைத் தட்டி ஒருபயனும் கிடைக்கப் போவதில்லை. 'ஒற்றுமையே பலம்' என்பதை மனத்திற்கொள்ள வேண்டும்.

"விழிக்குத்துணை திருமென் மலர்ப்பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத்துணை முருகாவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத்துணை அவன் பன்னிருதோளும் பயந்த
தனிவழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே"

ஆகவே, கடைசியில் 'கந்தனே காப்பாற்று' என்று கரங்குவித்துச் சிரந்தாழ்த்தி வழிபாடு செய்தால் "பஞ்சம், படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே! ஆறுமுகன் தஞ்சமடி" என்று யோகர் சுவாமிகள் கூறியது போல, முருகனே கதியென்று தஞ்சமடைந்து விட்டால் அவன் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வான். "முருகநாமத்தின் பலன் திருவருளே கிடைக்கும்"... செய்வார்களா?

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நதி ஆலய விகாரி வருடத்து மகோற்சவம் (2019)

30-08-2019 வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 5ந் திருவிழா (03-09-2019) முதல் காலை உற்சவம் நடைபெறும். 10ந் திருவிழா (08-09-2019) ஞாயிற்றுக்கிழமை பூங்காவனமும், 11ந் திருவிழா (09-09-2019) திங்கட்கிழமை கைலாசவாகனமும் நடைபெறும். 12.09.2019 வியாழனன்று சப்பறத்திருவிழாவும், 13.09.2019 வெள்ளி காலை தேர்த்திருவிழாவும், 14.09.2019 சனி காலை தீர்த்தத்திருவிழாவும் மாலை மௌனத்திருவிழாவும் நடைபெறும்.

மாமன்றத்தின் முன்னாள்தலைவர்
அமரர் திரு.வே.பாலசுப்பிரமணியம்
நினைவுப்பேருரை

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் திரு. வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவமெய்திய இருபதெட்டாவது வருட நிறைவின் நினைவாக நடாத்தப்பட்ட நினைவுப் பேருரை, விகாரிவருடம் ஆடித் திங்கள் 18ம் நாள் (03-08-2019) சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு.மாணிக்கம் தவயோகராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணிதப் பேராசிரியரும், விஞ்ஞான தொழிநுட்ப பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமாகிய பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததுடன் "வாழ்வின் ஆதாரங்கள்" என்னும் தொனிப்பொருளில் நினைவுப் பேருரையினையும் நிகழ்த்தினார்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தோற்றம்

யாழ்ப்பாணத்தின் வடபால் தெல்லிப்பழை துர்க்காபுரப் பகுதியில் காங்கேசன்துறைப் பெருந்தெரு வழியே எட்டாவது மைல் கல் தொலைவில் அமைந்திருக்கும் அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம் இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுப் பெருமை கொண்டது. இந்த ஆலயத்தின் பூர்வீக வரலாற்றை நாமும் தெளிந்து நம் வருங்கால சந்ததியினருக்கும் சொல்லித்தருவது நமது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

தொன்று தொட்டு வளரும், பண்பாடு சார்ந்த மக்கள் இலங்கும் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை கொண்டுள்ள பிரிவுகளிலே உழவுத் தொழிலைக் கைக்கொண்டு வரும், உயர் புகழுக்கு வித்தாக கொடைப்பண்பு செறிந்திலங்கும் உழுகுடைப்பகுதி வவுணாவத்தையிலே சைவ மரபிலே வந்தவர் சைவப் பெரியார் கதிர்காமர்.

ஏறக்குறைய 1750ஆம் ஆண்டளவில் கதிர்காமர் இந்தியாவுக்குத் தலயாத்திரைக்காகப் புறப்பட்டு காங்கேசன்துறையில் தோணியேறித் தென் இதியாவின் கீழைக்கரையில் உள்ள வேதாரணியத்திலே கரையிறங்கினார். அவர் அங்கிருந்து பாதயாத்திரையாகச் சென்று பல ஆலயங்களை வழிபாடு செய்துகொண்டு காசித்திருத்தலம் வரை சென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறைய பத்து வருடங்கள் கடந்தன. இக்கால எல்லைக்குள் அவர் தமிழையும் சமஸ்கிருதத்தையும் நன்கு கற்றுத் தேறி ஒரு துர்க்கை உபாசகராகவும் மாறிவிட்டார். அதனால் ஏறக்குறைய 1760ஆம் ஆண்டளவில் தாம் யாழ்ப்பாணம் திரும்பும்போது துர்க்காதேவி யந்திரமொன்றையும், வெண்கலத்தினாலமைந்த 'திருமுகக்கெண்டி' உருவமொன்றையும் கையோடு கொண்டு வந்தார். அன்பர் கதிர்காமர் அவர்கள் காசியில் பலநாள் தங்கியிருந்தார். இந்தியா முழுவதிலுமுள்ள சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள்ளும் காசியிலுள்ள சொப்பனேஸ்வரி பீடம் முக்கியமானது. துர்க்காதேவி சகல கலைகளுடனும் பொலிந்திருக்கும் பீடம் அது. அன்பர் கதிர்காமர் குறித்த யந்திரத்தை அங்கிருந்தே பெற்றிருந்தார் என எண்ணுதற்கு இடமுண்டு.

காசியாத்திரையை முடித்துக்கொண்டு காங்கேசன்துறையை வந்தடைந்த இப்பெரியார் கீரிமலையில் புண்ணிய தீர்த்தமாடி அங்கிருந்து நடந்து மூன்றுமைல் தூரம் இவ்விடம் நோக்கி வந்து கொண்டிருந்தார். திருவருள் அவரது நடையிலே தளர்வைத் தோற்றுவித்தது. ஆயிரக்கணக்கான மைல் தொலைவெல்லாம் நடைகண்ட நம் பெருந்தகையின் ஆற்றலிலே அடங்கிக் கிடக்கும் துர்க்கை அங்கிருந்து கொண்டு அனைவருக்கும் திருவருள் பாலிக்கும் திருக்கருணை கொண்டாள். நடை தளர, உடல் தளர, அண்டியிருந்த இலுப்பைத் தோப்பிலே இளைப்பாறினார். கொண்டு வந்த துர்க்கா சக்கரத்தை அங்கே தாபிக்குமாறு ஆணை பிறந்தது. அவ்வாணையைச் சிரமேல் தாங்கி மரத்தடியிலே சக்கரத்தை அமைத்து வழிபடத் தொடங்கினார். கதிர்காமர் தாம் கொண்டு வந்த யந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் ஸ்தாபனம் செய்து வழிபட்ட இடமே இன்று துர்க்காதேவி தேவஸ்தானமாக வானளாவும் கோபுரங்களும், அலங்கார வளைவு கொண்ட நுழைவாயிலும், அழகிய தெப்பக்குளமும் எழிலூட்டி நிற்கக் காட்சி தருகின்றது. கதிர்காமரின் ஆன்மார்ந்த பூசை நிலையமாயிருந்த இந்த ஆலயம் பரார்த்த பூசைக்குரிய நிலையமாய் இன்று விருத்தி அடைந்தவற்றை மேற்கூறிய செய்தி உணர்த்துகிறது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலோடு இவ்வாலயத்திற்கு ஆரம்ப காலம் முதலே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளதை பழைய ஏட்டுப்பிரதிகள் குறிப்பிடுகின்றன. 1829ஆம் ஆண்டு புரட்டாதி விஜயதசமி தினத்தன்று மாவை முருகன் இவ்வாலயத்திற்கு எழுந்தருளி

வந்து வன்னி வாழை வெட்டும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. இவ்வாலயத்தில் தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் மற்றொரு சிறப்பம்சம் புராணபடனமாகும். வருடம்தோறும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியன கிரமமாகப் படிக்கப் பெற்று வந்துள்ளன. பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வும் இடம்பெற்றுவருகின்றன. புராணபடனம் நிகழ்த்துபவர்களையும் ஓதுவார்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் இங்கு சிறப்பாக நடைபெற்றது.

1948இல் தனி முகாமையாளர் திரு.க.நாகநாதர் அவர்களினால் பதினொரு பேரைக்கொண்ட தர்மகர்த்தா சபையினரிடம் ஆலய பரிபாலனம் ஒப்படைக்கப்பட்டது. 1965இல் உப சபையாக பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு அவர்களே பரிபாலனப் பொறுப்பை ஏற்று நடத்தினர். நிர்வாக சபையினரின் பராமரிப்பில் அன்று முதல் இன்றுவரை ஆலயம் சிறப்பான வகையில் வளர்ச்சிபெற்று வருகிறது. நிர்வாக சபையின் ஏற்பாட்டில் முதலாவது கும்பாபிஷேகம் 1965ஆம் ஆண்டு ஆவணி ஓணத்திலும், இரண்டாவது கும்பாபிகேம் 1981 சித்திரை உத்தரத்திலும், மூன்றாவது கும்பாபிஷேகம் 1997 ஆவணிச் சுவாதியிலும், நான்காவது கும்பாபிஷேகம் 2011 தைத்திங்கள் 10ஆம் நாளிலும் (24.01.2011) சிறப்பாக நடைபெற்றது. முதலாவது நிர்வாக சபையின் தலைவராக அமரர் தியாகராசா அவர்கள் (கல்வி அதிகாரி) சிறப்பாக வழிநடத்தினார். அவரின் பின் அமரர் திரு.து.ஜெயரட்ணம் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர்) வழிநடத்தினார். அவரின் மறைவின் பின் 1977 முதல் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைவராகப் பணிபுரிந்து ஆலயப் பணிகளுடன் பன்முகப்பட்ட சமுதாய சமூகப்பணிகளையும் ஆற்றி வந்தார். இரு ஒரு வரலாற்றுப் பதிவாக இருப்பதுடன், சைவத் தமிழ் உலகத்தினால் என்றென்றும் மதித்துப் போற்றப்படும் பெருமையையும் அம்மையார் பெற்றிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதியன்று அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் ஆலய நிர்வாக சபைத் தலைவராகப் பொறுப்பேற்று, அம்மையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சிறப்பாகச் சேவையாற்றி வருகிறார். இவரது சேவைக்காலத்தின் போது 2011ஆம் ஆண்டு இங்கு மீண்டும் புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது. ஆலயத்தின் முன்பக்கம் புதிய மண்டபம் அமைக்கப்பட்டதுடன் லண்டனிலிருந்து 1200 கிலோ எடையுடைய கண்டாமணி கொண்டுவரப்பட்டு புதிய மணிக்கோபுரத்தில் பொருத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஆலயத்தின் உட்பிரகாரங்கள் பலவித சிற்ப வேலைப்பாடுகளுடன் புதுப்பிக்கப்பட்டன.

தென்திசை வாசல் மற்றும் குபேரவாசல் கோபுரங்கள்

ஆலயத்தின் தென்திசை வாயிலில் புதிய கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு, 2017 தை மாதம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. வடக்கு வாயிலில் அமைக்கப்பட்ட குபேர வாசல் கோபுரத்திற்கான கும்பாபிஷேகம் இவ்வருடம் (2018) தை மாதம் இடம்பெற்றது. மேற்கு வாசல் கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 2018 பங்குனி உத்தர தினத்தன்று இடம்பெற்றது. அம்பாளின் அருளாலும் பக்த அடியவர்களின் பேருதவியினாலும் மேற்கு வாசல் கோபுரமும் 2019 தைத்திங்கள் 16ம் நாள் சிறப்பாக இடம்பெற்றது.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் – விகாரி வருட மகோற்சவப் பெருவிழா

கொடியேற்றம்	: ஆவணி 14ம் நாள்	(31-08-2019) சனிக்கிழமை	முற்பகல்	10.00 மணி
திருமுறைத்திருவிழா	: ஆவணி 16ம் நாள்	(02-09-2019) திங்கட்கிழமை	மாலை	06.00 மணி
திருமஞ்சத் திருவிழா	: ஆவணி 19ம் நாள்	(05-09-2019) வியாழக்கிழமை	மாலை	06.00 மணி
வேட்டைத்திருவிழா	: ஆவணி 22ம் நாள்	(08-09-2019) ஞாயிற்றுக்கிழமை	பிற்பகல்	02.00 மணி
கைலாசவாகனம் வீதிவலம்	: ஆவணி 22ம் நாள்	(08-09-2019) ஞாயிற்றுக்கிழமை	மாலை	06.00 மணி
சப்பறத் திருவிழா	: ஆவணி 23ம் நாள்	(09-09-2019) திங்கட்கிழமை	மாலை	04.00 மணி
தேர்த்திருவிழா	: ஆவணி 24ம் நாள்	(10-09-2019) செவ்வாய்க்கிழமை	காலை	09.00 மணி
தீர்த்தத்திருவிழா (ஆவணி ஓணம்)	: ஆவணி 25ம் நாள்	(11-09-2019) புதன்கிழமை	காலை	08.30 மணி
கொடியிறக்கம்	: ஆவணி 25ம் நாள்	(11-09-2019) புதன்கிழமை	மாலை	06.00 மணி
பிராயச்சித்த அபிடேகம்	: ஆவணி 26ம் நாள்	(12-09-2019) வியாழக்கிழமை	காலை	06.00 மணி
வைரவர் பொங்கல்	: ஆவணி 26ம் நாள்	(12-09-2019) வியாழக்கிழமை	மாலை	03.00 மணி

முகஉத்தர இரதத்தில்
வினையறுக்க எழுந்தருளும்
மாவைக் கந்தசுவாமியார் பேரருள் பொழிக!

(அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரார்த்தனைச் செய்தி)

ஈழத்தின், தொன்மையான, மாவையம்பதியுறை கந்தசுவாமியர் விருப்புடனுறையும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் வளர்ச்சிப்பதையில், 2019ம் ஆண்டு ஓர் முக்கியமான ஆண்டாக அமைகின்றது. பஞ்ச இரதங்கள் பவனிவரும் ஈழத்து ஆலயங்களில், முதன்மையானதாகவும், மாவைக் கந்தசுவாமியாரின் பேரருளாலும், புகழ்பூத்த சிற்பாசாரியார்களின் கைவண்ணத்தில் சிறப்புச் சிற்பங்களுடன், ஈழத்தின் உயரமான சிற்பத் தேராக "முகஉத்தர இரதம்" அமைக்கப்பட்டு, 28-07-2019ந் திகதி வெள்ளோட்டம் கண்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் யுத்தகாலத்திற்கு முன்னதாகவே பஞ்ச இரதங்கள் பவனி வந்தன என்பது மறக்கமுடியாத நினைவுகளாகும். 1990ம் ஆண்டளவில் வலிகாமம் பிரதேசம் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டினுள் வந்ததையடுத்து, ஆலயத்திற்குத் தனிப்பெருமையான சின்னங்களாக விளங்கிய பஞ்ச இரதங்கள், சப்பறம், திருமஞ்சம், கைலாயவாகனம் என்பன முற்றாக அழிவடைந்ததுடன் ஆலயமும் பெருஞ்சேதமடைந்தது.

கந்தபுராணம், இராமாயணம் முதலாய புராண இதிகாசங்களிலே புகழ்ந்துரைக்கப்படுவது ஈழம். அவ் ஈழத்தின் வடபால் சிரசெனச் சைவமுந் தமிழுஞ் செழுமையுடன் விளங்க, அரசோச்சிய புண்ணிய பூமியே யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் வடபால், கடல் மருங்கில், "கண்டகி" என முற்காலத்தே அழைக்கப்பெற்ற கீரிமலைப் புனிதத் தீர்த்தத்து மருங்கிற் கோயில் கொண்டெழுந்தருள்பாலிக்கின்ற, திருத்தம்பலேசுவரி சமேத திருத்தம்பலேஸ்வரப் பெருமானை, குன்மநோயுங் குதிரைமுகமுங் கொண்டவளாகிய, திசையுக்கிரசோழனின் மகள் மாருதப்புரவீகவல்லி என்னும் அரசிளங்குமாரி, சோழநாட்டினின்றும் இங்கு வந்து தங்கித் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனஞ் செய்து, அதன் பயனாக நோயுந்நீங்கி முகம் மாறப்பெற்றாள் என்பது வரலாறு. அவள் தங்கியிருந்த இடம், "குமாரத்தி பள்ளம்" என்றழைக்கப்பட்டதும், இன்று "மாவிட்டபுரம்" என அழைக்கப்படுகின்றதுமாகிய இடத்தில், முருகப்பெருமானுக்குக் கோயில் எடுக்கவெனத் தந்தையின் துணையுடன், ஆலய அமைப்பிற்குத் தேவையான விக்கிரகங்களையும், தொழிலாளர்களையும், அந்தணர்களையும் அனுப்பிச் சிவாகம முறைப்படி ஆலயம் அமைக்கப்பெற்றது. இவ்வாலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் பொ.ஆ.பி. 789ம் ஆண்டிலே நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, ஈழத்து இந்து மக்களின் உன்னத அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் ஆலயங்களில் ஒன்றாக, 16ம் நூற்றாண்டு முதல் 19ம் நூற்றாண்டு வரையிலான அந்நியப் படையெடுப்புகளினால் எண்ணவொண்ணாத அழிவுகளைச் சந்தித்த போதிலுஞ்சரி, 20ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் உள்நாட்டு யுத்தத்தினால் பேரழிவுகளைச் சந்தித்போதிலுஞ்சரி, இறையருளால் மீண்டெழுந்து இன்றுவரை பல்வேறுபட்ட வளர்ச்சிகளைக் கண்டபோதிலும், அன்று திசையுக்கிரசோழனினால் அமைக்கப்பட்ட மூலாலயமானது, இன்றுவரை இம்மியளவும் மாற்றமின்றி அதே சக்தியுடன் திகழ்ந்துகொண்டிருக்கின்றது. அந்தத் தனித்துவமிக்க பழமைவாய்ந்த மூலாலயம் என்றென்றும் அதே பழமையுடன்-சக்தியுடன் பேணப்படவேண்டும் என்பது எமது அன்பான கோரிக்கையாகும்.

இவ் அருட்பெருந் திருப்பணியில் தன்னலம் கருதாது தம்மை இணைத்துக்கொண்ட ஒவ்வொருவருக்கும் மாவைக் கந்தசுவாமியாரின் பேரருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். இறையருள் துணைக்கொண்டு இப் பழம்பெருஞ் சக்திமிகு ஆலயம் மேலும் என்றும் நிலைத்து நின்று இம் மண்ணை - மக்களைக் காத்தருளவேண்டும் என, மாவையம்பதியுறை கந்தசுவாமிக் கடவுளின் பொற்பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.



நல்லைக் கந்தனைக் காதலித்தால் சகலமும் வசமாகும்!

முருகையா பிரணவன்

உலகின் எந்த மூலையிலிருந்தாலும் கந்தனது பெருந்திருவிழாக் காலத்தில் காந்தப் புலத்தை நாடி வரும் இரும்பு போல் நல்லூரில், அவன் பக்தர்கள் ஒன்று சேர்வது கந்தனது அபூர்வமான சக்தியை, இன்றுவரை சுட்டிநிற்கிறது.

அஞ்சத்தெரியாத அஞ்சு வயசு முதலே நல்லைக் கந்தனை நாடி ஓடிய பசுமையான நினைவுகள் நெஞ்சை வருடிச் செல்லும். அதிகாலை 4.30 மணிக்கு எழுந்து, குளித்து, வேட்டி அணிந்து, நடுங்கும் குளிரில் எனது மாமனாருடன், துவிச்சக்கர வண்டியை அவர் செலுத்தும் போதே தனது கணீரென்ற குரலில் பாடும் கந்தன் புகழைக் கேட்டவாறே கந்தனைக் காணச் செல்வதுண்டு. அங்கு அவர் அங்கப்பிரதட்சணம் செய்து முடித்து வந்ததும் தற்போது தீர்த்தக் கேணி அருகே அமைந்திருந்த பழைய கட்டிடத்தையும் அதனுள் அமைக்கப்பட்டிருந்த பழைய இயந்திரங்களையும் பிரமிப்பாகப் பார்த்தவாறே உட்பிரகாரத்தைச் சுற்றி வருவோம்.

பின்னாட்களில் காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றோடி வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தினாலும், பணியாற்றிய சகல இடங்களுமே கந்தனின் விழாக்காலத்தில் அவனடி சேவிக்கத் தடையேதும் சொல்லாதிருந்தது அவனின் அருள்-அழைப்பு என்றே கருதவேண்டியுள்ளது. பொறியியலாளர்களாகட்டும், வைத்தியர்களாகட்டும், சாதாரண பக்தர்களாகட்டும், உலகின் பல பாகங்களிலிருந்தும் அந்த ஒரு மாத காலம் விடுமுறையில் வந்து கந்தனுக்குச் சேவை செய்வதைக் காணும்போது எப்போதுமே ஒருவித சிலிர்ப்பு ஏற்படும். கந்தனுடன் ஒன்றிவிட்ட தொண்டர்களான இளைஞர்களாகட்டும் முதியவர்களாகட்டும் சிறுவர்களாகட்டும், அவர்களுள் எப்போதும் ஒருவித ஒழுங்கும், மரியாதையும் அதைவிட பக்தியும் மேலிட்டு விரவி நிற்கும்.

அன்றைய காலத்தில் மக்கள் உணர்வுபூர்வமாக உறவுகள் ஒன்றுகூடி கால்நடையாகவோ கூடார மாட்டு வண்டில்கலிலோ பல மைல் தொலைவிலிருந்தும் கந்தனிடம் வந்து வழிபடுவதை நேரிற் கண்டிருக்கிறேன். என் நினைவு தெரிந்த நாள்முதல், எந்தக் காலத்திலும் நல்லூர்க் கந்தனின் ஆலயப் பெருந்திருவிழாவை தவறவிடுவதில்லை - கந்தனும் தவறவிடாது காந்தம் போல் ஈர்த்துக் கொள்வான்.

ஒரு வருடத்துப் பெருந்திருவிழா முடிவடைந்த துவண்டு வாடி நிற்பவர்களுக்கு அடுத்த வருடத்துப் பெருந்திருவிழா ஆரம்பிக்கும் மாதம் வந்துவிட்டாலே மனங்களில் ஒருவித தனி உற்சாகமும் விறுவிறுப்பும் பற்றிக் கொள்ளும். ஆண்டுதோறும் நல்லைக் கந்தனை வெவ்வேறு விதங்களில் அலங்கரித்து தாமும் பிறவிப்பயன் பெற்று நம்மையும் அழகனின் அழகில் கிறங்கிப்போக வைக்கும் ஆலயத்தின் நிர்வாக அதிகாரிகளின் எளிமையும் அமைதியும் விழாக் காலங்களில் கார்த்திகை உற்சவத்தின்போது ஆலயத்தின் உள்வீதிகளில் இடம்பெறும் இசைவேள்விகள் முற்றிலும் வேறு ஓர் உலகிற்கு நம்மை இட்டுச் செல்வதை அந்நிகழ்வுகளைப் பார்த்தவர்களுக்கே புரியும். ஆலயத்தின் உள் வீதிகளில் பிரவாகமெடுக்கும் அனைத்துவித இசைகளினதும் ஊற்று அருளெனும் வெள்ளப்பெருக்காகி கேட்பவரை நனைவிக்கும்.

மேலும் அருணகிரிநாதர் உற்சவத்தின்போது ஸ்ரீமான் சயன் குமாரதாஸ் அவர்களதும், சிவஸ்ரீ பிரசன்னா குருக்கள் அவர்களதும் கணீரென்ற குரலில் ஒலிக்கும் திருப்புகழைக் கேட்கும்போது "விழிவழிநீர் சொரிந்து... நெக்குருகி நின்றேன்" என்ற வாசகமே என்நிலையை விளக்க சரியாகப் பொருந்தும். அவர்கள் பாடும் திருப்புகழைக் கேட்க இந்தப் பிறவி ஒன்று போதாது...

பத்தாந் திருவிழாவாகிய மஞ்ச உற்சவத்தன்றுமுதல் சப்பரத் திருவிழா வரை மாலை உள்வீதி உலாவின்போதான , தேவாரபாராயணம், முருகநாம சங்கீர்த்தனம்,, தாள வாத்திய இசை, பஞ்சரத்தின கீர்த்தனம், வேதபாராயணம், பூதநாட்டியம் உள்ளிட்ட பலவேறு இசை நிகழ்வுகளாகட்டும் அதிகாலை வேளைகளில் வசந்தமண்டபத்தில் இடம்பெறும் சிவஸ்ரீ பிரசன்னா குருக்களின் கணீரென்ற குரலிசையமுதமும், சந்தான கோபாலர் உற்சவத்தன்று, மனதின் துயரங்கள் போக்கி ஆத்மாவைக் கந்தன் காலடிகளில் சமர்பிக்கவைக்கும் வேய்ங்குழலிசைபொழிந்து அருள்மழை பெருக வைக்கும் சகோதரியை நினைத்து பார்க்கிறேன். பல ஆயிரம் மைல்களைக் கடந்து வந்து அவனருளை வேண்டி அவனைக் காண வருவதென்பது எதனால்? கந்தன் காந்தமாகி ஈர்ப்பதால் தானே..!

இறுதியாக, தேர், தீர்த்தம் முடிவுற்று மறுநாள் பூங்காவன உற்சவம். ஆம்! அது எம் கந்தனின் மணநாள். ஏதோ நம்வீட்டுக் கல்யாணம் போலவே பரபரப்புடன் அந் நாளை நோக்கிக் காத்திருப்பேன். ஒருபக்கம் பெருந்திருவிழா முடிகிறதே எனக் கவலை, மறுபக்கம் என் கந்தன் என்றும் என்னுடன் என்ற நம்பிக்கை. அன்று காலை முதலே பெண் வீட்டாரின் சடங்குகள் சம்பிரதாயங்கள் வள்ளி அம்மையாருக்கும் தெய்வானை அம்மையாருக்கும் ஆலயத்தின் இரு வேறு பகுதிகளில் நிகழும். தெய்வானை அம்மனுக்கு வைதீக சம்பிரதாயப்படியான சடங்குகளும், வள்ளி அம்மனுக்கு தினைப்புலத்துடன் சம்பந்தப்பட்டதுமான சடங்குகளும் நிகழ்த்தப்படும். மாலையில் ஈரேழு பதினான்கு உலகங்களிலும் அழகனான கந்தன் மணவாளக் கோலம் பூண்டு அமர்ந்திருக்க இருமருங்கும் வள்ளி, தெய்வானை அம்மையர்கள் வீற்றிருக்க அழகனுக்குத் திருக்கல்யாணம் நடைபெறும் காட்சியை என்னவென்பேன்.! எத்துணைப் பிறப்பெடுக்கினும் அவ்வழகிய காட்சி எனக்குமட்டுமின்றி நல்லைக்கந்தனைக் காதலிக்கும் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் பலகோடி புண்ணியத்தைத் தருமென்பது திண்ணம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க நாம் ஒவ்வொரு சுவாசத்திலும் நினைத்துக்கொண்டிருக்கின்ற நல்லூ ர்க் கந்தனுடன் பின்னிப்பிணைந்து விட்ட எந்தன் நினைவலைகளைப் பதிவிட வார்த்தைகளும் போதாது! காலமும் போதாது! இப் பிறவியும் போதாது!

கந்தா வென்றுனை யழைத்தேன் - தேடினேன்
என்னுள்ளே நீ உண்டென் றுணர்த்தினாய்
எங்கு நின்றபோதும் எனை அழைத்து வந்தாய் - வாசலில்
வந்து நின்றே மீண்டும் கந்தாவென் றழைக்கிறேன்
எந்தையு மானவன் நீயெனக்கருள நான்கேட்பது முறையோ
எந்தனுக்கெது நன்மையென அறிந்தருளிக் காத்திடய்யா!

நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் பெருந்திருவிழாக் காட்சிகள்..



HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/51/NEWS/2019

வளர்ந்துவந்த பாதை...





இவ்விதழ் இல. 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.